வாரப் பதிப்பு விலை சதம் 25 — தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம்19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 ஆவணி திங்கள் 6-ம் நாள் (22—8—1965) ஞாயிற்றுக்கிழமை ரபி.ஆகி24 | இதழ் 13

தினமும் பாவியுங்கள்




மில்க் வைற்
நீலச் சோப்
ஒரு கட்டியின் விலை சதம் -/20.

# விலைவாசிகளை உயர்த்த முயற்சி

## வர்த்தகர் சிலரின் சதி நடவடிக்கை

அத்தியாவசியப் பொருட்களுக்கு அனுவசியமாக விலைகளை உயர்த்துவதன் மூலம் வாழ்க்கைச் செலவை அதிகரிக்கச் செய்யும் முயற்சியில் கூட்டாட்சி அனுதாபிகளான வர்த்தகர்கள் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. புதிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நாடு மலிவடைவதைத் தடுத்து, தேசிய அரசாங்கத்தின் பால் மக்கள் கொண்டிருக்கும் நல்லெண்ணத்தை முறியடிக்கவே இந்த முயற்சி நடைபெறுவதாக வர்ணிக்கப்படுகிறது.

அன்றாடப் பாவினைப்பொருட்களின் விலைகளைக் குறைக்க தேசிய அரசாங்கம் ஒரு முயற்சி எடுத்துவரும் இவ்வேளையில் சிலவர்த்தகர்கள்பொருட்களின்விலைகளைக் கூட்டுவதில் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது. வாழ்க்கைச் செலவினைக் குறைத்துவிட பல வழிகளாலும்முயற்சிகள் எடுக்கப்பட்டுவரும் இந்நேரத்தில் நன்கு திட்டமிட்டுச் செயலாற்றும் ஒரு குழு வாழ்க்கைச்செலவினைக் கூட்டுவதற்கு திட்டங்கள் வகுத்துக் கொண்டுவருவதாக நம்பப்படுகிறது.

கூட்டாட்சிக்குழு ஆட்சியிலிருந்த வேளையில் இறக்குமதி உத்தரவுகள் பெற்று வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள், மொத்த வியாபாரிகள் போன்றோரே இத்தகைய குழுக்களில் சேர்ந்து பணி

(9-ம் பக்கம் பார்க்க)

# சகல திணைக்களங்களிலும் தமிழுக்குப் பூரண இடம்

## பண்டிதர் இரத்தினம் பிரேரணைக்கு பாராளுமன்றக் குழு ஆதரவு

நிர்வாக ரீதியாக தமிழுக்கும் உரிய இடம் கிடைப்பதற்கான தீர்மானம் ஒன்று கடந்த வாரம் நடைபெற்ற அரசாங்கக்கட்சிப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஒரு மனதாக எத்தகைய விவாதமுமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்தீர்மானத்தை கிளிநொச்சித் தொகுதிப் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் முன்மொழிந்தார்.


தீர்மானத்தை முன்மொழிந்து திரு. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

'அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழுவின் முதலாவது கூட்டத்திலேயே இலங்கைப் போக்குவரத்துச் சபையினரால் எனக்கு அனுப்பிவைக்கப்பட்ட சிங்களக் கடிதத்தைப் பிரதமரிடம் சுட்டிக்காட்டினேன். இவ்விதம் தொடர்ந்தும் நிகழாமல் தமிழிலேயே தமிழ்பேசும் மக்களுக்கு கடிதங்கள் அனுப்ப ஒழுங்கு செய்யுமாறு பிரதமரிடம் கேட்டிருந்தேன்.

'இப்பொழுது நாலு மாதங்கள் கழித்தும்நிலைமை எவ்விதமும் சீர்ப்படவில்லை. தமிழ்ப் பொது மக்களுக்கு கிடைத்த பல சிங்களக் கடிதங்கள் என்னிடம் உள்ளது.

'தேசிய அரசாங்கம் உருவாகியவுடன், தமிழ் மக்கள் முந்திய அரசாங்கம் மொழித்துறையில் செய்த அநீதிகளும், கொடுமைகளும், கெடுபிடிகளும் உடனே நீக்கப்படுமென எதிர்பார்த்தனர்.

(9-ம் பக்கம் பார்க்க)



இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் டாக்டர் பீம்சென் சச்சார் கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் கொழும்பு மோடி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 'சமாதானத்துக்கு வழி' என்ற தலைப்பின் கீழ் நிகழ்த்திய பேச்சை கேட்பதற்குக் கூடியிருந்த மக்களையும், டாக்டர் சச்சார் உரை நிகழத்துவதையும் படத்திற் காண்க. கூட்டத்திற்கு நீதியரசர் திரு. பி. சிறிஸ்கந்தராசா தலைமை தாங்கினார். [செய்தி 9-ம் பக்கம்]

நித்தம் குளித்து
புத்தம் புது அழகினைப் பெற
ஆசைப்படுகின்றீர்களா?

அப்படியானல்

இன்றே
ஒரு ஐந்து ரூபாய்
அனுப்பிப் பெறுங்கள்

"சருமலங்கார
சஞ்சீவி தைலம்"

(புராண இதிகாச சுவடிகளிலுள்ள அழகு லாவண்ய இரகசியங்கள் புகுத்தப்பட்டது)

இலவச அழகுக் குறிப்பு விளக்கப் பிரசுரத்திற்கு இன்றே எழுதுங்கள்

தயாரிப்பாளர்:

கருணாவதி திசாநாயக்க,
208, கண்டி ரோட், கப்பனை.

போன்: 454



எழுதுவது:
'ஈழத்தரசன்'

தற்கொலை செய்தார் கலைவாணர்

போன்ற

இதுவரை வெளிவராத
சினிமா உலகச் செய்திகள்

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது

நட்சத்திர மண்டலத்தில்
4 X 8 மாதங்கள்

இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலக்கிய வானிற் பறந்தாடும் எழிலார் கொடிகள்

### யூ. எல். தாவூத்

இன்றைய உலகில் எங்கு நோக்கினும் கொடிகள் மலிந்து வருவதைக் காண்கிறோம். ஒவ்வொரு நாட்டிற்கும் தனித்தனிக் கொடிகள்! கொள்கைகளையும், குறிக்கோளையும் விளக்குவதற்குக் கொடிகள்! அரசியற் கட்சிகளுக்கு வெவ்வேறு வண்ணக் கொடிகள்! இயக்கங்களுக்கும் நிலையங்களுக்கும் தனித்தனிக் கொடிகள்! கூட்டங்களிலும், வைபவங்களிலும் கொடிகள்! பச்சைக் கொடி! நீலக் கொடி! சிவப்புக் கொடி! எங்கும் கொடி! எதிலும் கொடி! இவ்வாறு மக்கள் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களிலும் பின்னிப் பிணைந்து, நீக்கமற நிலைத்து வியாபித்துவிட்டன கொடிகள்.

தமிழிலக்கிய வானிலும், காவியம் பாடிய பாவலர் பலர் இத்தகு கொடிகளைக் காட்டி, பறந்தாடும் கொடிகளிற் பல்வேறு கருத்துக்களைப் புகுத்தி எமது நெஞ்சத்தே இன்பத்தேன் பாய்ச் சுவதைக் காணலாம். கவிஞன் கைப்படும் எந்தப்பொருளுமே தனிப்பெருமையைப் பெற்று விடுகின்றது. கல்லிலும், புல்லிலும், மண்ணிலும், மரத்திலும் அழகைக் காண்பவன் கவிஞன். சிறியதொரு பொருளிற் கூட பேருண்மைகளைக் காட்டும் திறன் கவிஞர்க்கே உரித்தான தனிச் சொத்து. புலவர்கள், இயற்கையாக நடைபெறும் நிகழ்ச்சியொன்றின் மீது தமது கருத்தை ஏற்றி தாங்கள் பாட எடுத்துக் கொண்ட நிகழ்ச்சியோடு அதனைப் பிணைத்துக்காட்டும் திறன் அலாதியானது.

இதோ! அசைந்து வரும் தென்றலில் ஆடிவரும் கொடிகளைக் காட்டி நம் உள்ளத்தே உவகைத்தேன் சுரக்கச் செய்கின்றனர் கவிஞர் பெருமக்கள்.

## சிலப்பதிகாரத்தில்

மதுரை மாநகரிலாவது இன்புற வாழலாம் என்று எண்ணிய கோவலன் காதல் மனையாளுடன் அக்காட்டினை நோக்கி வருகின்றான். மதுரையை அண்மி விட்டனர். கோவலன் கொலை செய்யப்பட்ட இடமல்லவா அந்நாடு! பாண்டிய மன்னரின் பெரிய கோட்டையின் மீது பறக்கின்றன கொடிகள். பறந்தாடும் அக்கொடிகளின் வாயிலாக பின்னல் நடைபெறப்போகும் சம்பவங்களையே கூறுமாற் கூறுகிறார் காவிய ஆசிரியர். கோவலனுக்கு நேரப்போகும் ஆபத்து அக்கொடிகளுக்குத் தெரிந்து விட்டது போலும். எனவேதான், 'இந்நாட்டில் உங்களுக்குப் பெரியதோர் ஆபத்துக் காத்திருக்கிறது. இந்நாட்டிற்கு வராதீர்கள். உங்கள் நாட்டிற்கே திரும்பிச் சென்று விடுங்கள்' என்று கூறுவதுபோல அக்கொடிகளும் மறித்துக்கைகாட்டிப் பறந்துகொண்டிருந்தன. இவ்வாறு அசைந்தாடும் கொடியின் செய்கையைத் தனது காவிய நிகழ்ச்சிக்கு ஏற்றதாக ஆக்கிக்கொள்கிறார் இளங்கோ. மேற்போந்த கருத்தினைக் கூறும் பாடல் இது:

'போர் உழந்து எடுத்த
ஆரெயில் நெடுங்கொடி
'வாரல்' என்பன போல்
மறித்துக் கைகாட்ட'!

## கம்ப இராமாயணத்தில்

சிலப்பதிகாரத்தில் வராதீர் என்று அசைந்த கொடி இராமாயணத்தில் 'வாவென்று' அழைக்கும் காட்சியினை நோக்குவோம்.

இராமன், தம்பி இலக்குமணனுடனும், முனிவர் விசுவாமித்திரருடனும் மிதிலைமாநகர் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். 'வில்லொக்கு நுதலும், வேலொக்கும் விழியும், பல்லொக்கு முத்தும்' உடைய அழகின் செல்வி சீதை வாழும் நகரல்லவா அது! அப்போது, அந்நகரின் மணிமாடங்களின் மீது படர்ந்துள்ள கொடிகள் எல்லாம் அசையும் தென்றலில் அடியசைகின்றன: இந்த இடத்தில் தனது கருத்தைப் பொருத்தி விடுகிறார் கவிச் சக்கரவர்த்தி.' சீதை திருமகளின் அவதாரம். அந்த அழகுத் திருமகள் கமலமலரை விட்டிறங்கி வந்து மிதிலையிற் குடிபுகுந்துள்ளாள். அவளது எழிலை அனுபவிப்பதற்குத் தகுதி படைத்தவன் இராமனாகிய நீயேதான். எனவே விரைவாக வந்து அவளை மணம் செய்து கொள்வாயாக' என்று அம்மாநகரின் மடங்களிலுள்ள கொடிகள் எனுங் கரங்கள் அழைக்கின்றன. காற்றிலாடும் கொடிகளிற் கம்பர் தரும் கருத்தினைப் பின்வரும் பாடல் விளக்குகிறது:

'மையறு மலரினீங்கி யான்
செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தாளென்று
செழுமணிக் கொடிக
ளென்னுங்
கைகளை நீட்டியந்தக் கடி
மலர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லைவாவென்
றழைப்பன போன்ற
தம்மா'.

## சீறுப் புராணத்தில்

மக்கத்து மாமேதகை முகம்மது நபியின் வரலாற்றினை சீறுப் புராணம் என்னும் காவியமாய் ஆக்கியளித்த உமறுப் புலவரும் அசையுங்கொடிகளின் அரும் கருத்தினைத் தருகிறார்.

முகம்மது நபி அவர்கள் தமது பிறந்தகமாம் மக்காவை விட்டு வாணிபநோக்கமாக சாம் நகருக்கு வருகிறார். கருமை நிறமுடைய மேகக் கூட்டம் வானிலே தவழ்ந்து அவருக்கு நிழலளிக்கின்றது. அதோ! நகரத்தை நெருங்கி விட்டார் முகம்மது. அப்போது தென்றல் வீசுகிறது. ஆங்கு வானளாவ உயர்ந்துள்ள நெடுநிலை மாடங்களிலும், கூட கோபுரங்களிலும் உள்ள கொடிகள் காற்றின் தாக்கத்தைத் தாங்குவதற்கு இயலாமற் பட்டொளி வீசிப் படபடவெனப் பறக்கின்றன. குவிந்தும், விரிந்தும் ஆடுகின்றன. இந்த இடத்தில், முகம்மது நபியின் வருகையையும், கொடிகளின் அசைவையும் வைத்து இன்பக் காட்சியினைச் சமைத்து விடுகிறார் புலவர் உமர்.

பிற்காலத்தில் புவனம் புகழப்போகும் புனிதர்-இறைதூதரல்லவா இந்நாட்டை நோக்கி வருகிறார். அவரை வரவேற்க வேண்டாமா! ஆனால், சாம் நாட்டு மக்கள் அம்மாமனிதரின் மகிமையினை அறிந்திலர்போலும். அதனாற்றான் இம்மக்கள் அவரை வரவேற்க விரைந்தெழவில்லை. அம்மக்கள் ஆற்ற வேண்டிய கடமையைக் கொடிகள் நிறைவேற்றுவதற்கு முன்வருகின்றன; எங்கள் நாட்டுக்கு வருக! வருக! என்று கரம் விரித்து முகம்மது நபியினை வரவேற்கின்றன. இவ்வாறு, வீசுந் தென்றலில் விரியும் கொடிகள் நடத்தும் வரவேற்பு வைபவத்தை நாமும் கண்டு களிப்பேருவகை எய்துவோம்.

'செவந்த பாதபங் கயநபி
திருநகர்ப் புறத்துக்
கவிந்த கார்குடை நிழலிட
வருவது கண்டு
நிவந்த வெண்சுதைப்
பளிக்குமே னிலை
வயி னின்று
குவிந்த கைவிரித் தழைத்
தபோ லசைந்தன
கொடிகள்'.

## நளவெண்பாவில்

புகழேந்திப் புலவரின் நளவெண்பாவில் இக்கொடிகள் நகரை அழகுபடுத்தும் காட்சியினைக் காணலாம்.

விதர்ப்ப நாட்டில் நளனுக்கும், தமயந்திக்கும் திருமணம் நடந்தேறுகிறது.காதல் மனையாள் தமயந்தியுடன் தனது நிடத நாட்டிற்கு வருகிறான் நளன். நகரை அண்மி விட்டனர். நளனுக்கு, தனது நாட்டின் மாடங்களில் அசையும் கொடிகள் காட்சி தருகின்றன. தனது நாட்டுச் சிறப்பைத் தமயந்திக்கு விளக்கப்போந்த நளன் ஆங்கு கொடிகள் செய்யும் பணியையும் குறிப்பிடத்தவறவில்லை. வான்முட்ட உயர்ந்த மாடங்களிற் பறக்கும் இக்கொடிகள் தான் தூரத்தே வருவோர்க்கு நகரைக் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு கொடிகள் செய்யும் பணியைத் தமயந்திக்குத் தெரிவிக்கிறான் நளன்.

'வான்தோய நீண்டுயர்ந்த
மாடக் கொடி நுடங்கத்
தான்தோன்று மற்றித்
தடம்பதிதான்—
வான்தோன்றி
வில்விளக்கே பூக்கும்
விதர்ப்ப நா
டாளுடையான்
நல்விளக்கே எங்கள் நகர்'!

## முத்தொள்ளாயிரத்தில்

முத்தொள்ளாயிரத்தில் ஒரு காட்சி! பாராளும் மன்னன் பாதையிலே உலாவருகிறான். அவனைச் சூழவுள்ள முரசறைவோர் பல்வேறு ஓசைகளை எழுப்புகின்றனர். அது கேட்ட ஒரு மங்கை இல்லிலிருந்து வெளிவருகிறாள், அரச பவனியை நோக்குகிறாள். அவளது கண்களுக்கு முதலிலே தெரிகிறது ஒரு கொடி. அது கயற்கொடி. அக்கொடியைத் தாங்கியுள்ளது தேர். தேரினுள் வேந்தன். தேரைச் சூழக் களிறுகளும், புரவிகளும். அப்போது அவளுள்ளத்தே காதல் மூளவிடுகிறது. அவள் நெஞ்சத்தில் மன்னன் குடியேறுகிறான். ஒரு நாள் தனிமையிலிருந்து அம்மங்கைதான் கண்ட காட்சியை அசைபோடுகிறாள். மன்னனின் பவனியில் அவள் கண்ட கொடியே முதலில் அவளுக்கு நினைவு வருகிறது. முத்தொள்ளாயிரம் காட்டும் காட்சி இதோ!

'கொடிபாடித் தேர்பாடிக்
கொய்தன்தார் மாறன்
முடிபாடி முத்தாரம்
பாடித்-தொடி உலக்கை
கைம்மனையில் ஓச்சம்
பெறுவனே யானும் ஓர்
அம்மனைக் காவல் உளேன்'

## இராசநாயகத்தில்

இராசநாயகம் பாடிய வண்ணக் களஞ்சியப் புலவரும் ஆடுங் கொடிகளுக்குத் தரும் விளக்கம் வியற்கப்பாலது. சாம் நாட்டை ஆட்சி செய்கிறார் சுலைமான் நபி என்பவர். யமன் தேசத்து இளவரசியான பல்கீஸ் என்னும் எழிலுறு மங்கையைப் பற்றி அறிந்த அவரது உள்ளம் அவளையே தனது இல்லக் கிழத்தியாக்க விரும்பிற்று. ஆனல் மார்க்கம் அவரது காதலுக்குத் தடையாய் நிற்கிறது. பல்கீஸ் முஸ்லிம் மாது அல்லள். உடனே இஸ்லாத்தைத் தழுவுமாறு கேட்டு பல்கீசுக்கு மடல் வரைகிறார். மன்னர் சுலைமானின் சிறப்பினை ஏற்கனவே அறிந்திருந்த பல்கீசும் அவரை மணந்து கொள்வதற்கு விரும்புகிறாள். ஆனல் ஏதோ ஒரு சந்தேகம். சுலைமானின் காதல் தூய்மையானதா என்பதைப் பரிசோதித்துஅறியவிழைகிறாள். பரிசோதனைக்குரிய ஏற்பாடு நடைபெறுகிறது. பரிசோதனையில் சுலைமான் வெல்வரா? தனது 'கனவு' நிறைவேறுமா? என்றெல்லாம் ஏங்கித்தவிக்கிறது அப்பெண் உள்ளம். ஆனல் சுலைமானே எந்தப் பரிசோதனையிலும் வெற்றியீட்டியே தீருவேன், பல்கீஸ் எனக்கே என்னும் திடசங்கல்பத்துடன் சோதனைக்கு ஆயத்தமாகிறார். இக்கட்டத்தில் சாம் தேசத்தின் மாடங்களிலுள்ள கொடிகள் ஆடி அசைகின்றன. அன்று அக்கொடிகளுக்கு என்றுமிலாத பெருமிதம். ஏன் தெரியுமா? 'சுலைமானுக்கும், பல்கீசுக்கும் நிச்சயமாகத் திருமணம் நடந்தேறவே போகிறது. அச்சுப நிகழ்ச்சியைக் கண்டு நானும் ஆனந்தப் பேருவகை எய்தப்போகிறேன்' என்று ஆடிக்களிக்கிறதாம் கொடிகள். கொடிகள் நினைப்பதுபோல அவர்கள் இருவரும் திருமணம் செய்து இன்பந் துய்த்தார்களோ என்னவோ! கொடியின் அசைவு நமக்கு இன்பமளிக்கிறது.

இவ்வாறு, இராசநாயகத்தில் கொடிகளின் களி நடத்தைக்கூறும் பாடல் இது.

'வாடி நின்ற மெல்லிடை
பல்கீஸ் எனுந்திருமானை
நாடி நின்ற நந்நபி மனக்
காட்சி நாங்காணக்
கூடி நின்றது நாமென
ஆனந்தங் குலவி
ஆடிநின்ற போலசைந்தன
கொடியனந்தம்'

இவ்வாறு, வீசுந் தென்றலில் விரிந்தாடி மாடங்களை அலங்கரிக்கும் கொடிகள், கவிஞர்களின் கற்பனைத்திறனால் காயங்களையும் அலங்கரிப்பதைத் தமிழ் இலக்கியங்களிற் காணலாம்.

# வீரம்

### —"அண்ணல்"—

எண்ணத்தைச் சாணக்கி வடித்துக் காய்ச்சி
இதயப்பொன் பாத்திரத்துள் துணிவு என்னும்
கிண்ணத்தால் வார்ப்பதுவே வாய்மை யாகும்
கிலிபயத்தால் முகஸ்துதிக்கு வார்த்தை ஜாலம்
பண்ணுவது ஏமாற்று! பசப்பு வேசம்
பயனற்ற வெறும் வாழ்வு நேர்மை என்றால்
எண்ணுவதை எண்ணியவா றெடுத் துரைத்து
எதிர்ப்பேற்றும் வாழ்வதுவே! அதுவே வீரம்

கண்ணெதிரிற் காண்பாரை வாழை யேற்றிக்
காணாரைத் தூசித்துக் கணத்துக் கொன்றாய்ப்
பொன்னுக்குப் பேசிஎன்ன புகழ்ச்சி யுண்டோ?
புரியாத வெறும்புரட்டு புலவர் கோமான்
தன் நாக்கை அடக்குதலே வெற்றி என்றார்
சலியாமற் பேசுவதில் பணம் இனிப்பர்
புன்னுக்கர் தம்நோக்கில் பிழை உண்டென்று
புகட்டுவதே உயர்கடமை அதுவே வீரம்

விரும்பாத ஒருபொருளைக் கரும்பென் றேற்று
வில்லங்கப் படுவதிலென் பயனு முண்டு?
துரும்பொன்றை நந் தூணென்று சொல்லு வாரைச்
சுவைபாளர் எனப்போற்றுஞ் செயலுக்காக
இரும்பொன்றைப் பொன்னென்று ஏற்பரோ நல்
இலக்குள்ளோர் இயல்பதனை எடுத்துக் காட்டி
வரும்பகையும் வரவேற்று வாழுகின்ற
வாழ்க்கை யதிற்சுவையுண்டு அதுவே வீரம்.

போற்றும் வாய் பொசுக்கு முளம் புதுமைக் காவப்
பொற்பண்பு புரையோடிப் போனபுண்ணை
தோற்கொண்டு மறைக்கின்ற தொழிலை ஏற்றுத்
துளிர்க்கின்ற தூர்மணத்தில் சுகந்தந் தேடிப்
பார்க்கின்ற செயல்கண்டு படம் பிடிக்கிற்
பாய்கின்ற புலியுண்டு பண்பை ஊன்றி
மேற்கொண்டு நெறியுரைக்கும் மேன்மை வாழ்வு
மிகுசிறப்பு, மேதினியில் அதுவே வீரம்.

உள்ளத்திற் சுவையூறி இனிமை சேர்க்கும்
உயிரனைய உரிமை யுணர் நண்பரேனும்
கள்ளத்தால் பாதை தெரிந்தோடுவா ரேல்
பண்போடு வழிகாட்டல் கடமைப் பாடு
வெள்ளத்தில் போக்கினிலே மிதந்து செல்லல்
வேடிக்கை நெறியாய்ந்து மேன்மையான
உள்ளத்தைத் திறந்திடுதல் உணர்ச்சி அற்ற
உலுத்தனுக்கு [illegible] அதுவே வீரம்.

## பேர்லின் மதிலைப் பார்த்தனர்

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுத் தொழிற் சங்க சம்மேளனத்தின் 20-வது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக இங்கு வந்திருந்த இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பேர்லின் மதிலைப் போய்ப் பார்த்தனர்.

எல்லையைப் [illegible] பற்றியும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு செய்துள்ள எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் தூதுகோஷ்டியினர் தகவல்கள் திரட்டிக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். வி. ஆறுமுகம்,
சின்ன நாகவத்தை

கே: நான் என் வாழ்க்கையில் பல துன்பங்களை அனுபவித்து கஷ்டப்படுகிறேன். அதற்கு ஒரு வழி சொல்லுங்கள்?

ப: கஷ்டப்படுவதற்கு வழி எதற்கு? கஷ்டங்களை தவிர்க்க வழி வேண்டுமானால், துணிவைத் தவிர அதற்கு வேறு பரிகாரமே கிடையாது. துணிச்சலே கஷ்டங்களைச் சகிக்கவும் கஷ்டங்களைப் போக்கவும் உதவும்.

ஃ

சு. பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை

கே: வறுமை வளரும் போது ஒருவனுக்கு புத்தி வளருமா அல்லது தேய்ந்து விடுமா?

ப: நிச்சயமாக வளரும். புத்தி வளர்வதாற்தான் அவன் வறுமையை எதிர்த்து போர் நடத்த முடிகிறது.

ஃ

மு. சுவாமிநாதன்,
முல்லைத்தீவு

கே: வியட்நாம் சிக்கலைத் தீர்க்க இந்தியா 'அமெரிக்கா வடவியட்நாமிற் குண்டு வீசுவதை உடன் நிறுத்த வேண்மெ'ன்று கூறுவதை இலங்கையும் ஏற்க வேண்டுமா? இவ்வாறு இந்தியா கேட்பது நியாயமா?

ப: இந்தியாவின் கோரிக்கை நியாயமானதே. வடவியட்நாம் ஒரு தனி அரசு. அந்நாட்டைத் தாக்குவது அந்நாட்டின் மீது யுத்தம் பிரகடனம் செய்வதாகும். வியட்நாம் சிக்கலைப் பற்றி இலங்கை அரசு இன்னும் திட்டவட்டமான ஒரு கொள்கையை வெளியிடவில்லையே!

ஃ

சி. நவரட்ணம், பரந்தன்

கே: படித்துவிட்டு 5 வருட காலமாக பல வகையில் முயற்சித்தும் பலனற்றுப் போய்விட்டது. கானு தேசம் சென்றால் வேலை வாய்ப்பு கிடைக்குமென்றிருந்தேன். அங்கே எதுவித உதவியுமின்றி எப்படிப் போக முடியும்?

ப: கொழும்பிலுள்ள கானு தேசத்தின் தூதராலயத்துடன் தொடர்புகொண்டால் கானுவிலுள்ள வேலை வாய்ப்பு பற்றிய முழு விபரமும் உங்களுக்குக் கிடைக்கலாம்.




ஃ

எம். எம். எ. அப்துல்மஜீது,
நொச்சியகமம்

கே: பெண்கள் படித்து என்ன பயன்? காதல் கடிதங்கள் தானே எழுதுகிறார்கள்.

ப: டாக்டர்களாகவும் அரசியல் வாதிகளாகவும், விஞ்ஞானிகளாகவும், மற்றும் பெரிய பதவிகள் வகிப்பவர்களாகவும் இருக்கும் பெண்கள் எழுதுவதெல்லாம் காதற் கடிதங்கள் தானு? பெண்களைப் போலவே ஆண்களும் காதற் கடிதங்கள் எழுதுகிறார்களே அதுவும் படித்த குற்றம்தானு? உங்களின் கருத்துசரியாக ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்த துருப்பிடித்த கொள்கையாகும்.

ஃ

மு. கருணாநிதி,
ஏழாலை மேற்கு

கே: தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கும் வரை மந்திரிப்பதவியை எடுக்க மாட்டேன் என்று கூறிய பொன்னம்பலம் அவர்கள் இப்போது ஏன் மந்திரிப் பதவியை நாடுகிறாராம்?

ப: ஐ. நா. வுக்கு இலங்கைப் பிரதிநிதியாகச் செல்ல என்று கூறப்படுகிறது. ஐ. நாவுக்குச் செல்வதற்காக மந்திரியாக்கப்படுகிறாரா? அல்லது மந்திரியாக்கப்படுவதற்காக ஐ. நா. வுக்கு அனுப்பப்படுகிறாரா என்ற கேள்விகளுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லையே!

ஃ

ஏ. எஸ். திராவிட மணி,
உந்துகொடை

கே: நான் ஒரு பெண்ணை காதலிக்கிறேன். ஆனால் அவள் என்னைபார்த்து சிரிக்கின்றாள், பேசுவதற்கும் முடியாமலிருக்கிறது கடிதம் கொடுக்கவும் வழியில்லாமலிருக்கிறது. என்னசெய்வது?

ப: காதலிருந்தால் வழி பிறக்கும் உங்கள் மனதிலுள்ள ஆசை காதலாக மாறி வலுவடைந்துவிட்டால் கடிதத் தொடர்புக்கு பல வழிகள் தோன்றும்.

ஃ

எ. டி. ராசா,
மீசாலை தெற்கு

கே: எனது மாச வருமானம் 477 ரூபா. 75¾ சதம். என் வருமானத்தை இன்னும் அதிகமாக்க ஏதாவது வழி கூறுங்களேன்.

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: உங்கள் வருமானத்திற் ¼ சத்தை எனக்கு அனுப்பி வையுங்கள். அதனை நான் இரு மடங்காக்கித் தருகிறேன். அதனால் உங்களின் வருமானம் ரூ. 477.76 ஆக உயர்ந்துவிடும்.

ஃ

கே. சிவகுமாரன்,
கொழும்பு

கே: வடக்கே தேர்தலில் போட்டியிட்டு மண் கவ்விய இரு ஆசிரியர்களுக்கு இ. போ. ச. வில் வேலை கிடைக்கப் போகிறதாமே?

ப: தோல்வியை வெற்றியாக மாற்றும் தந்திரந்தான் இது. தேர்தலில் தோற்றவர்களுக்குப் பதவிகளை வழங்குவது சுதந்திரக் கட்சிக்கும் யு. என். பிக்கும் ஒரு 'பாஷனுகிவிட்டது' மக்களின் முழு ஆதரவையும் பெருத காரணத்தினுற்தான் அவர்கள் தேர்தலில் தோல்வி கண்டனர். அவர்களுக்கு தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் எப்படி பதவி வழங்க முடியும்? இவ் விஷயத்தில் ஜனநாயகம் கண்ணை மூடிக்கொள்கிறதோ!

ஃ

ஞானம், யாழ்ப்பாணம்

கே: திரு. ஜீ. ஜீ. அமைச்சராகப் போகிறாராமே? அப்படியானல் த. கா. மாநாட்டில் பேசிய இராசநாயகம் என்பவர் 'அமைச்சர் பதவி பொன்னரின் காலில் தூசு' என்று கூறியதன் அர்த்தம் என்ன?

ப: 'கிடைக்காவிட்டால் தூசு—கிடைத்தால் கிரீடம்' என்ற கொள்கையைக் கொண்டவர்கள்தான் பொன்னம்பலம் குழுவினர். அமைச்சர் பதவிக்காக பட்ட பாட்டை 'தூசு' மறைத்துவிடாது என்பது இப்பொழுது அம்பலமாகியுள்ளது.

ஃ

மனுமிக்கேல், மூதூர்-1

கே: படித்து அரசாங்க உத்தியோகங்களில் இருக்கும் சிலர் மனிதத் தன்மையற்றவர்களாகவும் காடைத்தனம் உள்ளவர்களாகவும் நடக்கிறார்களே?

ப: ரேஷன் அரிசியில் கல்லும் மண்ணும் கலந்திருப்பதில்லையா? அம்மாதிரித்தான். நல்லவர்கள் மத்தியில் தீயவர்களும் காணப்படுகின்றனர்.

கே: தேசிய அரசாங்கம் ஏற்பட்டபின் காகிதத் தட்டுப்பாடு இல்லை. ஆகவே பத்திரிகைகளின் (சுதந்திரனுட்பட) விலைகளை குறைத்தாலென்ன?

ப: காகிதத் தட்டுபாடு இல்லை என்று யார் சொன்னது? கடுதாசியைப் பொறுத்த வரையில் நிலைமையில் மாறுதலில்லை. பத்திரிகைகளுக்கு விளம்பர வசதி கொஞ்சம் அதிகம் அவ்வளவுதான்.

ஃ

பொன் கென்னடி,
யாழ்ப்பாணம்

கே: வட, தென் வியட்நாம் நிலைமை வரவர மோசமாகி வருகிறதே அதே வேளை காஷ்மீர் எல்லையும் அசாம் லடாக் பகுதியிலும் நெருக்கடி. மோசமாகிறதே! இதற்செல்லாம் யார் காரணம்?

ப: எல்லாம் சீனுவின் திட்டந்தான். தென் கிழக்காசியாவை விழுங்கும் திட்டத்தின் ஒரு பகுதிதான் இது.

கே: சீனர்கள் பெரும்பான்மையாக கொண்ட சிங்கப்பூர் தனி நாடாக பிரிந்துவிட்டதே. இது ஆசியாவில் மற்றுமொரு கியூபாவாக மாறுமா குயுக்தியாரே.

ப: தற்பொழுது அந்த நிலை இல்லை. எதிர்காலத்தில் உருவாகலாம். சிங்கப்பூர்ப்பிரதமர்கொம்யூனிஸ்டு எதிர்ப்பாளர். ஆனல் ஒரு சோஷலிஸ்ட் என்பதை நாம் மறப்பதற்கில்லை.

ஃ

க. ஆறுமுகம், கந்தரோடை

கே, உலகுக்கு சர்வாதிகாரமா சனநாயகமா தேவை என்பதை முடிவு கட்டும் பொறுப்பு யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. பொன்னம்பலத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக திரு. சிவசிதம்பரம் கூறித்திரிகிறரே, இதில் உண்மை உண்டா?

ப: உலகம் தன்கைக்குள் அடங்கியிருப்பதாகக் காட்டிக்கொள்ளும் அகம்பாவப் பேச்சுதான் இது. இலங்கையில் சர்வாதிகாரமா, சனநாயகமா என்பதை தீர்த்துவிட்டார்-அடுத்து உலகத்தில் சர்வாதிகாரமா, சனநாயகமா என்பதைத் தீர்க்கப் போகிறாராக்கும். ஐ. நா. போய் வந்தவுடன் அதையும் தீர்த்துவிடுவார். அதனையடுத்து மனிதர்கள் கண்டுபிடிக்க முயற்சி செய்யும் சந்திரமண்டலத்திலும் அதன் பின் செவ்வாய்க் கிரகத்திலும் சர்வாதிகாரமா, சனநாயகமா என்பதைத் தீர்க்க வான வெளிக்கு கிளம்பிவிடுவாராக்கும்! எல்லாம் சுத்த ஹம்பக்.

ஃ

அரசு, யாழ்ப்பாணம்

கே: பீட்டர் கெனமனும், அனில் முனசிங்காவும் யாழ். நகர் வந்து தமிழ் பேசும் மக்களுக்காகப் பரிந்து பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்களே?

ப: தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பேசுகையில் அவர்களுக்குப் பரிந்து பேசாமல் அவர்களை எதிர்த்தா பேசுவார்கள்?

ஃ

கண்ணையா, சங்கானை

கே: சோசலிச அரசாங்கத்தின் மூலமே மொழிப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண முடியும் என்று முன்னுள் போக்குவரத்து அமைச்சர் அனில் முனசிங்கா யாழ்ப்பாணத்தில் கூறியதை நம்பலாமா?

ப: நம்பாதீர்கள்! சோஷலிசமே ஒரு கானல் நீர். அது எங்கே வரப்போகிறது? மொழிப் பிரச்சினை எங்கே தீரப்போகிறது? 'சோஷலிசம்—சோஷலிசம்' என்று கூறி சிறுபான்மை மக்களைப் படுத்தியபாடு போதும் போதுமென்றாகிவிட்டது! அத்துடன் சோசலிசமும் போதுமென்றாகிவிட்டது! பிரச்சினைகள் தீரும் வரையாவது அந்தச் சோஷலிச பூதம் வராதிருக்கட்டும்.

ஃ

வி. செல்வநாயகம்,
கரவெட்டி

கே: கடந்த பாராளுமன்ற காலத்தில் பேருடனும் புகழுடனும் விளங்கிய உடுப்பிட்டியாரின் பெயர் இப்பொழுது மங்கி மறைந்துவிட்டதே. காரணம் என்ன?

ப: தமிழரசுக் கட்சியை ஆதரித்து நின்றதற்கும் எதிர்த்து நிற்பதற்குமுள்ள வித்தியாசம்தான் காரணம். ஆதரித்தால் புகழ் தன்னைதேடிவரும். எதிர்த்தால் உள்ள புகழும் மங்கி மறையும்.

## எது விருத்தி?

பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் பொது மக்களை ஈடுபடுத்துவதற்கான திட்டம் ஒன்றினை பிரதமர் டட்லி ஆரம்பித்து வைக்கிறார்.

—செய்தி

இனிமேல்தான் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படப்போகின்றன என்ற செய்தியைகூட்டாட்சி கட்சிகள் வன்மையாக எதிர்க்கின்றன. அவர்கள்தான் முதன் முதலில் முற்போக்கான திட்டங்களைப் போட்டார்களாம். அவற்றையெல்லாம் பிற்போக்கானவையாக்கி விடுவதாக இச்செய்தி இருக்கிறதாம்

## ஊடல்

தேசிய அரசாங்கம் அமைந்த பின்னரும் தங்கள் பொருளாதார உதவிகளை இலங்கைக்குத் தொடர்ந்து செய்யப்போவதாக கொம்யூனிஸ்ட் நாடுகள் கூறியுள்ளன.

—செய்தி

இலங்கையிலுள்ள கொம்யூனிஸ்டுகள் இந்நாடுகளுடன் தாங்கள் இதுவரை கொண்டிருந்த உறவுகளை முறித்துவிட்டப் போகின்றனராம். தங்கள் எதிரிகளுக்குத் தங்கள்



நண்பர்கள் உதவுவதை, அவர்களால் சகிக்க முடியவில்லையாம்.

## நாற்றப் பிரச்சினை

இன்றுள்ள கருவாட்டு வினியோக முறையினைத் திருத்தி அமைக்க ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

—செய்தி

நாற்றமெடுக்கும் இப்பிரச்சினை இனிமேலும் நாற்றமெடுக்காமல்பார்த்துக் கொள்ளுவார்களாக.

## புரிந்தது பொருள்

சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் வரவு செலவுத் திட்டத்துக்குச் சாதகமாக வாக்களிப்பார்கள்.

—செய்தி

அடடே சுதந்திரம் என்ற சொல்லுக்கு உண்மையான பொருள் அவர்களுக்கும் தெரிந்துவிட்டது போலிருக்கிறதே!

## எத்தனை காலோ?

எலிகள் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களை நன்றாக ஆக்கிரமித்துள்ளன. ஆகவேதான் நட்டங்கள் ஏற்பட்டுள்ளன.

—செய்தி

நாலுகால் எலிகளா அல்லது இரண்டு கால் எலிகளா என்று ஒரு சந்தேக நபர் குறுக்குக் கேள்வி கேட்கிறார்.

## நமக்கென்ன ?

ஏற்கனவே செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி அதிகாரிகள் பதவி உயர்வுகள் வழங்காவிட்டால் மக்கள் வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வர்.

—செய்தி

"மக்கள் வங்கி தானே? தாராளமாகச் செய்துவிட்டுப் போகட்டும்" என்று புறக்கோட்டைத் தெரு சுற்றி நாய்களின் சங்கம் உதாசீனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.


## 'மாய ஜோதி' ஊது பத்திகள்

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!
ஏன்?

★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தாமதம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
நா. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் இந்த சிங்கள சோசலிசம்

## வடையும், நல்லெண்ணெயும் வடக்கே மணக்கவில்லையாம்

'அரசாங்கக் கட்சியினர் இந்நாட்டை மட்டுமல்லஎதிர்க்கட்சி ஆசனங்களையே தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் காங்கிரசுக்கும் விற்றுவிட்டார்கள்' என்று பச்சை வகுப்புவாதத்தை நாலு திங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் கொட்டிய கொழும்பு மத்திய தொகுதியின் மூன்ருவது உறுப்பினரும் இலங்கைக்கம்யூனிஸ்டுக் கட்சியின் பெருந்தலைவர்களில் ஒருவருமான திரு. பீட்டர் கெனமன் கடந்த வாரம் யாழ். நகர் சென்று தமிழ் பேசும் மக்களுக்காக பரிந்து கண்ணீர் வடித்துள்ளார்.

திரு. கெனமனுடன் கூடச் சென்ற அகலவத்தைப் பிரதிநிதியும் முன்னுள் கூட்டரசாங்க போக்குவரத்து அமைச்சரும் அதிதீவிர சிங்கள வாதியுமான திரு.அனில் முனசிங்கா 'சோசலிச அரசாங்கத்தின்மூலமேமொழிப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண முடியும்' என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். ஆனுல் இவர்களில் யாரும் 'மொழிப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு' என்ன என்பதைக்கூறவில்லை. அதை அவர்களால் கூறவும் முடியாது.

### தீவிர வாதம்

சமத்துவ சமதர்மவாதம் பேசிய இடதுசாரிகள் கடந்த சில ஆண்டுகளாக சிங்கள வாதிகளாக மாறியிருப்பது நாடறிந்ததே. இந்தச் சிங்கள வாதிகள் கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் அதிதீவிர சிங்களவாதிகளாக மாறி, சிங்களப் பகுதிகளில் தினமும் எழுப்பிவரும் தமிழ் எதிர்ப்புக்குரல் நாட்டின் நாளைய நிலை எப்படியிருக்கும் என்ற கேள்விக் குறியைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த சிலஆண்டுகாலமாக சிங்கள வாதம் பேசிவந்த இந்த இடது சாரிகள், கூட்டரசாங்கம் உருவாகியதும் தங்கள் சிங்கள வாதத்தைச் செயலிலும் காட்ட முற்பட்டார்கள். கூட்டரசாங்கம் இறுதியாகச் சமர்பித்த அரியணை உரையில் இந்நாட்டின் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாக இருக்கும் சட்டங்களையும் தகர்த்தெறிய திட்டம் வகுத்தனர்.

### அவர்கள் காலத்தில் ......

கூட்டரசாங்கம் தோன்றி டாக்டர் பெரேராவும் அவர் கூட்டாளிகளான அனில் முனசிங்கா, சம்ளி குணவர்தன போன்றவர்களும் அமைச்சரவையில் உறுப்புரிமை பெற்றிருக்கும் பொழுது சாத்திரி—சிறிமாவோ உடன்படிக்கை தோன்றியது. கட்டாய நாடு கடத்தலும், தனித் தொகுதி முறையும் இதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டன. இதுதான் தமிழ்பேசும் மக்களுக்காகப் பரிந்து பேசும் இடதுசாரிகள் தங்கள் பதவிக்காலத்தில் மலைநாட்டுப் பாட்டாளிகளான தமிழ் பேசும் தொழிலாளருக்குச் செய்த கைங்கரியம்.

சிங்களம் மட்டும் சட்டம் என்று மில்லாத முறையில் கூட்டரசாங்க காலத்தில் தீவிரப்படுத்தப் பட்டது. தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு கட்டாய ஒய்வு வழங்கப்பட்டது. சில தமிழ் ஊழியர்கள் சேவையில் இருந்து வெளியேற்றப் பட்டார்கள். தமிழ் மொழி மூலம் கருமம் அற்றி வந்த திருமலை நகராண்மைக் கழகம் போன்ற உள்ளூராட்சி மன்றங்கள் பல வழியிலும் இன்னலுக்குள்ளாக்கப் பட்டன. திருமலை நகராண்மைக் கழகத் தலைவரை கூட்டரசாங்க அமைச்சர் கொழும்புக்கு அழைத்துச் சிறுமைப்படுத்தினுர். இதுதான் இடதுசாரிகளின் கூட்டரசாங்கம்செய்த 'நன்மைகள்'

### தேர்தல் முடிந்தபின்...

நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ்எதிர்புக்கோஷம் சிங்களப் பகுதிகளில் இடதுசாரிக் கூட்டணியினரால் ஓரளவு எழுப்பப் பட்டது. பொதுத்தேர்தல் முடிந்ததும் ஆட்சி அமைக்கும் அளவிற்கான பெரும் பான்மைப் பலம் எந்தக் கட்சிக்கும் இருக்கவில்லை. இந்த நிலையில் பதவி வெறிகொண்ட இடதுசாரித் தோழர்கள் தமிழரசாரை ஏமாற்றபல திட்டங்களைப் போட்டார்கள்.

தமிழரசார் கேட்கும் உரிமைகள் அனைத்தையும் வழங்குவதாகவும் கூறினுர்கள். ஆனுல் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இவர்களிடம் சூடு கண்ட தமிழரசார் இவர்களின் சூழ்ச்சித் திட்டத்திற்கு இடங்கொடுக்க மறுத்தனர்.

தமிழரசாரின் ஆதரவு கிடைக்கவில்லை யென்பது திட்டவட்டமாகத் தெரிந்ததும் பசுத்தோல் போர்த்திருந்த புலிகளான இந்த இடதுசாரிகள்பசுத்தோலைத்

**பூங்குன்றன்**

தூக்கித் தூர வீசினுர்கள். வகுப்புவாதத்தைக் கட்டவிழ்த்து விடத் தொடங்கினுர்கள்.

### வழியனுப்பு வைபவம்

இடதுசாரிகள் ஏற்படுத்திய இந்த சூழ்நிலையால் அந்த வாரம் பூராவும் நாட்டில் ஒரு பதட்ட நிலை ஏற்பட்டது. எந்த நிலையிலும் 1958ம் ஆண்டுபோன்ற ஒரு சூழ்நிலை தோன்றலாம் என்று அரசியல் அவதானிகள் நம்பினுர்கள். ஆனுல், பொலீசார் மிகுந்த கண்காணிப்புடன் இருந்தமையால் இடதுசாரிகளின் திட்டம் நிறைவேற முடியாது போய்விட்டது.

தேசிய அரசாங்கம் உருவாகி திரு. டட்லி சேனநாயக்கா பிரதமராகப்பதவியேற்றபின்னர் அலரிமாளிகையைவிட்டு கொரகொல்லைக்கு திருமதி சிறிமாவோ செல்லுகையில், இடதுசாரிகளின் ஆதரவுடன் நடைபெற்ற வழியனுப்பு ஊர்வலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் இந்நாட்டில் உள்ள ஒவ்வொரு தமிழ்பேசும் மகனையும் ஆத்திரம் கொள்ளச் செய்வதாகவே இருந்தன.

### பாட்டாளி தினத்தில் கூட்டாளிகள் கோஷம்

பாட்டாளிகளின் தினமான மேதினத்தன்று தலைநகரில் நடைபெற்ற ஊர்வலத்தில் இடதுசாரிக் கட்சிகளின் பெரும் தலைவர்களே 'வடை, நல்லெண்ணை' என்ற கோஷங்களை எழுப்பினுர்கள். அன்றைய கூட்டத்தில் உரை நிகழ்த்திய டாக்டர் என். எம். பெரேரா 'உண்மையான பௌத்தர்கள் இந்த அரசாங்கத்தை (தேசிய அரசாங்கத்தை) நீண்டநாளைக்குப் பதவியில் இருக்கவிடக் கூடாது' என்ருர்.

இதுபோன்று இடதுசாரிக் கட்சிகளின் வகுப்புவாத நடவடிக்கைகளை எடுத்து விபரிப்பதென்ருல் அது அனுமன் வால் போன்று செல்லக் கூடியதாக உள்ளது. இந்த நிலையில் தோழர் அனில்முனசிங்கா 'வடை, தோசை, நல்லெண்ணை' என்ற கோஷங்கள் யாரோரா ஆத்திரத்தில் எழுப்பியதுவென்றும், அது இவ்வளவு பெரிய சம்பவமும் அல்ல என்கிருர்.

### வகுப்புவாத தினசரிகள்

இன்றும் இடதுசாரிகள் தங்கள் வகுப்புவாதக் கூச்சலை நிறுத்தவில்லை. முன்னைய வகுப்புவாதிகள் தீவிர சிங்களவாதம் பேசினுர்கள். இன்றைய வகுப்புவாதிகளான இடதுசாரிகள் தீவிர சிங்களபௌத்தம்பேசுகிருர்கள். இந்த நிலைக்கு இடதுசாரிகளின் வகுப்புவாதக் கோஷம் வளர்ந்திருக்கிறது.

இத்தனை தீவிர வகுப்புவாதம் பேசும் தோழர்கள்தான் யாழ். நகர் சென்று தமிழர்களுக்காகப் பரிந்து பேசுகிருர்கள். இவர்கள் தமிழர்களுக்காகப் பரிந்துபேசத் தேவையில்லை- அவர்களின் சிங்களத் தினசரிகளான 'அத்தா'விலும், 'ஜனசக்தி'யாவிலும் வெளியாகும் வகுப்புவாதப் பிரச்சாரத்தின் வேகத்தைச்சற்று குறைத்தாற்போதும்.

அரசாங்க ஊழியர்கள் சம்பந்தமாக அமைச்சரவை எடுத்த முடிவு திருப்திகரமானது அல்ல என்று தமிழ் ஊழியர்கள் கொதிக்கிருர்கள். இதுபற்றி தமிழரசுவட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன. ஆனல், 'அத்தா'வும், 'ஜனதின'வும் 'சிங்களம்மட்டும் சட்டம் அழிந்தது' என்று செய்தி வெளியிட்டுள்ளன. இப்பத்திரிகைகளின் பிரச்சாரத்தால் தேசிய அரசாங்கம் வேகமாகச் செயற்படமுடியாது இருக்கிறது.

### ஓநாய் அழுததாம்

இந்தநிலையில் இடதுசாரித் தோழர்கள் யாழ்ப்பாணத்தில் சோசலிச அமைப்புப் பற்றிப் பேசினுர்கள். அதில்தான் தமிழர்களுக்கு உரிமை கிடைக்குமாம். பட்டதெல்லாம் போதும் இனித் துயரம் படமுடியாது பௌத்த சிங்கள முதலாளித்துவ சோசலிச அமைப்பில்.

யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருந்த பல்கலைக்கழகக் கிளைபற்றியும் இந்தத் தோழர்கள் பேசினுர்களாம். அதுபற்றி தென்னிலங்கைத் தலைமைக்கு காவடிதூக்கும் வட இலங்கைத் தோழர் ஒருவரும் கூட அறிக்கை விட்டிருக்கிருர். இவர்களின்செயல் 'ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத' கதைபோல் இருக்கிறது.

### கர்த்தாலை நடாத்தியவர்கள் யார்?

அரிசிக் கர்த்தால் நினைவு தினக்கூட்டத்தை வட பகுதியில் நடாத்த தோழர்களுக்கு என்ன அருகதையிருக்கிறது? அன்று தமிழ்ப்பகுதிகளில் கர்த்தாலை வெற்றிகரமாக நடாத்தி முடித்தவர்கள் தமிழரசார். தமிழரசார்இல்லாது எங்ஙனம் கர்த்தால் நினைவுக் கூட்டம் நடாத்த முடியும்?

ஆனுல் காலம் மாறிவிட்டது. அரிசிக்கர்த்தாலை 1953ல் நடாத்தும்பொழுது அமைச்சராக இருந்த திரு. ஆர். ஜி. சேனநாயகாவும் இன்று இடதுசாரிகளுடன் சேர்ந்துவிட்டாரல்லவா? எனவே கர்த்தாலை உண்மையில் நடாத்த உதவியவர்கள் இக் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியுமா?

இடதுசாரிகள் தீவிர சிங்கள பௌத்த வாதிகளாக மட்டுமல்ல அவர்களின்அடிப்படை இலட்சியமான மார்க்சிய தத்துவத்தையே மாற்றிவிட்டார்கள். இன்று அவர்கள் தீவிர வகுப்புவாத முதலாளிகள். இன்றேல் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா போன்றவர்கள் எங்ஙனம் அவர்களுடன் சேர முடியும்? தீவிர பௌத்த சிங்கள முதலாளித்துவ வாதம் தமிழ் பேசும் மக்களுக்கு தேவையற்றது.

## இராசமாணிக்கம் கனடா செல்கிருர்



பட்டிருப்புக் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சிமுன்னுட் தலைவருமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் இம்மாதம் 27-ம் திகதி கனடா செலவிருக்கிருர். கனடாவிலுள்ள ஒட்டவா நகரில் நடக்கவிருக்கும் சர்வதேசப் பாராளுமன்றக் குழு மாநாட்டில் கலந்து கொள்ளவே திரு. இராசமாணிக்கம் செல்கிருர்.

இம்மாநாட்டிற்கு இலங்கையிலிருந்து திரு. ஈ. எல். சேனநாயக்கா தலைமையில் செல்லும் பாராளுமன்றக் குழுவில் திரு. விமலசேன செனட்டர் அஸீம் ஆகியோரும் செல்லவிருக்கின்றனர்.

செப்டம்பர் மாதம் 8-ம் தேதி தொடக்கம் 17ம் தேதி வரை ஒட்டவாவில் இம்மாநாடுநடைபெறுகிறது. 'ஆயுத ஒழிப்புக்கும் சமாதானத்துக்கும் உழைக்கும்சர்வதேச கூட்டணிக்கான கருவியே— ஐக்கிய நாடுகள்சபை' என்ற பொருள் பற்ற திரு. இராசமாணிக்கம் இம்மாநாட்டில் பேசுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளார். உலகனைத்துமுள்ள பாராளுமன்ற ஆட்சி நடாத்தும் நாடுகள் அனைத்தும் இம்மாநாட்டுக்குப்பிரதிநிதிகளை அனுப்பிவைக்கும். இச்சர்வதேச அரங்கில்இலங்கைத் தமிழரசுப் பிரதிநிதி ஒருவரின் குரலும் ஒலிக்கும்.

வெவ்வேறு நாடுகளில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்றக் குழு மாநாடுகளுக்கு ஏற்கனவே திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வி. என். நவரத்தினம், திரு. வி. ஏ. கந்தையா, திரு. என். ஆர். இராசவரோதயம் முதலானேர் போய் வந்துள்ளனர். இம்முறை திரு. இராசமாணிக்கம் செல்கிருர். 1955ம் வருடம் திரு. இராசமாணிக்கம் ஜப்பான் தலைநகரான டோக்கியோவில்நடைபெற்ற கிழக்கு ஆசிய நாடுகளின் கிராமாபிவிருத்தி மாநாட்டுக்குப் போய்த் திரும்பியுள்ளார். இம்முறைப் பிரயாணத்தில் ஒரு வாரம் இங்கிலாந்தில் களிக்கவிருப்பதாகவும், ஒட்டவா மாநாட்டின் பின்னர் அமெரிக்கா செல்ல விரும்புவதாகவும் தெரியவருகிறது.

உங்களுக்கோ அல்லது உங்கள் உறவினருக்கோ

துன்பமோ, துயரமோ, துக்கமோ, கரச்சலோ, கஷ்டமோ, கண்டு பிடிக்க முடியாத நோய்களோ, காதல் விவகாரமோ, விவாக இடையூறே, குடும்ப சச்சரவோ, உத்தியோக பிரச்சினையோ, எதிரிகளின் தொல்லையோ

எதுவானுலென்ன

தேவ அருளினுலும், மந்திர பலத்தினுலும், ஞான சக்தியினுலும் நிறைவேற்றித்தர முடியும்.

இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது

எழுதுங்கள் அல்லது நேரில் சந்தியுங்கள்.

மகா மாந்திரீக கலாநிதி

பி. எம். திசாநாயக்க

103, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மருதானை — கொழும்பு.

கடிதங்கள் கம்பனி விலாசத்திற்கே எழுதப்பட வேண்டும்.

ஞாயிறும், திங்களும் இருக்கும் விலாசம்:

அருத எண்ணெய் தொழிலகம் கம்பனி.

போன்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கே நியமனமாம்

'ஏழு கட்சி கூட்டரசாங்கத்தில் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் திரு. திருச்செல்வம் உள்ளூராட்சி மன்றங்கள் சம்பந்தப்பட்ட எல்லா பதவிகளுக்குமே தமிழர்களை நியமனம் செய்து வருவதாகத் தெரிகிறது. ஸ்தலஸ்தாபன கமிஷனர் பதவிக்கும் ஒரு தமிழரே நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்' என்று 'ஜனசத்திய' என்னு வாரப்பத்திரிகை (15-8-65) எழுதியுள்ளது.

## அமைச்சர் மீது 'எத்த' பாய்ச்சல்

'தெகிவல—கல்கிஸ்ஸ வீட்டுக்கூலி கட்டுப்பாடு சபையின் தலைவர் பதவியை வகித்த திரு. எச். ஈ. எஸ். விக்கிரமரத்னவின் பதவி காலம் முடிவுற்றதால் ஏற்பட்டகாலி ஸ்தானத்துக்கு தெகிவல—கல்கிஸ்ஸ நகர சபை எல்லைக்கு வெளியே வசிக்கும் திரு. எஸ். பி. எம். இராஜேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தெகிவல—கல்கிஸ்ஸ எம். பி. திரு. எஸ். டி. எஸ். ஜயசிங்கா திரு. விக்கிரமரத்தினவையே மீண்டும் நியமிக்கும்படி கேட்டுக் கொண்டும்கூட அதற்கு மாறாக திரு. இராஜேந்திரன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கொழும்பு வீட்டுக் கூலி கட்டுப்பாடு சபையின் தலைவர் பதவிக்கு திரு. ராஜகருணவுக்குப் பதிலாக ஒரு தமிழரை நியமிக்கப் போவதாகவும் அறியப்படுகிறது.

வீட்டுக்கூலி கட்டுப்பாடு சபையின் கூலி நிர்ணயக் குழுவில் தலைவராயிருந்த திரு. எதிரிவீராவுக்குப் பதிலாக திரு. பார் குமாரகுலசிங்கம் நியமிக்கப்பட்டாரெனினும், அவர் அகால மரணமடைந்ததால், அந்தப் பதவிக்கு மற்றொரு தமிழரை நியமிக்கப்போவதாகக்கூறப்படுகிறது' என்று 'ஜனசத்திய' மேலும் குறிப்பிட்டுள்ளது.

## அரிசி வெட்டுக்கு வாக்குறுதியாம்!

"வரவு—செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு சில நாட்களுக்குப் பிறகு அரிசிப் பங்கீடு குறைப்பது பற்றி பரிசீலனை செய்வதாக யு. என். பி—தமிழரசு அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளுக்கு வாக்குறுதி அளித்துள்ளது.

"அந்த வாக்குறுதி அடங்கிய கடிதத்தில் நெல் உற்பத்திக்கு வழங்கப்படும் மானியமும் கல்வி, சுகாதாரம் ஆகியவைகளுக்கான செலவுகளும் குறைக்கப்படுவது பற்றி பரிசிலனைசெய்யப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

"நிதிமந்திரி திரு. வன்னியநாயகாவும், மத்திய வங்கி அதிபர் திரு. ராஜபதிரணவும் கையெழுத்திட்ட வாக்குறுதிகள் அடங்கிய இந்தக் கடிதம் ஜூன் 3-ந் திகதி சர்வதேச நாணய நிதிச் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது."

—ஜனமத்தய (13-8-65).

## "சிங்களத்தின் இடத்தை தமிழ் பிடிக்கிறது"

"சிங்களத்தை அரசகரும மொழியாக அமுல் நடத்தியதிலும் பார்க்க அதிக வேகத்துடன் அதனை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செயலற்றுப் போகச் செய்யும் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடத்தப்பட்டு வந்த சிங்களத் தேர்ச்சி வகுப்பு நிறுத்தப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசங்களில் அலுவலகங்களில் கடமையாற்றிய சிங்கள எழுதுவினைஞர்களுக்குப் பதிலாக தமிழ் எழுதுவினைஞர்கள் துரிதமாக நியமனம் செய்யப்படுகின்றனர். கடிதப் போக்குவரத்துகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் நடைபெறுகின்றன." இவ்வாறு "எத்த', (16-8-65) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:-

வடக்கு, கிழக்குமாகாணங்களில் ஈராண்டுகாலத்துள் தமிழ் நிர்வாகமொழியாக ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால், அமைச்சர் பதவியிலிருந்து விலகிவிடுவதாக அமைச்சர் திரு. திருச்செல்வம் பயமுறுத்தியதின் விளைவாகவே மேற்கண்ட நிலைமை ஏற்பட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் நம்புகின்றன.

மட்டக்களப்புகச்சேரி, நீதிமன்றங்கள், சிறைச்கூடம், சுகாதார இலாகா அலுவலகம் மற்றும் அரசாங்க அலுவலகங்களில் நடைபெற்று வந்த சிங்களத் தேர்ச்சி வகுப்பு நிறுத்தப்பட்டுவிட்டது. மட்டக்களப்பு சென்ட். மைக்கில் கல்லூரியில் நடைபெற்றுவந்த வங்கி ஊழியர்களின் சிங்களப் போதனையும் நிறுத்தப்பட்டுவிட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க அலுவலகங்களில் கடிதப் போக்குவரத்து மீண்டும் ஆங்கிலத்துக்கும் தமிழுக்கும் மாறிவிட்டது. அமைச்சரவையின் முடிவுக்கும் இறைசேரியின் கட்டளைகளுக்குமேற்ப சிங்களத்தில் மட்டும் நடத்தப்படவேண்டிய அலுவல்கள் இப்பொழுது ஆங்கிலத்திலும் தமிழிலும் நடைபெறுகின்றன.

அத்துடன் இப்பிரதேசத்தில் பணிபுரியும் சிங்கள அரசாங்க ஊழியர்களுக்குப் பதிலாக தமிழ் ஊழியர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர். வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு அரசாங்க ஊழியர்களை இடமாற்றம் செய்யும்போது பிரதானமாகத் தேவைப்பட்ட சிங்களத் தகைமை பற்றிஇப்பொழுது நினைத்துப்பார்ப்பதுகூட கிடையாது. சிங்களத் தேர்ச்சிபெற்ற ஊழியர்களுக்குப் பதிலாகத் தேர்ச்சியல்லாதவர்களே நியமனம் செய்யப்படுகின்றனர்.

யு. என். பி—தமிழரசு அரசாங்கம் அமைக்கப்படும்போது அந்த இரு கட்சிகளிடையேசெய்யப்பட்ட உடன்பாட்டுக்கிணங்க இவ்விரு [illegible] பெற்றிருந்த இடம் படிப்படியாகத் தமிழுக்குக்கிடைத்து வருகிறது.

## சிங்கள இதழ்களில்...

### 'சவாரி சீசன்' ஆரம்பமாம்

'அமைச்சர்களினதும், அவர்களை ஆதரிப்பவர்களினதும் உலகச் சுற்றுலா ஆரம்பமாகியுள்ளது. நீதி மந்திரி திரு. விஜேமான்ன பிரிட்டனுக்குச் சென்று வந்தபின்னர், உதவி மந்திரி திரு. பிரேமதாஸாவும் அவரது பாரியாரும் பிரிட்டனுடன் மட்டும் திருப்தியடையாது ஐரோப்பாவையே வலம் வந்தனர்.

அடுத்து, போக்கு வரத்து அமைச்சர் திரு. ஹாறுல்லேயும், மீன்பிடி அமைச்சரின் மனைவி திருமதி குசுமா குணவர்தனவும் இங்கிலாந்தில் வசந்தகாலக் காட்சிகளைக் கண்டுகளித்துக் கொண்டிருக்கின்றனர். ஐ. தே. கட்சிசார்பில் கேகாலையில் போட்டியிட்ட திரு. நிமல் கருணதிலகா ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு திரும்பியுள்ளார். எம். ஈ. பி. சார்பில் போட்டியிட்டுத் தோல்விகண்ட திரு. லக்ஷமன் ராஜபக்ஷ இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சுற்றிக்கொண்டிருக்கிறார்.

திரு. ஹாறுல்லேயுடன் வியாபாரிகள் பலர் இங்கிலாந்துக்குச் சென்றனர். திரு. என். யூ. ஜயவர்தன, குலாம் ஹுசேன் ஆகியோர் அவர்களில் இருவராவர். இ. போ. ச. இஞ்சினியர் திரு. வெத்தமுனி, சவுத்வெஸ்டன் பஸ் கம்பெனிமுதலாளி சர். சிறில் சொய்ஸா, அவரது சகோதரர் திரு. வி. டி. டி. சொய்ஸா ஆகியோரும் லண்டனுக்குச் சென்றுள்ளனர்.

இலங்கையின் வெளிநாட்டு நாணயச் செலாவணி எவ்வளவு குறைவாக இருந்தாலும், பிரவுண் கம்பெனி அதிபர் திரு. எட்மன்ட் ஜே. குரே போன்றவர்களுக்கு லண்டனுக்குப் போவதற்கு எவ்வளவோ இடமுண்டு.

இவ்வாறு வெளி நாடு செல்லும் வர்த்தகர்களுக்கு நாணயச் செலாவணி எப்படிக் கிடைத்தது என்பதை எந்த அரசாங்க அதிகாரியும் கூறமுடியவில்லை'

—ஜனசத்திய (15-3-65)

## தமிழரசுக் கட்சிக்கு 'லங்காதீப' புத்திமதி

'தமிழரசு வாதிகளின் கடமை' என மகுடமிட்டு 'லங்காதிப்ப' பத்திரிகை (17-8-65) எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிடுவதாவது:—

'தமிழரசுக் கட்சி எந்த மக்களுக்குப் பிரதிநிதித்துவம் தாங்குகிறதோ, அந்த மக்களின் உரிமைகளைப் பார்க்கிலும் பொதுவாக நாட்டினதும், நாட்டு மக்களினதும் உரிமைகளுக்காகப் பாடுபட தயாராயிருக்கிறது என்பதைக் கேட்பதுகூட ஒரு பெரிய பாக்கியமாகக் கருதப்படவேண்டும். தமிழரசுக் கட்சி இவ்வாறு கண்திறந்து, அறிவு பெற்று, ஒளிபெற்றுள்ளதைஸ் தலஸ்தாபனஅமைச்சர் திரு. திருச்செல்வம் அம்பலாந்தொடையில் நடைபெற்ற ஒரு விழாவில் தெளிவாகக் கூறியுள்ளார். 'எனது தமிழரசுக் கட்சியும் நானும், கட்சியின்ஒவ்வொரு உறுப்பினரும் கள்ளக்குடியேற்றத்தை எதிர்க்கிறவர்களென்பதையும், கள்ளக்குடியேற்றத்தைத் தடுப்பதர்க்காக அரசாங்கத்துடன் பூரணமாக ஒத்துழைத்து எமது முழுப்பலத்தையும் பிரயோகித்து செயலாற்றுவோம் என்பதையும் நான் உங்களுக்கு அறுதியிட்டு கூறுகிறேன்' என்று அமைச்சர் கூறியிருக்கிறார். எவ்வித பயமுமின்றி அதனை ஏற்றுக் கொள்ள முடியும்.

கள்ளக்குடி யேற்றக்காரர்களால் ஏற்பட்டுள்ள பேரபாயத்தை தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு தமிழரசுக் கட்சியிடமிருந்து இதுவரை எதுவித ஒத்துழைப்பும் கிடைக்கவில்லை என்பது உண்மையே. கள்ளக்குடியேற்றக் காரர்கள் இந்நாட்டில் வந்திறக்கும் வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளில் தமிழ் மக்கள் வசிப்பதால், அவர்களுடன் கலந்து விட்டால், கள்ளக் குடியேற்றக்காரர்களைக் கண்டுபிடிப்பது கடினமாகும். மலைநாட்டுத் தோட்டப் பகுதிகளும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இடங்களாகும்.

திரு. திருச்செல்வம் உறுதியாகக் கூறியுள்ளபடி தமிழரசுக் கட்சி கள்ளக் குடியேற்றத்தை எதிர்ப்பது உண்மையானல், கள்ளக்குடியேற்றக்காரர்களுக்குப் பாதுகாப்பளிக்கு தமிழ் மக்களின் பழக்கத்தைக் கைவிடச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்வதின் மூலமே தமிழரசுக் கட்சி கொடுத்துள்ள வாக்குறுதி வெறுமையானதல்ல என்பதை நிரூபிக்க முடியும்.

கள்ளக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக தமிழரசுக்கட்சி அரசாங்கத்துக்கு முழுமனதுடன் ஒத்துழைப்பு அளித்தாலும், தமிழ் மக்கள் தங்கள் மத்தியில் வந்து சேர்ந்து கொள்ளும் கள்ளத்தோணிகளைப் பிடித்துக்கொடுக்க முன்வராவிட்டால் எத்தகை பயனும் ஏற்படப்போவதில்லை. ஆகவே தமிழரசுக் கட்சி இதுபற்றி பெரியதொரு பிரசார இயக்கத்தை நடத்தவேண்டியுள்ளது. அப்படிச் செய்வதின் மூலமே தமிழரசுகட்சிபற்றி நாட்டில் ஏற்பட்டுள்ள சந்தேகத்தையும், அவநம்பிக்கையையும் போக்க முடியும்.

'பல நூற்றுண்டுகளாக நாம் இந்நாட்டில் ஒன்றுக வாழ்ந்திருக்கிறோம். வருங் காலத்திலும் சமாதானத்துடன் ஒன்றுக வாழவேண்டியவர்களாயிருக்கின்றோம். அதற்கு எத்தகைய தடையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை' என்று திரு. திருச்செல்வம் அம்பலாங்கொடையில் நடைபெற்ற விழாவில் கூறியுள்ளார். இந்த மேலான நோக்கத்தைத் தமிழரசுக்கட்சி பேச்சில்மட்டுமின்றி செயலிலும் காட்டவேண்டும். அதற்கான

(9-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்

"தெய்வத்தாலாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்"

'பொய் பொய் சுத்தப் பொய்!'

'ஏனப்படிச் சொல்கிறாய் மூடனே? உனக்கு உலகத்தைப் பற்றித் தெரியாது, வள்ளுவன் ஒரு தத்துவ ஞானி. அவர் பாடிய திருக்குறளா பொய்?'

'ஆம், நானப்படித்தான் சொல்லுவன். பத்துமாதம் சுமந்து பெற்றாள் என் தாய். பிறந்து வளர்ந்த இவ்வளவு காலமும் நான் செய்யாத முயற்சிகளே இல்லை. எனக்கென்ன பலன் கிடைச்சது? உண்ண உணவுகள் ஒழுங்கா கிடைச்சதா? உடுக்க உடைகள் ஒழுங்கா கிடைச்சதா? அல்லது சொற்பப் பணமாவது கிடைச்சதா? என் வாழ்க்கையில் ஒரு காதலியாவது ஒழுங்காகக் கிடைத்தாளா? என்ன சுகம் கிடைத்தது? தெய்வமேது? எனக்கென்று ஒரு தெய்வமும் இல்லை. தெய்வத்தை நான் நம்பப் போவதுமில்லை.' என்றான், மனம் நொந்து வாழ்க்கை கசந்த அல்லா பிச்சை.

## நிமிடக் கதை

'அல்லா பிச்சை. அப்படிச்சொல்லாதே! தெய்வம் ஏழைகளை நன்கு சோதிப்பவன். வறுமைப்படுபவர்களுக்கு மேலும் மேலும் வறுமையைப் பாலித்துக் கொண்டே இருப்பான். அவன் படைத்த இந்த உலகம் இருக்கின்றதே, இந்த உலகத்தை ஒரு நாடக மேடையாக அலங்கரித்து விட்டான்.'

'நீ தத்துவம் பேசாதே! மச்சான் காதர். நான் வந்த விசயம் வேறு. நேற்று நான் கேட்டதைச் செய்து தர உன்னால் முடிமுடியுமா இல்லையா? உம் சொல்லு—ஒரு முடிவு?'

'நீ என் நண்பன்—உனக்கு எதையும் செய்யத் தயாரா இருக்கிறேன். ஆனால் இந்த ஒரு விசயத்தை மட்டும் செய்து தர என்னிடஞ் சொல்லாதே. மனச்சாட்சிக்கு மாறாக நான் எதையுமே செய்யமாட்டேன். இப்படியான தீய செயல்களைச்செய்ய என்னைத் தூண்டாதே.'

'பூ?' இவர் மட்டுந்தான் இறைவனுக்குப் பயந்தவர். நீ இல்லாட்டி நான் வேறுளைப் பாத்துக்குறன். நீ ஒரு நண்பன், படிச்சவன் என்று உன்னிடம் ஓடிவந்தேனே! நீ என்ன வெல்லாமோ தத்துவம் பேசுகிறாய். நீயும் உன் தத்துவமும்' என்று நச்சரித்தான்.

'ஊம், மடையனே? என் தங்கச்சியை வசப்படுத்தி என்னிடமே சேர்த்திமருந்தா செய்து தரச் சொல்கிறாய்? பெரியார் வீட்டில் இருக்கும் வேலைக்காரி—சைத்தூன் என்னுடைய தங்கச்சி என்பது உனக்கெங்கேடா தெரியப் போகுது?'

'என்ன?'

மயக்க முற்றுத் தரை சாய்ந்து கொண்டிருந்த அல்லாபிச்சையை அப்துல் காதர் தாங்கிப் பிடித்தான்.

'இப்படியான வீண் முயற்சிகளுக்கு யாரும் கூலி தருவார்களா...?' என்று அப்துல்காதரின் வாய் முணுமுணுத்தது.

—மருதூர் வாணன்.

## கருத்துமேடை

# தறிகெட்டோடும் நாகரீகத்தின் பின் தலைதெறிக்க நாமும் ஓடலாமா?

### செல்வி சரோஜினி ஏரம்பு

கூட்டுக்கல்வி எம் நாட்டுக்கு நல்லதா என்னும் கருத்தில் இடம்பெற்ற நான்காவது கட்டுரையையும் படித்த பின்னரே யான் இதை எழுத முனைந்தேன்.

ஆண்களும் பெண்களும் சேர்ந்து கற்கும் கூட்டுக் கல்வி எமது நாட்டிற்கு, எமதுசமுதாயத்திற்கு ஒத்துவரக்கூடிய ஒன்றல்ல. மேல் நாட்டினரின் வாழ்க்கை முறைக்கு அவர்களது கூட்டுக்கல்வி ஒத்துவருகின்றது. ஆனால் எங்கள் வாழ்க்கை முறைக்கும் அவர்கள் வாழ்க்கை முறைக்கும் உள்ள வித்தியாசங்களை நாம் மனதில் கொள்ள வேண்டும். அதன் பின்னர் யோசித்துப் பாருங்கள். எங்கள் சமூகத்திற்கு கூட்டுக்கல்வி உகந்ததா?

மேல்நாட்டில் கல்விமுறைக்கு மட்டுமல்லாது அவர்களது வாழ்க்கை முறைகள் யாவற்றிலும் பெண் ஆணுக்குச் சமமாகவே கருதப்படுகின்றாள். சிறுவயது தொடக்கம் ஒன்றாக வளர்ந்துசமத்துவமாக கற்கச் சென்று பருவமங்கையானபின்சமமாகவே நடந்து தொழில்புரிகின்றாள். பொது வாழ்க்கையில் பங்கு கொள்ளும்போதும் அங்கே வித்தியாசம் காட்டப்பட்டதில்லை. இப்படியே அவள் வாழ்க்கை தொடருகின்றது. ஆனால் இங்கு?...

#### எமது பண்பு?

மேலை நாட்டினரைப் போலவே எம் நாட்டுக்குழந்தைகளையும் வளர்க்க வேண்டும்—கூட்டுக்கல்வி அளிக்க வேண்டும் என்றால், அவர்களைப்போலவே மனதில் விகாரம் ஏற்படாது வளர்த்து, கல்வி அளித்து, தொழில் புரியவும் வைத்துவிட்டு தொடரும் அவர்கள் வாழ்க்கையை மேலைநாட்டினர் போலவே மாற்றி அமைத்துவிட வேண்டும் என ஒரு சாரார் கூறுவர். ஆயின் எமக்கென நாம்வகுத்துக்கொண்ட பண்புகளின் கதி என்ன? பெண்ணின் அணிகலன்களான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என நாம் பெரிதாக பீற்றிக்கொள்வோமே! அவை எல்லாவற்றையும் உடைத்தெறிந்து விட்டல்லவோ நாம் மேல் நாட்டினர் வாழ்க்கை முறையைக் கைக்கொள்ள வேண்டும்!

#### உடலும் உள்ளமும்

கட்டைவண்டி நாகரீகம் மாறிவிட்டதுதான். ஆனால் தறிகெட்டோடும் நாகரீகத்தின்பின் தலைதெறிக்க நாம் ஓடி எங்கள் சமூகத்தின் நிலையை சீர்குலைப்பது நன்மையான செயலா? 'சின்ன வயதில் ஒரு பெண் எப்படி வளர்க்கப்பட்டாளோ, அதே சூழ்நிலையில் அவள் தொடர்ந்து வளர்க்கப்படவேண்டும். பருவமடைந்தபின் பழைய சூழ்நிலையை மாற்றி அமைத்துவிட்டால் அம் மாற்றம் அக்குழந்தையின் மனதில் விசித்திரமான எண்ணங்களை தோற்றுவிக்கும்' என்று சோதரி மார்கிரட் எழுதியிருந்தார். பருவமடைந்த பெண்குழந்தை அல்ல, அவள் உடல் வளர்ச்சியுடன் உள்ளத்து வளர்ச்சியும் நிகழுகின்றது.

வயதுவந்த பெண் [illegible] கட்டுப்பாடுகளுடன் [illegible] எப்படி நடக்கவேண்டும் என்பதை அவளின் தாயே அவளுக்கு இலகுவாக உணர்த்திவிடுகின்றாள். அப்படி இருக்கையில் இந்த மாறுபட்ட சூழ்நிலைஎப்படி ஒருபெண்ணை தவறானவழியில் இழுத்துச் செல்லும்? கட்டுப்பாடுகளுக்குள் அவள் நடப்பதினால் பெண்ணுக்கே இயல்பான நாணமும் அடக்கமும் அவளை நல்லதொரு மங்கையாக்குகின்றது.

## கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதா? [7]

சகோதரத்துவத்தை வளர்க்க, குழந்தைகளின் உள்ளத்தில் கள்ளம் கபடம் தோன்றாது வளர்க்க கூட்டுக் கல்விதான் துணைபுரியும் எனக் கொள்வது தவறாகும். கூட்டுக்கல்வி இன்றியே மேதைகளாகிய, பல நல்ல குடும்பப்பெண்களை எமது சமூகம், எங்கள்நாடு தோற்றுவிக்கவில்லையா?

#### முக்காலமும் தொடரும்....

சமத்துவம் என்னும் பெயரால் பெண்ணுக்கு கிடைக்கும் சுதந்திரத்தின் பலனாக நடைபெறும் தீமைகளை நாம் இன்று கண்கூடாக காண்கிறோம். ஒருபெண்ணின்வாழ்க்கை முறை அவளுடன் நின்றுவிடுவதில்லை. அவளதுவாழ்க்கை நிகழ்காலத்துடன்நின்றுவிடாது எதிர்காலத்துடனும் தொடருகின்றது. ஆண்களின் நிலை அப்படிப்பட்டதன்று. கூட்டுக்கல்வியினால் ஏற்படும் விபரீதங்களினால் ஆண்கள் அதிகம் பாதிக்கப்பட்டதில்லை. பெண்தான் பாதிக்கப்படுகின்றாள்.

எனவேகூட்டுக்கல்வி கூடாதெனக்கொள்வது பத்தாம் பசலிக் கொள்கை எனக் கொள்ளாது, நல்லதோர் கொள்கை என்பதை செல்வி. சுகிர்தநிதியினது சிறந்த கருத்துக்களையும் நினைவில் நிறுத்துங்கள் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

# மங்கையர் சங்கம்

## குழந்தைகளின் ஆசை

மேற்கு ஜெர்மனியிலுள்ள டார்ட்மண்ட் பள்ளி ஆசிரியர்கள் அங்கு படிக்கும் சிறுவர்களின் ஆசைகளைப் பற்றித் தகவல்கள் சேகரித்தனர். அவைகள் நம்பமுடியாத அளவுக்கு உற்சாக மற்றவைகளாக இருந்தன.

தலைமை ஆசிரியர் வில்ஹெல்ம்டெப் தமது ஆராய்ச்சிக்குட்பட்ட குழந்தைகளின் ஆசைகளை ஐந்து பிரிவாகப் பிரித்திருக்கிறார். ஆசைகளின் நோக்கம், விஷயம் இவைகளைக் கொண்டு பிரித்த அதன் விவரமவாது:

1. விரும்பும் வேலைகள்: மரத்தை செதுக்குவது, திருடனைப்பிடிப்பது சமைப்பது போன்றவை.

2. எந்த வேலையையும் செய்யத்தயாராயிருப்பது: தேகாரோக்கியத்துடன் எதையும் கிரகிக்கும் சக்தியையும் பெற்றிருப்பது.

3. செயல்படும் ஒரு பாத்திரமாக இருக்க விரும்புவது: பொலீஸ்காரன், அரசன், கேப்டன், பஸ்கண்டக்டர் இம்மாதிரி.

4. குதிரை, டிராம், கப்பல் ஆகிய பொம்மைகளைப் பெற விரும்புவது.

5. தங்ககடிகாரம் நல்ல துணிகள், பணம் இவைகளைப்பெற ஆசைப்படுவது.

நான்காவதாகவும் ஐந்தாவதாகவும் கூறப்பட்ட பிரிவுகளிலேயே பெரும்பாலான குழந்தைகள் இருக்கின்றனர் என்பது பரிசோதனைகளிலிருந்து தெரியவந்தது. 1952ல் குழந்தைகளில் பெரும்பாலோர் ஒன்று, இரண்டு, நான்காவது பிரிவினர்களைச் சேர்ந்தவர்களாகஇருந்தார்கள். 1948ல் இரண்டாவது, நான்காவது பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகள் இருந்தனர்.

#### அன்பை விரும்பிய ஒரே குழந்தை

1964ல் 200 குழந்தைகளில் ஒரே ஒரு குழந்தை மட்டும், தான் எல்லோரிடத்திலும் அன்பும் தனக்கு அறிவும் வேண்டும் என்று ஆசையைத் தெரிவித்தது. ஒரு குறிப்பிட்ட செயலில் ஈடுபட வேண்டும் என்று விரும்பிய குழந்தைகள் ஒரு சத விகிதத்திற்கும் குறைவு.

ஏழு எட்டு வயதுள்ள குழந்தைகள் பெரிய மனிதர்களைப் போல நடந்து கொள்ள விரும்புகிறார்கள். இன்று தங்களால் எதைப் பெறமுடியுமோ அதையே பெறவிரும்புகிறார்கள். இந்த ஆசையும் மேலெழுந்தவாரியாக இருக்கிறது. ஒரு விஷயத்தைத் தொடர்ந்து மற்றொரு விஷயத்தில் குழந்தைகளின் கவனம் செல்வதால் எந்த ஒரு விஷயத்திலும் குழந்தைகளின் கருத்து ஊன்றி நிற்பதில்லை என்று டெப் அபிப்பிராயப்படுகிறார். தங்கள் மனது ஒரு விஷயத்தில் வேரூன்ற நேரமோ அவகாசமோ இக்காலத்துக் குழந்தைகளுக்கிடையாது என்பது அவர் கருத்து.

இக்குழந்தைகள் விஷயமாக பெற்றோர்கள் விசேஷக்கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுடெப் கூறுவதாவது: ஏகப்பட்ட கருத்துக்கள், குழந்தைகள் மனதில் ஏககாலத்தில் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குழந்தைகள் தாங்களே எதையும் செய்யும் ஆர்வத்தை பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஊட்ட வேண்டும் 'குழந்தைகள் சோம்பித் திரியாமல் சுறுசுறுப்பாக இருக்கவேண்டும். 'டெலிவிஷனைப் பார்க்கச் செய்வதைவிட வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்ல வேண்டும்.' என்று டெப் மேற்கு ஜெர்மன் பெற்றோர்களுக்கு யோசனை கூறியிருக்கிறார். குழந்தைகளுக்கு சாதாரண கருவிகள், விளையாட்டுப் பொருள்கள் கொடுக்கப்பட வேண்டும். தொழில் நுணுக்கம் கொண்ட விளையாட்டுப் பொருள்களைக் கொடுக்கலாகாது. டெப் வெயிட்ட கருத்துக்கள் முற்றிலும் சரியானவை என்பதை டார்ட்மண்ட பெற்றோர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

# 5 கேள்விகள்

குடித்தனம் நடத்துவதற்கு ஏற்ற அறிவினை நம் சகோதரிகள் அனைவரும் பெற்றுள்ளனரா? இல்லவேயில்லை.

சமூகத்தில் பழகுதல், கணவனுடன் வாழுதல், குழந்தை வளர்த்தல், ஆரோக்கியத்தைக் கவனித்தல், போசாக்குள்ள உணவு சமைத்தல் ஆகிய துறைகளில் நாம் இன்னும் விருத்தியடையவில்லை.

இந்த ஐந்து துறைகளிலும் போதுமான அறிவு பெற்றால்தான் நம் வாழ்வு சிறப்புறும்—குடும்ப வண்டி சுலபமாக ஓடும். இத்துறைகளில், சிற்சில சமயங்களில் சிக்கல் ஏற்படும் போது என்னென்ன செய்வதென்று தெரியாமல் நம் சகோதரிகள் திணறுவதுண்டு. உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை விளக்கவே 5 கேள்விகள் பகுதியை ஆரம்பித்துள்ளோம்.

குடித்தனப் பாங்கிலே ஏற்படும் சந்தேகங்களையிட்டு கேள்விகளை தாராளமாக எழுதிக் கேளுங்கள். ஒவ்வொரு வாரமும் 5 கேள்விகளுக்கு மட்டும் பதிலளிப்போம்.

சகோதரிகள் சில வேளைகளில் தங்களுடைய பெயர்களை வெளியிட விரும்பாமலிருந்தால், புனை பெயர்கள் மூலம் கேள்வி கேட்கலாம்.

சுருக்கமான பதில்களை மட்டுமே தருவதற்கேற்ற இடவசதியுள்ளமையினால் உங்கள் கேள்விகளும் சுருக்கமாகவே இருத்தல் வேண்டும்.

கேள்வி கேட்க விரும்பும் சகோதரிகள் தங்கள் கடித உறைகளிலோ அல்லது அஞ்சல் அட்டைகளிலோ கீழே உள்ள முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

குறிப்பு:

ஒருவர் ஒரே தடவையில் ஒரே ஒரு கேள்வி மட்டும் தான் கேட்கலாம்.

'5 கேள்விகள்' முதற் பகுதி 5-9-65ல் ஆரம்பமாகிறது.

—செல்வி அக்கா.

**5 கேள்விகள்**
செல்வி அக்கா,
**சுதந்திரன்**
த. பெ. 1183
கொழும்பு.

## அடுத்த இதழில்

குணமணி
எழுதும்
**"அகத்தின் அழகும் முகத்தின் அழகும்"**
வெளிவருகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானமுடன் வாழ்கிறார்கள்

## மலேயாத் தமிழர்கள்

## தாய்மொழி என்பது தன்னாலே வருவது

## மலேயா சுற்றுப் பயணத்தில் அறிஞர் அண்ணா பேருரை

'**நான்** இந்த நாட்டிற்கு வருகை புரிந்ததின் நோக்கத்தை இன்னமும் விளக்க வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

சர்க்கஸ் கம்பெனியைச் சேர்ந்த ஒருவன், இயற்கையாக ஒரு ஊருக்குள் நுழைந்தால், அவன் சர்க்கஸ் நடத்தவா வருகிறான் என்றுபார்த்தவர்கள் கேட்பார்கள். ஆனால், அவன் பத்து நாட்கள் சர்க்கஸ் கம்பெனியிலிருந்து லீவு வாங்கிக்கொண்டு தன்னுடைய அண்ணன் வீட்டுக்கோ, மைத்துனன் வீட்டுக்கோ, வந்தவனாக இருப்பான், அதைப்போல அரசியல் துறையிலே ஈடுபட்டுள்ள நான், சாதாரணமாக இங்கு வந்தால, 'ஐயோ இங்குமா வருகிறான் அண்ணாதுரை' என்கிறார்கள்.

### வந்த நோக்கம்

நான் இங்கேயுள்ள அரசியலைப்பற்றி பேசவேணு என்று ஐயுற்றார்கள் சிலர். அரசியலைப்பற்றி பேச ஆரம்பித்து எண்ணூறு மைலைக் கடந்து வரவேண்டிய நிலையில் தமிழகம் என்னை விட்டுவைக்கவில்லை. கழுத்தளவுக்கு நான் அரசியலில் சிக்கிக் கொண்டிருக்கிறேன்.

நேரம் முழுவதையும் அரசியலுக்கு அர்ப்பணித்துக் கொண்டுள்ள நிலையிலிருந்து சிறிதுகாலம் விடுபட்டு. சில பல நாட்கள் மலர்ந்த முகங்களைக்கண்டு களித்து, புதிய தெம்போடு, புதிய பொலிவோடு புதிய களிப்போடு ஓய்வு பெற்றுத் தமிழ் நாடு திரும்பலாம் என்ற நோக்கத்திலே தான் வந்தேன்.

சர்க்கஸ்காரன் ஒருவனைப் பார்த்ததும் எப்போது சர்க்கஸ் என்று கேட்பதைப் போல,அரசியல் வாதியாகிய என்னை இங்கும் அரசியல் பேசப் போகிறானே என்று இங்கே உள்ள சில அரசியல் வட்டாரத்தினர் ஐயமுற்றார்கள்.ஆனால்யாருக்கும் சந்தேகம் தேவையில்லை. அங்கே இருக்கிற அரசியலைக்கவனித்துக்கொள்ள இங்கே பத்து பேர் வந்தால் உடன் அவர்களையும் அழைத்துச்செல்லத் தயாராயிருக்கிறேன். இங்கே நான் அரசியல் பேச வந்திருக்கிறேன் என்று கூறுவது எப்படியிருக்கிறதென்றால், அரைப் பட்டினியாக இருப்பவன் அன்னதானம் செய்வது போலிருக்கிறது. அரைப்பட்டினிக்காரன் அன்னதானம் செய்வது என்பது எப்படி பொருத்தமற்றதாக ஆகுமோ அப்படித்தான் இதுவும் இருக்கிறது.

### தமிழர்கள்

என்னுடைய உள்ளத்தில் நான் இங்கு கால் வைத்ததிலிருந்து, திரும்ப என் தாய் நாடு நோக்கி கால் எடுத்து வைக்கும்வரை அரசியல் உணர்ச்சிக்கு இடம் கொடுக்கமாட்டேன். அரசியலை மூட்டவேநான் தயாராக இல்லை.

அரசியல் பற்றி அறிந்து கொள்ளவே வந்திருக்கிறேன். அரசியற் பூசல்களில் கலந்து கொள்ள அல்ல.

உங்களையும் என்னையும் இணைத்து வைத்திருப்பது நாம் இருவரும் பேசும் மொழியான தமிழ்தான். அந்த மொழி நமது தாய் மொழி என்பதால்தான்;

இங்கே வாழ்கின்ற நீங்கள் அனைவரும் மலேசியாக்காரர்கள்; அங்கே வாழ்கின்ற நாங்கள் தமிழர்கள்—இந்தியர்கள்.

தமிழ் பேசும் மலேசியர்கள் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களில் ஒருவரை, தேளோ, பாம்போ, தீண்டிவிட்டால் அப்போது அவர்கள் 'ஐயோ! அம்மா! என்று தமிழில்தான் அலறுவார்கள். அவர்கள் 'ஓ மை காட்!' என்று மறந்தும் சொல்ல மாட்டார்கள்.

### மலாயாத் தமிழர் சிறப்பு

தாய்மொழி என்பது தன்னாலே வருவது; அது கட்டையோடு பிறந்தது; கட்டையோடுதான் போகும்! அது சிற்பமாக செய்யப்பட்டாலும் சரி; அந்த உணர்ச்சி எந்த நிலையிலும் நீங்காது.

அந்த உணர்ச்சிதான் இன்றைய தினம் என்னைக் காண்பதிலே உங்களுக்கு மகிழ்ச்சியும், உங்களைக் காண்பதிலே எனக்கு இன்பமும் ஏற்படச் செய்திருக்கிறது. இப்படிப்பட்ட தமிழ் மொழிக்குச் சொந்தக்காரர்களான நீங்கள் வாழ்வதற்கு ஒரு நல்ல நாட்டைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். நல்ல ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அந்த நல்ல ஆட்சியில் நல்ல பெருமக்கள் அமர்ந்திருக்கிறார்கள். அது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் உலகின் பல பாகங்களிலும் வசிக்கின்றனர். ஆஸ்திரேலியாவுக்கு அருகிலுள்ள பிஜீத்தீவில் - ஆப்பிரிக் காவிலுள்ள நத்தாவில்—பர்மாவில் மற்றும் பல நாடுகளிலும் வாழ்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டுக்கு அடுத்தபடியாகத் தமிழர்கள் வாழும் இடம் மலேசியாதான் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

மற்ற மற்ற நாடுகளிலே எண்ணிக்கையிலே குறைவாக உள்ளனர். ஆனால் எண்ணிக்கை மட்டு மல்ல;— மலேசியாவுக்குள்ள சிறப்பு.

மற்ற நாடுகளிலே தமிழர்கள் வாழ்கிறார்கள் என்று தவறுதலாகச் சொன்னேன். அவர்கள் அங்கெல்லாம்இன்றையத்தினம் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை;இறந்து கொண்டிருக்கிறார்கள்.

இருப்பதற்கும் வாழ்வதற்கும் வித்தியாசம்இருக்கிறது. நமக்கு வேண்டாதவர்கள் நமது வீட்டிற்கு வந்தால், அவர்களைப்பற்றி நம்மிடம் யாரேனும் விசாரித்தால் அவர்களை 'அங்கே இருக்குது' என்று சொல்வோம்.

வேண்டாத பொருள்களாக மற்ற நாடுகளிலே தமிழர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் மலேசியாவிலே தமிழர்கள் நல்வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.இன்றிருக்கும் நல்வாழ்வு இன்னும் பல மடங்கு பெருகுவதற்கான சாத்தியக் கூறுகள் தெரிகின்றன.

ஆகையால்தான் இங்கு வாழும் பத்து இலட்சம் தமிழர்கள் வாழ்கின்ற நாட்டிற்கு உரியவர்களாக்கி இந் நாட்டிலே ஒரு பகுதியினராக்கிச் செல்ல விரும்புகிறேன்.

நல்ல தலைவரான, உங்களால் மலேசியத் தந்தை என்றழைக்கப்படும் மதிப்புக்குரிய பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் அவர்களின் தலைமையின் கீழ் உங்களின் மலேசியத் திருநாடு பெரும் புகழோடு விளங்கட்டும் என்று இந்தியாவின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துத்தெரிவிப்பதற்கு 'நீ என்ன ஆளும் கட்சிக் காரனா?'— என்று சிலருக்குக் கேட்கத் தோன்றும். நான் எதிர்க்கட்சிக்காரன். ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கூறினால், அது ஏதேனும் ஆதாயத்தைக் கருதியதாக இருக்குமோ என்று ஐயுறலாம். ஆனால் எந்தவிதமான லாப நோக்கமுமில்லாமல் எதிர்க்கட்சியிலுள்ள நான் தூய உள்ளத்தோடு ஓர் தமிழன் என்ற முறையிலே—இந்தியன் என்ற முறையிலே உங்களை மனமார வாழ்த்துகிறேன்.

மலேசியாவின் அமைப்பை எதிர்த்து இந்தோனேசிய அதிபர் டாக்டர் சுகர்னோ உருட்டல் மிரட்டல்களையும், படையெடுப்புகளையும் செய்து வருவதாக நாங்கள் பத்திரிகைகளில், பார்த்தோம்.

ஒரு நாட்டினுடைய எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கு அந்த நாட்டின் தலைவர்களுக்கும், அந்த நாட்டு மக்களுக்கும்தான் உரிமை உண்டு. எவ்வளவுதான் பெரியவர்களாக இருந்தாலும், வல்லவர்களானாலும் மற்றவர்களுக்கு அடுத்த நாட்டின் நிர்வாகத்தில் தலையிடுவதற்கோ. அதைப்பற்றிக்கூறுவதற்கோ உரிமையுமில்லை; நியாயமுமில்லை. ஆகையால் டாக்டர் சுகர்னோ மலேசியாவை எதிர்ப்பதில் பொருள் இருப்பதாக அரசியல் அறிந்த எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் அவருடைய எதிர்ப்பைப் பற்றி மலேசிய மக்கள் அச்சப்படத் தேவையில்லை. ஏனென்றால் உலகத்திலுள்ள பல சனநாயக நாடுகளின் ஆதரவும் நல்லெண்ணமும் உங்கள் பக்கம் இருக்கின்றன.

### சனநாயகம்

மலேசியா என்பது ஒரு புதிய சுதந்திர நாடு, என்பது மட்டுமல்ல; இது ஒரு சனநாயக நாடு; இந்தியாவும் மலேசியாவும் பாராளுமன்ற சனநாயக முறைகளை நடத்திக் கொண்டு வருகின்றன.

மற்ற பல நாடுகளிலே சனநாயகம் என்று சொல்கிறார்கள். ஆனால் அங்கெல்லாம் பாராளுமன்ற சனநாயகம் கிடையாது.

உருசியநாட்டிலேகூட சனநாயகம் என்றுதான் கூறுகிறார்கள். அதற்குப் பெயர் பாட்டாளிகள் சனநாயகம் என்று சொல்கிறார்கள்.

சீனாவிலே சனநாயகம் இருப்பதாக சொல்லப்படுகிறது. அதற்கு மக்கள் சனநாயகம் என்று பெயர்கொடுக்கப்படுகிறது,

பாகிஸ்தானிலே சனநாயகம் என்கிறார்கள். அதற்கு 'பேசிக் டெமாக்ரசி' அல்லது அடிப்படையான சனநாயகம் என்று கூறுகிறார்கள்.

இந்தோனேசியாவில் கூட சனநாயமென்கிறார்கள். அதற்கு வழிகாட்டி(கைடட்) சனநாயகம் என்கிறார்கள்.

ஈசிப்டிலே (எகிப்து) கூட அப்படித்தான் கூறப்படுகிறது. ஆனால் அதற்கு 'நாசவிசம்' என்று பெயர் கூறுகிறார்கள்.

இவைகள் எல்லாம் சனநாயகம் என்ற பெயரை மட்டுமே வைத்துக் கொண்டிருக்கின்றன. ஒரே கட்சி, ஒரே தலைவன்—தேர்தல்நடக்கும். ஒரு கட்சிதான் போட்டியிடும், ஒரு கட்சிதான் அனுமதிக்கப்படும். அதை அனுமதிக்கிறவன் அந்தக் கட்சியின் தலைவன் அந்தக் கட்சியின் தலைவன்தான் நாட்டுக்குத் தலைவன். மாஜிஸ்திரேட்டும் அவரே—வக்கீலும் அவரே!—போலீஸ் அதிகாரியும் அவரே! தீர்ப்பு எழுதுகிறவரும் அவரே—ஜெயில் அதிகாரியும் அவரே! எல்லாம் ஒருவர். ஆனால் அதற்குத் தனித்தனி அறைகள் மட்டுமிருக்கும்.

ஓர் அறையில் இருந்து கொண்டு நீதிபதி — நான் பேசுகிறேன் என்பார். அடுத்தஅறையில்உட்கார்ந்து கொண்டு ஜெயில் அதிகாரி நான் அழைக்கிறேன் நான்—வா! என்பார்.அந்தவிதமான சனநாயகம் உலகத்திலே பல இடங்களிலே இருக்கின்றன.

### சனநாயகமும் எதிர்க்கட்சிகளும்

ஆனால் இந்தியாவிலும் மலேசியாவிலும் உள்ள சனநாயகம்அப்படிப்பட்டதல்ல. இங்கே ஏற்றுக்கொள்ளப்பட்ட சனநாயகம் பாராளுமன்ற முறையைச்சேர்ந்தது. இதற்கும் மற்ற சனநாயக நாடுகளுக்கும் உள்ள பேதம் என்னவென்றால் ஒரே கட்சி-ஒரே தலைவன் என்ற திட்டம் இல்லாமல்—பல கட்சிகள் பாரளுமன்ற முறையில்இருக்கலாம். பல தலைவர்கள் அவற்றை நடத்தலாம்.

எதிர்க்கட்சியே கூடாது என்பது சில நாடுகளிலுள்ள சனநாயக முறை. எதிர்க் கட்சியும்இருக்கலாமென்பது இந்தியாவிலும் மலேசியாவிலுமுள்ள பாராளுமன்ற சனநாயக முறை.

ஓட்டப் பந்தயத்திலே ஒன்பதுபேர் ஈடுபட்டால்தான், அவர்களில் போட்டியில் ஈடுபட்டு முதலாவதாக வந்தவனுக்கு தங்கப்பதக்கம் அளிப்பதில் அர்த்தமுண்டு.

ஓட்டப் பந்தயம் நடக்கும் என்று அறிவித்துவிட்டு மக்கள் வெள்ளம்மைதானத்தில் குழுமிய பிறகு ஒரே ஒரு ஆள் மட்டும் மெல்லநடந்துபோய் என்னை மிஞ்சியவருமில்லை; வென்றாருமில்லை என்று மார் தட்டினால் அது ஓட்டப் பந்தயமுமல்ல; நாம் அதை வேலை கேட்டுப் போய் பார்க்க வேண்டியதுமில்லை.

இதைப்போலத்தான் மற்ற நாடுகளிலே சனநாயகம், எதிர்கட்சிகளே இல்லாமல் ஒன்பது பேர் ஓடவேண்டிய பந்தயத்தில் ஒருவனே நடந்துவெற்றி பெற்றதாகச் சொல்வதைப் போல இருக்கிறது.

எந்த பேதத்தையும் அரசியலில் புகவிடாதபடி பாராளுமன்ற சனநாயக முறை மலேசியா—இந்தியா நாடுகளின் சனநாயக அமைப்பு—நாட்டுக்கேற்ப அதனதன் அமைப்பிற்கேற்ப சிறு சிறு மாற்றங்கள் கொண்டு விளங்குகின்றன,

கலை, கலாச்சாரம், பண்பாடுகளோடு இந்திய மலேசிய உறவு பன்னெடுங்காலத்திற்கு முந்தையதோடு மட்டுமல்ல; தற்போது கடைபிடித்து வரும் பாராளுமன்ற சனநாயகமுறை; இரு தேசங்களும் ஒன்றுக்கொன்று துணையாக —உறவாக நட்பாக இருப்பதற்கு வழி வகுத்துக் கொடுக்கிறது.'

—என்று அறிஞர் அண்ணா அவர்கள், 20-7-65 அன்று இரவு 9-15 மணிக்கு அலோரஸ்டார் ஸ்டேடியத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மலேசிய மக்கள் முன் முழக்கம் செய்தார்.




# ரிஷி

## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

குறிப்பு

அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சினாப்பள்ளி குரு மருந்துகளும் கேசவர்த்தனி எண்ணெயும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைககளும் கிடைக்கும்.

விலை 1 ருத்தல் ரூபா 36-00
விலை ½ ருத்தல் ரூபா 22-00
விலை ¼ ருத்தல் ரூபா 12-00
(தபாற் செலவு 95 சதம்)

63 வருட பரம்பரை வைத்திய நிருணர்

ஆயுர்வேத டாக்டர்!
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்
ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1965 ஆகஸ்ட் மாதம் 22-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் - 3411    த. பெ. 1183


# தவறைத் திருத்துக

எதிர்க் கட்சியினர் நாட்டிலே இன, மதத் துவேஷப் பிரச்சாரத்தைப் பல்வேறு முறைகளில் செய்து வருகின்றனர். அவர்கள் இது பற்றி புனராலோசனை செய்து, வகுப்புவாதப் பிரச்சாரத்தைக் கைவிட்டு, வேறு அரசியல் உபாயங்களைக் கையாள வேண்டிய கட்டம் இப்பொழுது வந்துள்ளது.

இலங்கை ஒரு சனநாயக நாடு. இன்றைய எதிர்க் கட்சி நாளை ஆளும் கட்சியாக மாறிவிடலாம். அதற்கான எல்லா வாய்ப்புகளும் சனநாயக அரசியல் அமைப்பு முறையிலே உண்டு. அவற்றைத் திறமையான முறையில் பயன்படுத்தி ஆட்சி பீடத்தைக் கைப்பற்ற முயற்சி செய்ய வேண்டியது எதிர்க்கட்சியின் கடமையாகும். இதற்காகப் பல தந்திரோபாயங்களைக் கையாள வேண்டிய கட்டாயமும் எதிர்க் கட்சிக்கும் ஏற்படுவதுண்டு.

அரசியல் உபாயங்களைக் கையாள எந்தக் கட்சிக்கும் முழு உரிமை உண்டு. ஆனால் அந்த உபாயங்கள் சனநாயக வளையத்துள் அடங்கியதாக இருத்தல் வேண்டும். இட்லரீய உபாயங்கள் சனநாயக அரசியல் உபாயங்களாக மாட்டா. இந்த உண்மையை ஒரு சனநாயக நாட்டின் ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் மறந்துவிடக் கூடாது.

இனத் துவேஷம் இட்லரீயக் கொள்கையாகும்—பாசிசத்தின் ஓர் அம்சமாகும். அது சனநாயகத்துக்கு அப்பாற்பட்டது. சனநாயகப் பாதையிற் செல்பவர்களுக்கு ஒவ்வாதது. இனத் துவேஷத்தின் மூலம் ஆட்சி கைப்பற்றப்படுமாயின் பாசிசம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். எனவே சனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் இனத் துவேஷப் பிரச்சாரத்தை அரசியல் உபாயமாகக் கொள்வது ஒரு மாபெரும் அரசியல் தவறாகும்.

வகுப்புவாதப் பிரசாரத்தைக் கைவிடுமாறு ராஜாங்க அமைச்சர் இவ்வாரம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். துவேஷப் பிரசாரம் நாட்டிலே குழப்பத்தை ஏற்படுத்த உதவுமேயன்றி, எதிர்க்கட்சிகளுக்கு தங்களின் இலட்சியத்தை அடையப் பயன்படாது.

மூன்று எதிர்க்கட்சிகளும் இணைந்து ஒரே பாதையில் செல்வதாகவே தெரிகிறது. அவற்றில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிங்கள நடுத்தர வகுப்பு மக்களின் ஆதரவைப்பெற்ற ஓரளவு வகுப்புவாதப் போக்குள்ள கட்சியாகும். 'சிங்கள மகாசபா'வின் கொள்கையே அதன் அடிப்படை. இடதுசாரிகளான சமசமாஜக் கட்சியும், கொம்யூனிஸ்ட் கட்சியும் வகுப்புவாதக் கொள்கையை கண்டித்து வந்த கட்சிகளாகும். சுதந்திரக் கட்சிக்குள் இடதுசாரிக் கோஷ்டி இப்பொழுது வலுவடைந்துள்ளது. கட்சித் தலைவியும் இக்கோஷ்டியையே ஆதரிக்கின்றாராம். கட்சிக்குள் இடதுசாரிகளின் கை ஓங்கி நிற்பதால் கட்சியின் வகுப்புவாதப் போக்கு பெருமளவு குறைந்திருக்க வேண்டுமல்லவா? அதற்குப் பதிலாக கட்சியின் வகுப்புவாதப் போக்கு மென்மேலும் வலுவடைந்து வருகிறதே! இடதுசாரிகளும் வகுப்புவாதக் கொள்கையை மேற்கொண்டிருந்தாலன்றி இது சாத்தியமில்லை.

சிங்களவர்களைத் தமிழ் பேசும் மக்களுடனும், பௌத்தர்களைக் கத்தோலிக்கர்களுடனும் மோதவிடும் கொள்கையைக் கையாளும் அளவுக்கு இடதுசாரிக் கட்சிகளின் கொள்கை தேய்ந்து விட்டதாயின், அவர்கள் மார்க்ஸீயத்திலிருந்து விலகி வெகுதூரம் சென்றுவிட்டனரென்றே கூறவேண்டும். இந்த இன, மதத்துவேஷத்தை எந்தக் கட்டம் வரை கொண்டு செல்ல அவர்கள் திட்டமிட்டுள்ளனர்? நாட்டிலே சமயச் சண்டையும், வகுப்புக் கலகமும் ஏற்படும் வரையிலா? அப்படி ஏற்பட்டால், அதனுல் இடதுசாரிக் கொள்கை வலுவடையுமா? சோசலியத்தைக் கொண்டு வர வழி பிறக்குமா? இவற்றைச் சிந்தியாமல் அவர்கள் ஏன் கண்ணை மூடிக்கொண்டு அழிவுப்பாதையில் செல்கின்றனர்?

சுமார் 30 வருட அரசியல் அனுபவமுள்ளவர்கள், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தியவர்கள், அதில் பல தியாகங்களைச் செய்தவர்கள் அக்கட்சிகளின் தலைமைப் பீடத்தில் இருக்கின்றனர். அத்தகையோர் இக்கட்டத்தில் மிகக்குறுகிய வகுப்புவாத வழியிற் செல்லுவதின் மூலம் அவர்களின் கட்சிகளுக்கும் நாட்டுக்கும் தீமையே விளைவிக்கின்றனர். எனவே அவர்கள் மீண்டும் சிந்தித்து தங்களின் போக்கை நிச்சயம் மாற்றிக் கொள்ள வேண்டும். அதனுல் அவர்கள் கைகோத்துக் கொண்டுள்ள சுதந்திரக் கட்சியின் போக்கும் மாறுவதற்கு வழி பிறக்கும்.

பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டதே மார்க்ஸீயம். பாட்டாளிகளின் புரட்சியின் மூலமே ஆட்சியைக் கைப்பற்றவும், முதலாளித்துவ முறையை அழிக்கவும் முடியுமென மார்க்ஸ் தெளிவாக கூறியுள்ளார். அந்தப் பாதையைக் கைவிட்ட இந்நாட்டு இடதுசாரிகள் தேர்தல் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதையும், பாராளுமன்றத்தின் மூலம் முதலாளித்துவ முறையை அழிப்பதையும் கொள்கையாகக் கொண்டுள்ளனர்.

இது மார்க்ஸீயத்துக்கு மாறுன சனநாயகப்பாதையாகும். இதனை 'சனநாயகச் சோஷலிஸம்' என்று கூறுவார்கள். சனநாயகப் பாதையிற் செல்லுவோருக்குச் சர்வாதிகாரப் போக்கைக் கடைப்பிடிக்கவேண்டிய அவசியமே கிடையாது. பலாத்காரமும் அவர்களுக்குத் தேவையில்லை. இனத்துவேஷம் பலாத்காரத்துக்கே வழிவகுக்கும். பலாத்காரமோ சர்வாதிகாரத்தைஏற்படுத்தும். ஆகவே பாராளுமன்ற முறையை ஏற்று சனநாயகப் பாதையில் திரும்பியவர்களுக்கு இந்த இனத்துவேஷம் எதற்கு?

இரு இடதுசாரிக் கட்சிகளும், சுதந்திரக் கட்சியும் தங்களின் தற்போதைய நிலையை முற்றாக மறு பரிசீலனை செய்யவேண்டும். 'ஆத்ம பரிசோதனை' செய்து கொள்ளவேண்டும். குறுகிய அழிவுப் பாதையைக் கைவிட்டு சனநாயக நியதிகளுக்கேற்ற அரசியல் உபாயங்களைக் கையாள முன்வரவேண்டும். தேசிய அரசாங்கத்தின் விட்டகுறை, தொட்ட குறைகளைச் சரிவரப் பயன்படுத்தி மக்கள் மத்தியில் தங்களைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும். சீரழிந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஆக்கபூர்வமான யோசனைகளைக் கூறுவதின் மூலம் நாட்டுமக்களின் நம்பிக்கைக்குத் தங்களைப் பாத்திரமாக்கிக் கொள்ளவேண்டும். சிறுபான்மையோரின் நியாயமான உரிமைகளை ஆதரிப்பதின் மூலம் அவர்களின் நம்பிக்கையையும் பெறவேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் மட்டுமே மீண்டும் ஆட்சிபீடத்தைக் கைப்பற்ற அவர்களுக்கு உதவியாக இருக்கமுடியும்.

ஆகவே வரவு—செலவுத் திட்ட விவாதத்துக்குப் பின்னர் எதிர்க்கட்சிகள் பொதுக்கூட்டங்களிலும், பிரசுரங்கள் பத்திரிகைகள் மூலமாகவும் செய்துவரும் இன, மதத் துவேஷத்தை முற்றாகக் கைவிட்டு புதிய பாதை பிடிப்பார்களென எதிர்பார்க்கின்ருேம்.

# தமிழுக்கு கிடைக்கும் இடம் தரமானதாக இருக்கட்டும்

அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்க உதவியுடன் இயங்கும் கூட்டரவுகள் முதலானவற்றில் இனிமேல் தமிழ்மொழிக்கு சரியாசனம் வழங்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. கடந்தவாரம் அரசாங்கப் பாராளுமன்றக்குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறிய கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர், பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களுடைய பிரேரணையே நமக்கு நம்பிக்கை ஒளியைக் கொடுத்திருக்கிறது.

அரசாங்கத்தால் வெளியிடப்படும் சகல படிவங்கள், அறிக்கைகள், பத்திரங்கள் சீட்டுக்கள் யாவும்தமிழிலும் அச்சிட்டு வெளியிடப்படும். எந்தத் திணைக்களத்துடனும் தமிழில் தொடர்புகொள்ள எதுவிதமான தடங்கலும் இருக்கப் போவதில்லை. அரசாங்கத் திணைக்களங்களைக் குறிக்கும் பெயர்ப்பலகைகளிலும் தமிழ் பொறிக்கப்படும்.

இவற்றைக் கேட்கவே செவி இனிக்கிறது. இத்தகைய சூழ்நிலை ஏற்படுமா என்று தமிழ்பேசும் மக்கள் இதுவரை கனவுகண்டு கொண்டிருந்தனர். இதோ சட்டபூர்வமான உறுதி கிடைக்கப்போகிறது ஆகவே தமிழ்பேசும் மக்களுக்கு அரசாங்கத்துடனும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுடனும் தொடர்பு கொள்ளுவதற்கு, இதுவரை இருந்து வந்த முட்டுக்கட்டை அகற்றப்படுகிறது என்று உவகை கொள்ளலாம்.

## துர்ப்பாக்கியம் தொலையும்

தமிழ்மொழியை மட்டும் தெரிந்து கொண்டவர்கள் அரசாங்கத்துடன்தொடர்பு கொள்ள முடியாது பெரும் துன்பங்களை அனுபவித்துவந்தனர். ஆங்கிலம் தெரிந்திருந்தாலாவது சில பலவேலைகளை முடிக்க வழியிருந்தது. சிலபகுதிகளில் சிங்களத்தைத் தவிரவேறு எம்மொழியும் நுழைய முடியாத துர்ப்பாக்கிய நிலைமை நீடித்து வந்தது. இனிமேல் தமிழ் மட்டும் தெரிந்தவர்களும் அரசாங்கத்துடன் நேரடியாகத் தொடர்புகொள்ள முடியுமென்பதனுல், பல கருமங்கள் இலகுவாக ஈடேற வாய்ப்புண்டு.

பண்டிதர் இரத்தினம் அவர்களுடைய பிரேரணையில் தமிழ்உபயோகம்பற்றிக் கூறும்போது நிரந்தரக்காரியதரிசிகள், அரசாங்கத்திணைக்கள அதிகாரிகள், கூட்டுத்தாபன அதிபர்கள், வங்கி முதல்வர்கள் ஆகியோருக்கு மந்திரிசபை உடன் கட்டளைகள் பிறப்பிக்கவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறுர். கடந்தஅரசாங்கக்குழுக் கூட்டத்தில் இப் பிரேரணை முதன்மையாகப் பரிசீலிக்கப் பட்டதுபோல், உத்தரவுகளும் தாமதமின்றி அனுப்பி வைக்கப்படுமென நம்புகிறேம்.

மந்திரிசபை இடும் கட்டளைகளை உடனடியாகநிறைவேற்றிவைக்கும் பொறுப்பை நிரந்தரக் காரியதரிசிகளோ, திணைக்கள அதிகாரிகளோ ஏனையவர்களோ கடைப்பிடிப்பார்கள் என்று அறுதியிட்டுக்கூற எவராலும் முடியாது. ஆகவே இந்தக் கட்டத்தில்தான் தமிழ் உபயோகம் தமுக்கமாகலாம் என்று கருத இடமுண்டு.

சுதந்திரன் அரசியல் நிருபர்

## எச்சரிக்கை அவசியம்

அமைச்சரவைக் கட்டளைகள் நிறைவேற்றப்படாயல் நிர்வாகிகள் முட்டுக்கட்டை போடும்போதெல்லாம் தமிழரசுத் தலைவர்களும் தமிழ் பேசும் பொதுமக்களும்சற்று எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவேண்டியது அவசியம். அத்துடன் தமிழில் மொழிபெயர்ப்புகள் செய்யப்படுவதையும் தலைவர்கள் கருத்துடன் கண்காணிக்கவேண்டும்.

ஆட்சி மொழித்திணைக்களம், சுயபாஷா திணைக்களம் ஆகியன மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும் செய்யவென இயங்குகின்றன. அப்படியிருந்தும் அரசாங்க மொழிபெயர்ப்புகளிலும் பெயர்ப் பலகைகளிலும் தமிழ்க்கொலை சர்வசாதாரணமாக நடைபெற்று வருகிறது. பல திணைக்களங்கள் மேற்படி மொழிக் குழுக்களை அணுகுவதில்லை என்றே தெரியவருகிறது. ஆகவே ஒவ்வொரு திணைக்களமும் மேற்படி மொழித் திணைக்களங்களின் ஆலோசனைகளை அனுசரித்து இயங்குவது அவசியம் என வற்புறுத்த விரும்புகிறேம்.

## புரியும் தமிழ் வேண்டும்

இதே வேளையில் ஆட்சி மொழித் திணைக்களம் போன்றவற்றில் பணிபுரிவோர் பாமரமக்கள் இலகுவில் படித்துப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் தங்கள் மொழி அமைப்புகளைக் கையாளுதல் இன்றியமையாததாகும்.

இனிமேல் அரசாங்கத்துடன் தமிழிலே கருமமாற்றலாம் என்று அவாவுறும் எந்தத் தமிழனும், திணைக்களங்களின் முன் தொங்கும் தமிழ்ப் பெயர்ப் பலகைகளில் உள்ள தமிழ் வார்த்தைகளின் பொருள்காண, பண்டிதர்களைத் தேடிப்பிடிக்கும் நிலை ஏற்படாதிருக்கட்டும்.

## சாபக்கேடு ஒழியுமா?

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தை வாட்டி வதைத்துச் சின்னபின்னப் படுத்தும் நோய்களுள் சாதிப் பாகுபாடுமிகவும் கொடூரமானதாகும். இக்கொடிய வியாதியினுல் தமிழ்ச் சமுதாயத்துக்கு ஏற்பட்டிருக்கும் அவலத்தை மென்மேலும் வர்ணிக்க விரும்பவில்லை. ஆனுல் இக்கொடுமையைவிரைவில் நீக்க வழி தேடுவதில் தாமதம் காட்டுவதும் முறையாகாது.

தமிழரசுக்கட்சி தனது ஆரம்பகாலத்திலிருந்து இச்சாதிச் சனியனை ஒழித்துக்கட்ட பலதரப்பட்ட முயற்சிகளிலும் முனைந்துகொண்டே வந்தது. தீர்மானங்களை நிறைவேற்றுவதுடன் நின்றுவிடாது நடைமுறையிலும் பல செயற்கரிய காரியங்களைச் சாதித்தே வந்தது. இருப்பினும்இச்சாதிக்கொடுமையின் கோரத்தாண்டவத்தை முற்றாக ஒழித்துவிடமுடியவில்லை.

அமரர் வன்னியசிங்கம் சாதிக்கொடுமையினை வன்மையாகச் சாடியவர். உயர்ந்த வகுப்பிலே பிறந்தவரான திரு. வன்னியசிங்கம், சாதி ஒழிப்பு நடவடிக்கைகளில் பகிரங்கமாக ஈடுபட்டு, தமது வாழ்நாளிலேயே சமத்துவத்தைக் கடைப்பிடித்தமையினுல் தமது உற்றார்உறவினர்களால்—உயர் குடிப்பிறப்பாளர் என்போரால் புறக்கணிக்கப்பட்டது முண்டு. உயர் சாதிக்காரர் என்று கருதப்படுபவர்கள் பலமுறைகளில் திரு. வன்னியசிங்கம் அவர்களுடைய சாதி ஒழிப்பு நடவடிக்கைகளைப் பரிசோதித்து தோல்வி கண்ட சம்பவங்களும் நடைபெற்றன.

சாதிக் கொடுமையை ஒழித்து சமூகச் சீர்திருத்தக் கொள்கையை அனுட்டிப்பதில் பேரார்வம் காட்டிய அமரர் வன்னியசிங்கம் நினைவு நாளான செப்டம்பர் 17-ம்தேதியை உள்ளடக்கிய வாரத்தை சமூகச்சீர்திருத்த வாரமாக அனுட்டிக்க தமிழரசுக் கட்சி மத்திய செயற்குழு முன் வந்திருப்பது பாராட்டுதற்குரியதாகும். இச்சமூக சீர்திருத்த வாரசெயற்திட்டத்துக்கு அரசாங்கத்தின் உதவியையும் பெற தமிழரசுக் கட்சி முயன்று வருவதாகவும் கூறப்படுகிறது சாதிக்கொடுமையை ஒழித்துக்கட்ட தமிழ் பேசும் மக்கள் அனைவரும் விரிந்த மனப்பண்புடன் ஒத்துழைப்பு நல்குவார்களென எதிர்பார்கிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறிவியலும் ஆத்மீகமும் ஒன்றோடொன்று போட்டியிடும் இரு சக்திகளல்ல. உண்மையை உணர இரண்டும் ஒவ்வொரு கோணத்திலிருந்து முயல்கின்றன. மனித இனத்தின் நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் இவை இரண்டும் ஆக்கமளிக்கின்றன. இதை உணராத சிலர் இவற்றைக் கண்டு அஞ்சுகிறார்கள். மதம் ஒரு சில இடங்களில் எங்ஙனம் தவறுகிறதோ, அவ்வாறே அறிவியலும் சிலரது கையில் அகப்பட்டு ஆபத்தை உண்டாக்க முயலுகிறது என்றாலும் உலக அமைதிக்கு மதமே வழிகாட்ட முடியும்."

# "சகிப்புத்தன்மை வேண்டும்"

# அகிலத்தின் அமைதிக்கு ஆன்மிகமே வழி

## விவேகானந்த சபையில் டாக்டர் சச்சார் பேச்சு

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் கொழும்பு கமலாமோடி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் டாக்டர் பிம்சென் சச்சார் கூறினார்.

நீதியரசர் திரு. பி. சிறிஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் 'சமாதானத்துக்கு வழி' என்ற தலைப்பில் டாக்டர் சச்சார் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். நாற்பத்தைந்து நிமிடங்களுக்குமேற் பேசிய டாக்டர் பிம்சென் சச்சார் மேலும் கூறியதாவது:-

'அறிவியலை அழிவுப்பாதையில் பயன்படுத்துவது கண்டிக்கப்பட வேண்டியது. இது அறிவியலின் உண்மையான நோக்கத்திற்கும் தத்துவத்திற்குமே முரண்பட்டதாகும். எந்த மத தத்துவமும் வலிமையைத் தவறான பாதையில் செலுத்துவதை அதர்மம் என்று கண்டித்துள்ளன. அறிவியலும் வலிமை மிகுந்த சக்தியாகும். எனவே அறிவியலைத் தவறான வழியிற் பயன்படுத்தக் கூடாது.

'மதத்தைச் சரியானபடி உணர்ந்தால் பிரச்சினைகளுக்கு இடமில்லை. எந்தமத தத்துவமும் அமைதியையும் அன்பையுமே போதிக்கின்றன. உலகில் இன்றுள்ள பிரச்சினைகள் எல்லாம் மதத்தால் தோன்றியது என்ற கூற்றுத்தவறாகும். மத தத்துவங்களைச் சரியானபடி உணர்ந்து, தெரிந்து, புரிந்து நடந்தால் பிரச்சினைகளுக்கே இடமில்லை. உண்மையை உணராமையே பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம்.

'உலக சமாதானத்துக்கு சகிப்புத்தன்மையே முக்கியம். இதன் அடிப்படையிலேயே சமாதானத்துக்கானவழியைத்தேடமுடியும். சகிப்புத்தன்மைக்கு மதக் கோட்பாடுகளைஅனுசரித்து நடந்து ஆன்மீக சுத்திகரிப்பைப் பெற வேண்டும். இந்த வகையிலேயே சகிப்புத் தன்மையைப் பெற முடியும்.

'சமாதானத்துக்கான வழி சமய அடிப்படையில் தொடர்ந்து செயல் புரிவதும், மனித குலத்துக்கு பணி செய்வதில் தன்னை அர்ப்பணிப்பதுமாகும். இந்த வழி கடினமான தாயும், நீண்டதாகவும் இருக்கலாம். மக்கள் சேவையே மகேசுவரன் சேவை என்று சுவாமி விவேகானந்தரும் கூறியுள்ளார். இந்த முயற்சிக்கு அறிவியல் அபிவிருத்தியைப் பயன்படுத்துவது எந்தவகையிலும் தவறாகமாட்டாது. காரணம், அறிவியல் வளர்ச்சி மக்களினத்தின் அறிவுவளர்ச்சியையும் விருத்தியையும் பறையறைகிறது.

'தனித்துவமும்மிக முக்கியமானதாகும். தனித்துவத்தைப் போற்றுதவரையில் சமாதானத்தை நெருங்க முடியாது. தனித்துவத்தின் முக்கியம் மததத்துவங்களுக்கும் ஏற்புடைத்தாகும்.

'நம்மிடமுள்ள உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி ஆத்மீக வளர்ச்சியில் ஈடுபட்டால் உண்மையான சாந்தியையும் சமாதானத்தையும் கண்டுகொள்ள முடியும். இதற்கு மக்கள்குலம் முயல வேண்டும். உலகசமாதானத்திற்கு, ஒற்றுமைக்கு வேறு வகையில் நாம் எடுக்கும் முயற்சிகள் பயன்கொடுக்காது. இதர முயற்சிகள்

(12-ம் பக்கம் பார்க்க)

## இராகலையில் கலைவிழா

தீபாவளித் திருநாளன்று இராகலை நகரில் இ. தொ. கழகக் கலை விழா வென்று நடத்துவது சம்பந்தமாக எதிர்வரும் 22-8-65 காலை 10-00 மணிக்கு, கழகத்தின் நுவரெலியா, இராகலை உடபுசலாவை மாவட்டத் தலைவர்களினதும், மாவட்டச் செயலவையினதும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில், கீழ் கண்ட விடயங்கள் பற்றி விவாதிக்கப்படும்.

கலைவிழாவை முதல் தினம் பகல் கதம்ப விழாவாகவும் அன்று இரவு நாடக விழாவாகவும் கொண்டாடுவது, கதம்ப விழாவில் வெற்றி பெறும் கலைஞர்களுக்குப் பரிசில்கள் வழங்குவது, நாடக விழாவில் வெற்றியீட்டும் சிறந்த இரண்டு நாடகத்துக்கு தங்கம், வெள்ளிப்பதக்கங்கள் வழங்குவது, மலைநாட்டில் எந்தப் பகுதியின் இருந்து கலை நிகழ்ச்சிகள் வந்தாலும் ஏற்றுக்கொள்வது.

விழாவின் வெற்றிக்கு நுவரெலியா, கந்தப்பளை, இராகலை, உடபுசலாவை ஆகிய நகர முதலாளிகளினதும், சிப்பந்திகளினதும் உதவிகளைக் கோருவது. கட்சிப் பாகுபாடின்றி நடைபெறும் இவ்விழாவிற்கு ஏனைய தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்பைக் கோருவது. விழாவின் கௌரவ விருந்தாளியாக உள்ளூராட்சி அமைச்சர் திருச்செல்வம் அவர்களை அழைப்பது.

## தமிழரசுக்...

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே வழி இலங்கையரை ஒரே இலங்கையர் இனமாக கருதும்படியும் தங்களின் உரிமைகளைவிட இலங்கையர் இனத்தின் உரிமைகளை முக்கியமாகக் கருதும்படியும் தமிழ் மக்களுக்கு வழிகாட்டுவதேயாகும்.'

## தமிழரசுக்கட்சி பொதுக்காரிய சபை கூட்டம்

இலங்கை தமிழரசுக்கட்சியின் அடுத்த பொதுக்காரிய சபைக் கூட்டம் செப்டம்பர் 19ம் திகதி யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவிலிருக்கும் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நடைபெற விருப்பதாகத் தெரிகிறது. 18-ம் திகதி மத்திய செயற் குழுக் கூட்டமும் நடைபெறும். தற்போதுள்ள அரசியல் சூழ் நிலைகளையொட்டி பல விடயங்கள் இக்கூட்டங்களில் ஆராயப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

## விலைவாசிகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாற்ற வதாகத் தெரியவருகிறது.

புதிய வரவு செலவுத் திட்டத்தை அமுலாக்கும் வேளையில் நாட்டில் பண்டங்களின் விலை கணிசமாகக் குறைந்து வாழ்க்கைச் செலவும் குறைந்து விடலாம் என்று பொது மக்கள் பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். இப்படி நாடு மலிவடையும் பட்சத்தில், கூட்டரசாங்கத்தின் கையாலாகாத்தனம் வெட்டவெளிச்சமாகி விடக்கூடுமாதலால் கூட்டரசாங்க அனுதாபிகளும், ஆதரவாளர்களுமான வர்த்தகர்கள் சேர்ந்தே இத்துறையில் நடவடிக்கைகளை மேற் கொண்டிருப்பதாக அறியக்கிடைக்கிறது.

சில மாதங்களுக்கு முன்னர் காய்கறிகளின் விலைகள் தாறுமாறாக உயர்ந்தன. இந்தத் திடீர் உயர்ச்சிக்கும் இந்த வியாபாரிகளே காரணம் என்று கருதப்பட்டது.

தேசிய அரசாங்கத்துக்கு மக்களிடத்தில் ஏற்பட்டு வரும் மதிப்பை முறியடிக்க கூட்டாட்சி அனுதாபிகள் தற்போது கடைப்பிடிக்க ஆரம்பித்திருக்கும் உபாயங்களுள் இதுவும் ஒன்றெனக் கருதப்படுகிறது.

## சகலதிணைக்களங்களிலும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே இன்னும் அவர்களைக் காத்திருக்கச் செய்வது நியாயமற்றது.

'அரசாங்கக்கடிதப்போக்குவரத்துக்களிலும், படிவங்கள் முதலியவற்றிலும் சிங்களத்துக்குச் சமனாக ஆங்கிலத்திற்கு இடம் கொடுக்கப்படுகிறது. இது சிங்களம் மட்டும் சட்டத்திற்கு முரணானது அல்ல எனில் அந்த இடத்தை ஏன் தமிழுக்குக் கொடுத்தல் கூடாது?



"ஆங்கிலத்திற்கு இடம் தாருங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை. ஆங்கிலத்தின் இடத்தையாவது தமிழுக்குத் தாருங்கள் என்று தான் வற்புறுத்துகிறோம்.

'ஆங்கிலத்திற்கு இடம் கொடுப்பதற்கு எந்த விதமான சட்ட உரிமையும் இப்பொழுது இல்லை. ஆனால் தமிழுக்கு இடமளிப்பதற்கான ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அன்றியும் சிங்களமும் தமிழும் இந்நாட்டின் உத்தியோக மொழிகளாக 12 ஆண்டுகள் சட்ட உரிமை பெற்றிருந்தன. எனவே ஆங்கிலத்திற்குக் கொடுக்கும் இடத்தைத் தமிழுக்குக் கொடுப்பது எந்த வகையிலும் சிங்களச் சட்டத்துக்கு விரோதமாகாது.

'ஆங்கிலம் தெரியாத சாதாரணபொது மக்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பை அனுப்புவது சனநாயகக் கொள்கையாகாது.

'[illegible] அமைச்சாதும் அலுவல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்களில் உள்ள பெயர்ப்பலகைகளில் தமிழ் இடம் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் நிறைசேரி, உள்நாட்டமைச்சரின் அலுவலகங்களில் தமிழ் ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றையும் நமது அமைச்சர்கள் கவனித்து ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். எனது பிரேரணை நியாயமானது என ஏற்றுக்கொள்வீர்கள் என்று எண்ணுகிறேன்.'

பிரேரணையின் விபரம் வருமாறு;

'நிரந்தரச் செயலாளர்கள், அரசாங்க திணைக்களங்கள், வங்கிகள், கூட்டரவுகள் முதலியவற்றின் தலைவர்கள் ஆகியோருக்கு அமைச்சரவை பின்வருமாறு கட்டளை பிறப்பிக்கவேண்டுமென அரசாங்க பாராளுமன்றக் குழு தீர்மானிக்கிறது:

அ. தமிழில் கிடைக்கும் கடிதங்கள் விண்ணப்பப் பத்திரங்கள், மற்றும் பல வகையான கடிதத் தொடர்புகள் யாவற்றிற்கும் பதில்கள், அனுமதிச்சீட்டுக்கள், உத்தரவுப பத்திரங்கள் முதலியவற்றைத் தமிழில் அனுப்ப வேண்டும்.

ஆ. பொது மக்களுக்காக வெளியிடப்படும் படிவங்கள், அறிக்கைகள், அரசாங்கவர்த்தமானி மற்றும் ஏனைய பிரசுரங்கள் யாவும் தமிழில் வெளியிடப் படல்வேண்டும்.

இ. எல்லா அரசாங்க திணைக்களங்களிலும், பொது நிலையங்களிலுமுள்ளபெயர்ப் பலகைகள் தமிழிலும் பொறிக்கப்படவேண்டும்.'

இத்திர்மானம் கூட்ட நிகழ்ச்சியின் 45-வது பிரேரணையாக இருந்ததாகவும் அன்றைய கூட்டத்தில் விவாதத்திற்கு எடுப்பதற்கான சாத்தியக் கூறு இருக்கவில்லையென்றும் ஆனால் திரு. இரத்தினம் பிரதமரிடம் இது பற்றிக் கதைத்திருந்த காரணத்தினால், பிரதமர் இப்பிரேரணை நிறைவேற்றப் படுவதில் விசேட கவனம் காட்டினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரேரணை முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டதும் எந்த வித விவாதமும் இன்றி நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழாசிரியரின் சீனச் செலவு



அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிருவாகச் செயலாளரும் கிழக்கிலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பொதுச் செயலாளருமான திரு. டொ. செ. க. வணசிங்கா சீன கல்வித் தொழிற்சங்கத்தின் அழைப்பின் பேரில் மூன்றுவார நல்லெண்ண சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொள்ளும் பொருட்டு கடந்தவாரம் சீனு சென்றுள்ளார்.

திரு. வணசிங்கா சீனாவில் தங்கியிருக்குங்கால் அந்நாட்டிலுள்ள கல்வி நிலையங்களுக்குச் சென்று அந்நாட்டுக் கல்விமுறை பற்றி விரிவாக ஆராய்வார் என்று தெரிகிறது. அத்துடன் அந்நாட்டு ஆசிரியர்களின் வாழ்க்கை முறைபற்றியும், அவர்களின் தொழிற் சங்க அமைப்புப் பற்றியும் கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி அறிந்துகொள்ள முயற்சிப்பார்.

மட்டக்களப்பு சென். மேரிஸ் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு. வணசிங்கா ஓர் பயிற்றப்பட்ட ஆசிரியராவர். கடந்த 12ம் திகதி காலை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து தனது பிரயாணத்தை ஆரம்பித்துள்ள இவர் சிங்கப்பூர், கோலாலம்பூர், கொங்கொங் ஆகிய இடங்களுக்கும் விசயம்செய்வார்.

# ஊரும் உலகமும்

**இவ்வாரச் சிறுகதை**

**கே. வி. நடராசா**

'என்னடியக்காள் ராத்திரி இரண்டங் கெட்டாப்போலே இஞ்சை நாய்கடி பூனைகடியாய்க் கிடத்திது' என்று கேட்டுக் கொண்டே வந்த செல்லம்மா 'ஒட்டில்' குந்தினள்.

முற்றத்தில் பரப்பி வைத்திருந்த அரிசியில் கறுப்பு அரிசியைப் பொறுக்கி வாயில் போட்டு வேட்டைப் பற்களுக்கு வேலை கொடுத்துக் கொண்டே பூரணம் சொன்னாள்.

'உம், அந்த வெட்கக் கேட்டை என்னத்தைச் சொல்ல, அந்தக் கொள்ளையிலே போவானெல்லே வந்திட்டான்.'

கள்ளன் கள்ளன் பிடிபிடியெண்டு மருமொன்ரை சத்தமும் கேட்டுது. போலை கிடக்குது... எட்டி மிதிச்சு வரலாமெண்டுதான் பாத்தன், அவரும் வீட்டிலையில்லை. பொடியளும் தனியக் கிடந்துதுகள்...பின்னைத்தான் விளக்கைக் கொழுத்தி வைச்சிட்டு இருந்திட்டன்.'

'உண்ணாணையடியக்காள் கோவிக்காதை, உள்வீட்டுக் கள்ளனோ? புறத்தியானோ? சரியான சொத்து நித்திரையிக்கிளை தான் வந்திருக்கிறான்.' என்று தொடர்ந்த செல்லம்மா "என்னடியக்காள் என்னத்தையாச்சும் கொண்டு போட்டானோ...?' என்றாள்.

'என்ரை எல்லாத்தையுந்தான் கொண்டு போட்டானேடி பாழ்படுவான்... எனி எந்த முகத்தோடை இந்த வீட்டிலை வாழ. என்ரை மானம் மரசாதியெல்லாம் இராத்திரியோடை கப்பலேறியிட்டுதடி, செல்லம்மா' என்று பூரணம் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்.

'என்னடியக்காள் சொல்லுறாய்?' என்றாள் செல்லம்மா கண்களில் ஆவலைத் தேக்கியபடி.

'உந்த ஊர் பதினெட்டுத் தேசங்களும் அறியக் கூடியதா, உங்களுக்குந் தெரியுந்தானேயடி, உவனுக்குப் படிச்சம்பளம் கட்டிக்கொண்டிருக்கிறது. தம்பிக்குச் சும்மாயிருந்து சப்பச்சப்ப கொழுப்பு முறுகி முந்திப்போச்சு; ஆக்கும்! பெண்ணுல்லே வேணுமாம்'

ஆரையடியக்காள் சொல்லுறாய்? எல்லுப் போலை ஆவாரமாத்தான் சொல்லனடி?' என்ற செல்லம்மா, உடலின் அசைவைக் கூடநிறுத்தி நாடிக்குக் கைகொடுத்துக் காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

'என்னத்தையடி சொல்ல, அந்த நாணயசீலைக் கேட்டைக்,...கிழவன் துள்ளி விளையாடத் திரியிறில்லே, என்ரை பணவாளன்தான், இராமன் வந்தல்லே கால்லே தட்டுறார்.'

கெக்கெட்டம் விட்டு வஞ்சகமில்லாமல் சிரித்த செல்லம்மாவுக்கு கதையில் உருசி பிறந்துவிட்டது போலும்.

'என்னடியக்காள், உண்ணாணை சே...!'

'கண்ணாணை, ஓமடியெண்டுறன்... பேந்தும் பாரன் சிரிக்கிறாள். பிள்ளை குட்டியள் மக்கள் மருமக்கள் இருக்கிற இடத்திலே உவன் பாவி உப்புடி செய்யலாமே? உண்ணாணையெடிபிள்ளை தெரியாமற் கேட்கிறன் உவ்வளவு காலமும் வாழ்ந்து பத்தைப் பெத்தது போதாதே? அதுகளும் பெத்துக் கொண்டிருக்க நாங்களும் பெத்துக் கொண்டிருந்தால் ஊர் தேசம் என்ன சொல்லும் சொல்லுபாப்பம்! மூத்தவளின்ரை பிரியன் அண்டைக்குப் பகிடியாக அவளைக் கேட்டும் போட்டுதாம் எண்டு சொல்லி அவள் சிரித்தாள்.

'உனக்கேனடி செல்லம்மா ஒளிக்க வேணும், போனகோ செல்லேஉவன் பாவி உப்பிடித்தானே வெறியிலை வந்து என்னையெண்டு நினைச்சுத்தானே-அவன் மூத்தவன் துரை சிங்கத்தின்ரை பெண்டிலையெழுப்பி ஏதேதைப்பட்டு விளக்குமாத்து அடியும் வாங்கிக் கொண்டு போனவன். அதுக்குப்பிறகு ஒருத்தனுக்கு பெண்ணுசையும் வருமேயடி உண்ணாணை தெரியாமாக் கேக்கிறேன்...?

'அப்ப நீ ஒரு மட்டு மரசாதியான ஆளாயிருந்தாயல்லோ அவர்களும் பெடியன் அரைக்கண்ண வவக் கண்பார்த்து ஒதுங்கிப் போவார்கள். அதை இன்னும் விட்டு எருதுமாதிரி திரிஞ்சால்... நான் விடிஞ்செழும்பி ஒருத்தன்ரை முகத்திலையும் முளிக்கிறதில்லையே? உண்ணாணையெடிபிள்ளை சொல்லு பாப்பம்?

'உன்ரை கொடுமை தாங்கமாட்டாமத்தானே நான் அதுகளின்ரை வீட்டிலை வந்து அடைக்கலம் மாதிரி குடியேறியிருக்கிறன். அது பாவம்; ஆர்? என்ரை மூத்தவளின்ரை புரியன்தான் தங்கப்பவுண் தான். அதெண்டபடியால் அதுகளின்ரை சோத்திலை நானும் தின்டு உனக்கு மெல்லலே அந்தக்கறிச் சட்டியிலே ரும்பக்குவியப் போட்டு அனுப்புறனான். ஆ! அப்ப நீ ஒரு பரத்தை வீட்டுக்கு போறதுமாதிரி ஏமாசாமத்திலேகுழந்தை குட்டியள் இருக்கிற இடத்திலை வந்து—ஏதாவது—எச்சில் பே, பிசாசு கூடி வந்தாலும—இல்லையடி பிள்ளை சொல்லுறன் ஒரு கதைக்கு; எள்ரை காலிலை பிடிச்சுச் சுறண்டுறு, நீ ஒரு மனுசனே, உண்ணாணை கேக்கிறன்?' என்ற பூரணம் கிணற்றெடியில் கேட்ட குரலைக் கேட்டு கதையை நிறுத்திக் கொண்டு அத்திசையாக முகத்தைத் தூக்கிப்பார்த்தாள். ஏங்கி இடிவிழுந்து போயிருந்த செல்லம்மாவும் கிணற்றடியைப் பார்த்து 'உதாரணையுது?' என்று கேட்டாள்.

'எடிபிள்ளை செல்லம்மா இஞ்சைவாடி இரண்டு பட்டை தண்ணி ஊத்தி விடடி இந்தக் குடத்துக்கு' என்றாள் சின்னத் தங்கம்.

'ஏனடி அக்காள் அள்ள மாட்டியே?, என்றவாறு எழுந்து வந்தாள் செல்லம்மா.

செல்லம் துலாக்கொடியைப் பிடிக்கும் போதே சின்னத்தங்கம் கதை கொடுத்தாள்.

'என்னடி பிள்ளை ராத்திரி நல்லா இரண்டங் கெட்டாப் போலை பூரணையக்கை வீட்டை கூவா குளங்கரையெண்டு கேட்டுது?'

'அதுதாண்டியக்காள் நானும் விசாரிச்சனான்; பேந்தார், பெரியப்புதான் வந்தவராம்.'

'ஆக், ஆக், வந்துவிட்டாராமே? அவர் கிடவார் குரு, குருப்பிலேயில்லை திரியிறுங்கள் உவங்கள். அங்கையுமொருத்தன் இருக்கக் கிடக்க விடுறான்னில்லை உவ என்னவாம் சூர்பனகி சொல்லிச் சொல்லி பிதுக்கித் தள்ளுவாவே! உவள் சரியானவளெண்டால் உதொண்டும் உப்புடி நடக்காது. உவநேரத்துக்கொரு கோலத்திலே மாய்மாலம் பண்ணுவா. சரி சரி இந்த சும்மாட்டுக்கு ஒரு கைபிடிச்சு விடடி புள்ளை...நான் வாறண்டியாத்தைத அவன் மனுசன் அங்கை ஏறி விழப்போறான். என்னும் தேத்தண்ணிக்கு உலைகூட வைக்கயில்லை, உந்தப் புது நாணயக் கதையளைக் கேட்டுக் கொண்டு நிண்டால் பூமி சிரிக்கும்' என்று சொல்லிக் கொண்டே நடந்துவிரைந்தாள் சின்னத்தங்கம். செல்லம்மாவின் கால்கள் பூரணத்தின் வீட்டுப்பக்கமாக நடந்தன. விட்டகதை தொட்டகதை என்ற ஒன்றிருக்கிறதே! அதை முற்றக் கேட்காமல் விட்டுப் போக மனம் வருமா?

'பேந்தடியக்காள்?' என்று கொண்டே செல்லம்மா நன்று ஆரச் சோரக் கால்களை நீட்டி திண்ணைக் கப்புடன் சாய்ந்து கொண்டாள்.

'பேந்தென்னடி பேந்து! அது கிடக்கட்டும் உவள் என்னவாம், உவள்தான் சின்னத்தங்கம். ஏதோ மொழுமொழுத்துக் கேட்டாப் போலை கிடக்கு.'

'அது பாவம்! தன்ரை பாடு பறப்பைச் சொல்லியிட்டு போகுது. எல்லாம் வீட்டுக்கு வீடு வாசல்படி எண்டதைத்தான் சொல்லிச்சுது.'

'உவளுக்குத்தான் ஒரு கண்டறியாத பாடுபறப்பு நெடுகிலும். ஏன் அவன் வாரி வாரிக் கொட்டுறான் தானே! என்னும் கண்ணடையெல்லையாமே! உப்புடிச் சம்பாதிச்சு ஆருக்குத்தான் குடுக்கப் போறுளோ!'

'எனை நீ ஒண்டு... அது பாவத்தார் உன்ரை சங்கதியளைக் கேட்டிட்டுத்தான் கவலைப் பட்டிட்டுப் போகுதெண்டுறன்...'

'ஒரு வஞ்சகம் சூது இல்லாதது, ஆர் என்னத்தைச் சொன்னாலும் அப்பிடியே நம்பியிடும் அவளை மனத்துக்குத் தக்கதுதான் ஆண்டவன் எந்தக் குறையுமில்லாமலுக்குக் குடுத்திருக்கிறான். 'என்ற பூரணம்,

'பேந்தென்னத்தையெடி பிள்ளை சொல்ல, அந்த வெக்கக் கேட்டை என்ரை வாயாலேயே நீ முழுதுங் கேட்டு அறியவேணுமெண்டு நினைக்கிறு இல்லையே?

'அப்ப நீ ராத்திரிவாறுய் அந்தச் சாமத்திலை, உண்ணாணையெடி பிள்ளை நம்பினு நம்பு நம்பாட்டாப் போ, வீட்டிலை உதுகளுக்கு பிள்ளைக்கோ மருமோனுக்கோ நான் சங்கதியை சொல்லவில்லை. கள்ளனெண்டுதான் நானும் கத்திவிட்டன். அப்ப ராத்திரி மருமோன் கத்தியோடை ஓடியாந்த மாதிரிக்கு நீ ஓடாமல் நிண்டிருந்தால் இவளவத்துக்கு என்ன நடந்திருக்கும் சொல்லு பார்ப்பம்.

'அப்ப நான் உன்னை இன்னும் வேணும் விளையுமெண்டு நினைச்சு நடக்க நீ இப்பிடிச் செய்யிறு. கடவுளிருந்தால் இதுக்கெல்லாம் தண்டனையில்லாமலே போகும். இண்டைக்கு உனக்குத்தாண்டி செல்லம்மா சொல்லுறன் என்ரை வெக்கத்தை விட்டிட்டு. மூண்டு மாதத்துக்கு முந்தி ஒரு நாள் வாராய்...இஞ்சை ராத்திரியைப் போலைதான் ஒரு சாமத்திலை; நானும் அந்த நேரம் பார்த்து வெளியாலை போறன் பாரன்...! அந்தப் பாழ்படுவான் அவக்கெண்டு எழும்பி என்ரை வாயைப் பொத்திக்கொண்டு முகுந்தைக் காட்டிப் போட்டு சத்தம் போடாதையெண்டு வில்லுக் கத்தியை எடுத்துக்காட்டுறு... நான் என்ன செய்வன் பயக்கெடுதியிலை அதின்ரை முடிவைத்தான் இஞ்சை பாரண்டி என்ரை வயித்தை' என்ற பூரணம் சீலையை நெகிழ்த்திக் கரட்டிக் கொண்டே வயிற்றில் 'தொம்'... 'தொம்' என்று பலமாக அடித்தாள். அதற்குள் செல்லம்மா அவள் கைகளை இறுக்கப் பிடித்துக் கொண்டுவிட்டாள்.

'நல்ல வேலை செய்தாயெடியக்காள்...என்ன ஆருக்கும் வம்பிலை வரத்திலை வாங்கினது மாதிரியெல்லே சாகப்பாக்கிறு' என்று தடுத்து நிறுத்தினள்.

'நான் எனிச் செத்தென்னடி இருந்தென்ன?...இனி இந்த வீட்டிலை எந்த முகத்தோடையெடி உலாவுகிறது? நீ தான் சொல்லடி பார்ப்பம், அது மாத்திரமே! 'ராத்திரியெல்லே வந்தனி, வந்திட்டுச் சொல்லுறு. இண்டைக்கு நீ இணங்கையில்லையெண்டா ஊருக்கை கதைச்சு உன்னை மானங்கெடுத்துவ'னெண்டு...

'என்னண்டுநினைக்கிறு?... அதை நினைச்சாத்தான்ரி செல்லம்மா எனி நான் இந்த உசிரை ஆருக்காக வைச்சுக் கொண்டிருக்க வேணுமெண்டு தோணுது. எளியவன்? எளியவன்! உப்புடியும் சொன்னனே! அவன்ரை நாக்கிலை புத்தாம் பழம் வர, பின்னையென்னடி பிள்ளை எனக்கு அறம்புறமாத் திட்டத்தான் மனம் வருது'.

'மருமோனுக்கு பின்னாத்தாச்சியாயிட்டாள் எண்டு சொல்லி என்னை ஊரு உலகத்திலை கதைக்க மானங் கெடுத்துவானும். எப்பிடியிருக்குதடி கதை?...அப்பவே நான் சுட்டிருப்பேன் அந்த வாய்க்கு, அந்த நேரத்திலை என்னடி செய்யிறது.'

ஆ! என்னடியக்காள் சொன்னாய்? அப்படியும் கதைச்சுப் போடுவராமே ரசிர்! துரும்பு நாய்' என்று செல்லம்மாவும் தன் ஆக்கிரோசத்தைக் காட்டினாள். அவன் மனுசன் கதைச்சால் ஆரும் நம்புறத்துக்கும் இடமிருக்கத்தானேயடி பிள்ளை. அவனைத்தானே இஞ்சை யொருத்தரும் வரக் கூடாது போகக் கூடாதெண்டு கண்டிமைப்படுத்தி சொல்லிப் போட்டினம். அப்ப நானும் அவரும் ஒரு வீட்டிலை இல்லாமலுக்குப் போய் ஒண்டரை வருசமாச்சு; ஆர்தான் நம்ப மாட்டார்கள் சொல்லு பார்ப்பம்', என்று நிறுத்தி பெரு மூச்சொன்றை விட்டாள் பூரணம்.

அப்படியுமொருத்தர் இருக்கிறாக்கும், பொறு பொறு நாளைக்கு நான் அவரைக் கண்டு சொல்லுறன் மறுமொழி. நீயடியக்காள் அங்கை போயிருந்து பெத்துப் போட்டு வா, பேந்து பேய்த்தனமா யோசிச்சு சாகிற கிேற முடிவைத்

(14-ம் பக்கம் பார்க்க)

**இது ஒரு சுவையான கதை—**

**'மூண்டு மாதத்துக்கு முந்தி ஒரு நாள் வாராய்...இஞ்சை ராத்திரியைப் போலைத்தான் ஒரு சாமத்திலை...நானும் அந்த நேரம் பார்த்து வெளியாலை போறன் பாரன் அந்தப் பாழ்படுவான் அவக்கெண்டு எழும்பி...'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'பட்டுத்து சிலிணைத் தட்டிப்போ டிசெய்து
பாங்குட லைச்சமைத்து; கூர்
மொட்டுக்க ளையரு காகவி ளைத்திரு
மோகன பார்பழைத்து; எனைக்
கட்டிய ணைக்குங்க ரங்களை மெல்லிய
காந்தளி னுற்படைத்து; மனத்
தட்டினை விடெனக் கட்டிவ சிப்பவள்
தந்தாள்த மிழ்க் கவிதை!'

— ஜீவா. ஜீவரத்தினம்.

# 31. சன்னத கணேசன்

'மகாமேருவை மத்தாகவும், ஆதிசேடனைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலைத் தேவர்களும், அசுரர்களும் கடைந்தபோது பிறந்ததே அமுது; அது மது என்பது என் கண்டுபிடிப்படா குமரா!'

'உன்னுடைய இந்தக் கருத்து எனக்கும் உடன்பாடாக இருப்பதால்தான் நான் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகின்றேன் கடவுள் ஓர் உலோபி என்று!'

குமரனின்கூற்றைஅப்படியே ஜீரணித்துக் கொண்டவன் போன்று கணேசன் அந்த கோட்டலின் மோட்டோடு தன் கண்களை உறவாட விட்டுக்கொண்டிருந்தான்.

'மோட்டின் கட்டுமானம் நல்ல கெட்டியாகத்தான் இருக்கின்றது'

'அதே போன்றுதான் உன் கருத்தும் நல்ல கெட்டியாக இருக்கின்றது என்று எண்ணிக் கொண்டிருக்கின்றேன்'

'எதைச் சொல்லுகின்றாய்? கடவுள் ஓர் உலோபி என்பதையா?'

'ஓம்; பரோபகாரி என்று போற்றப்படும் கடவுள் ஓர் உலோபியாக இல்லை யென்றால், நம் அகத்தில் தோன்றும்தோல்வி மனப்பான்மை, கோழைத்தனம், சோர்வு இத்தியாதி நோய்க்கிருமிகளை ஒரு நொடியில் மரிக்கப் பண்ணி, மனத்தை ஆரோக்கியக் கசானுவாகவும், உல்லாசக் கேளிக்கை நிலையமாகவும் மாற்றவல்ல மதுவை ஒருவர் அருந்திய பின்னர் ஏற்படுகின்ற மனச்சிலிர்ப்பே சதா எக்காலமும் மனிதனுக்குள்ள இயல்பு என்ற ரீதியில் மனுத உணர்வுகளை அவன் படைத் திருப்பானல்லவா!'

'அதாவது மது அருத்தியதும் மனிதன் அடைகின்ற உற்சாக நிலையோடே இறைவன் மனிதனைப் படைத்திருக்கவேண்டும் என்கின்றாய்?'

'உன் கருத்தும் அது தானே!'

'அதேதான் என்கருத்தும். ஆனபடியால்தான் நான் சொல்கின்றேன், உலகில் வளங்களையும், வனப்புக்களையும், புதுமைகளையும், நுணுக்கமான இரசனை உணர்வுகளையும் படைப்பதில் வள்ளல் தன்மை காட்டிய இறைவன், நாம் மேலே பார்த்த 'மதுநிலை' விவகாரத்தில் மட்டும் சற்று உலோபித்தனம் காட்டி விட்டானே என்று!'

நண்பர்கள் இருவரும் அந்த நல்ல 'கலைநிலை'யிலும் நிதானம் தப்பாமல்; எடுத்துக்கொண்ட கருத்தில் சுருதி பிசகாமல் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

குமரனுக்கு உள்ளூர நல்ல மகிழ்ச்சி சற்றுமுன்னம்— அவர்கள் இருவரும் அந்த கோட்டலுக்கு வருவதற்கு முன்னம்- கணேசனுக்கிருந்த மனநிலையும், கதிர்காமத்தில் என்றோ எப்போவோ நிகழ்ந்துவிட்ட ஒரு பேரிழப்பை நினைந்துகொண்டு அவன் புழுங்கி மாய்ந்த அசிங்க நிலையும் மாறி இப்போ அவனிடத்தில் தோன்றியிருக்கும் குதூகல உணர்வை எண்ணி அதற்குக் காரணமாயிருந்த மதுவை உள்ளூர அவன் வாழ்த்திக் கொண்டான்!

அப்பொழுது அவர்கள் இருவருக்குமிடையில் நிகழ்ந்து கொண்டிருந்த மிகக்கருகலான உரையாடல் மதுவில் ஏற்பட்ட போதை நிலையை அடிக்கடி முறித்துக் கொண்டிருந்தது! எத்தனை குடித்தும் நிதானம் பிசகாமல் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்த அந்த உரையாடலின் நன்மையை ஒரு தடவை அவவித்த கணேசன் சொன்னான்: 'மச்சான் குமரா' அளவுக்குமீறிக் குடித்து விட்டவர்களின் போதையை வெட்டி முறிப்பதற்காக அவர்களுடைய உச்சந்தலையில் எலுமிச்சம் பழத்தை வெட்டித் தேய்ப்பதும், கொய்யா இலையைக் கசக்கி முகரக் கொடுப்பதும் தேவையற்ற சிகிச்சைகள் என்று எனக்குப் படுகின்றதடா!'

'ஏன் அதற்கு நீ ஏதாவது புது 'மெடிசன்' கண்டு பிடித்திருக்கின்றாயோ?'

'புதுமருந்து எதையும் நான் கண்டுபிடிக்கவில்லை; புது வழி யொன்றைக்கண்டு பிடித்திருக்கின்றேன்.'

'எனக்குப் கூறினால் மிக்க உபயோகமாக இருக்கும்!'

'அப்படியல்ல; எலுமிச்சம் பழத்தின் விலை சற்றுக் குறைவதோடு; ஊரிலுள்ள கொய்யா மரங்களுக்கும் சற்று விடுதலை கிடைக்குமென்று சொல்லு!'

கணேசனின் கருத்து மிகுந்த நகைச்சுவைப் பேச்சை மனதுள் எண்ணி இரசித்துக்கொண்டு குமரன் சொன்னான்:'எதுஎப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும்; நீ விடயத்தை உடை!'

'நான் உடைப்பது இருக்கட்டும்; நமக்குச் 'சேவ்' பண்ணுகின்ற ஆளைக் கூப்பிட்டு இன்னொரு போத்தலை உடைப்பதற்கு 'ஓடர்' கொடு' என்று சொல்லி விட்டு விடயத்தை உடைத்தான் கணேசன்: 'குமரா! மதுபோதை தலைக்கேறிய ஒருவனைச் சுய உணர்வுக்குக் கொண்டுவருவதற்காகக் கொய்யா மரத்தையும், எலுமிச்சை மரத்தையும் சரண் புகுவது அநாவசியம். நல்ல 'நிறைகலை'யில் உள்ள ஒருவனின் போதைமாய்ந்து போகவேண்டுமானால், குடித்தவனின் அந்தந்த 'டக்குவ' நிலைக்கேற்ப 'சப்ஜெக்டை' த் தேர்ந்தெடுத்துக் கொண்டு சர்ச்சையை ஆரம்பித்தால் சரி; போதை முறிந்து போகும்!...அல்லது இன்னும் ஒன்றும் செய்யலாம்...'

'ஏதோ?'

'இதோ பார்! நான் இத்தனை குடித்தும் இன்னும் நாக்கு பிடித்துக் கொண்டிருப்பதற்கும், இன்னும் குடிக்கவேண்டும் என்றும் தாகமுற்றிருப்பதற்கும் காரணம், நாம் சர்ச்சைக்காக எடுத்துக்கொண்ட விடயம் மட்டுமல்ல; வேறொன்றும் உண்டு...!'

'அந்த வேறொன்று எது என்பதை நானும் அறிவேன்; தாமரகுமாரி!'

'குமரா!' என்று பெரிதாக அழைத்த கணேசன், குமரனின் கரத்தை இறுகப்பற்றிக்கொண்டு, 'சரோசாவும், இலட்சுமியும், மோகினியும் இருக்க, குறிப்பாகத் தாமரகுமாரியைமட்டும் நீ கூறக் காரணம் என்னடா சண்டாளா?' என்று இனிமை பீறிடும் உணர்ச்சி முறுக்கோடு கேட்டான்.

'நான்தான் இந்த கோட்டலுக்கு வந்ததிலிருந்து கவனித்துக்கொண்டிருக்கின்றேனே உன்னை! உன்னுடைய வாய்மதுவை உறிஞ்சினாலும்; உன்னுடைய வாய்என்னோடு உரையாடிக்கொண்டிருந்தாலும்;உன்னுடையகைமட்டும் விநாடிக்கொருதடவை மேசைமீது 'தாமரகுமாரி', 'தாமரகுமாரி' என்று எழுதிக்கொண்டிருக்கின்றதே! தவிரவும்; நேற்று துரையின் பங்களாவில்வைத்து எதிர்பாராத வகையில் அவள் உன்னைக் கண்டதும். நம்மூரில் நடைபெறும் அம்மன் சடங்கில் பேயாடும் தெய்வக்காரர்கள் வைத்த கண் வாங்காமல் 'மடை'யைப் பார்த்துக் கொண்டிருப்பது போல் உன்னையே நோக்கி நோக்கி நெருகுருகியதையும்; நீ கூட இருக்கும சூழலை மறந்து தாமரகுமாரியின் நிறைவான உருவை அப்படியே விழுங்கிக் கொண்டிருந்ததையும் நான் கவனித்தேனே!'

'குமரா! நீ சொன்னதெல்லாம்; கண்டதெல்லாம் உண்மைதானடா! பல தடவைகளில்—பல சந்தர்ப்பங்களில் என் வாழ்வில் நடைபெற்ற 'பரிசோதனை'களால் எனக்குள் ஒரு வைராக்கியமும், பக்குவமும் ஏற்பட்டிருந்தும், இந்தத் தாமரகுமாரி என்ற அமுத நிலா அந்தப் பக்குவத்தையும், வைராக்கியத்தையும் தகர்த்தெறிவதற்குச் சவால் விட்டுக் கொண்டேயிருக்கின்றாள். அவளை நினைக்கும் போது என்னை அறியாமலேயே என்னுள் அச்சம் பிறக்கின்றது! இந்த அச்ச நிலைக்குக் காரணம் என்னுடைய என் தன்மையை அவளுடைய அழகு முற்றாக் அழிந்துக் கொண்டு வருகின்றது. இந்த விபரீதப் பரீட்சையில் நான் முற்றாக அழிந்துவிடுவேன் என்று என் அந்தராத்மா அசரீரி வாக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றது! எனக்குஎன்ன செய்வதெனறே புரியவில்லை. ஒரொரு சமமத்தில் எனக்கு என்ன தோன்றுகின்றது தெரியுமா? நரமாமிசபட்சணியாக நான் உருமாறி தாமரகுமாரியை அப்படியே அலாக்காகத்தூக்கி அவளுடைய இனிய அங்கங்களில் எதுவுமே பாக்கிவைக்காமல் அப்படியே முழுமையாக அவளை விழுங்கிவிட வேண்டும் என்ற சன்னதம் ஏற்படுகின்றது! அதிலும் அன்று துரையின் பங்களாவில் வெளியான அந்த மர்மத்தின் பின்னர், அதில் அவள் கொண்டிருந்த பங்கினை அறிந்த பின்னர் அவளுடன் இரண்டறக் கலக்கவேண்டுமென்ற சன்னதம் இன்னும் என்னுள் கொழுந்துவிட்டு எரிகின்றது...அடே கவிஞா! நான் என்ன செய்வேனடா...!' என்று விம்மத் தொடங்கி விட்டான் கணேசன்.

கணேசனுடைய அந்தப் புதிய ஆவேசத்தைப் பார்த்துக் குமரன் அப்படியே அதிர்ந்துபோனான்.

## இலக்கிய உலகு

-"வேதாளம்"-

### சில நுணுக்குகள்

ஈழத்தில், தமிழில் முதன் முதல் சாகித்திய மண்டலப்பரிசு பெற்ற எழுத்தாளர் ஒருவரின் சிறுகதை யொன்றை, கொப்பிக்கதை எனப் 'பால்ராஜ்' என்பவர் சுட்டிக்காட்டியதால் நிகழ்ந்த முட்டையெறி களையும், அடிதடிகளையும் எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அண்மையில் பால்ராயும், அந்த எழுத்தாளரும் ஒரே அச்சகத்தில் சந்தித்துக் கொண்டார்கள்; ஒருவரையொருவர் காணுததுபோலத் தத்தமது வேலைகளை முடித்துக்கொண்டு போய்விட்டார்கள். மறுநாள்—

முன்னவர் அச்சகத்திற்குப்போனார்.

பால்ராஜைப் பற்றிக் கதை வந்தது.

'அவர்எனது பரமவைரி' என்றாராம்.

இவரின் இரண்டாவது தொகுதிக்குச் சாகித்திய மண்டலப்பரிசு கிடைக்காமற் போனமைக்குக் காரணம், பால்ராஜ் எழுதிய கட்டுரைதானும்- என்று இவர் கருதுகின்றாராம், பாவம்.

காங்கேசன்துறை வீதியில், யாழ்ப்பாண நகரை நோக்கி வரும் போது, நாவலர் சந்தியைக் கடந்ததும் ஒரு தேநீர்க் கடையிருக்கிறது. அதில் சென்றவாரம் நான்கு எழுத்தாளர்கள் எதிர்பாராதவிதமாக சந்தித்துக் கொண்டார்கள். அண்மையில் ஒரு சிறுகதைத் தொகுதிபற்றிப் பேச்செழுந்தது.

'ஜெயகாந்தன் எழுதிக் கொடுத்த முன்னுரைமுழுவதையும் சிறுகதைத் தொகுதியில்போடவில்லை. சிலவற்றைத் தட்டிவிட்டுத்தான் போட்டதாம்' என்றார், ஒருஎழுத்தாளர்.

'புவிக்கவர்ச்சியைவிட்டு விலகிய பொருளின் நிலையிலேதான்அவரிருக்கிறார்' (சிறுகதைத் தொகுதியின் ஆசிரியர்) என்றார் இன்னொருர் பழம்பெரும் எழுத்தாளர்.

'பெரும் வீழ்ச்சி' என்றார் ஒருவர்.

'வளர்ச்சியிருந்தால் தானேப்பா வீழ்ச்சி' என்றார், மூன்றாவர்.

'வேதாளம்' யாரென்று கண்டுபிடிக்கப் பெரும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஒருசிலர் 'நாவேந்தன்' என்று கருதுகின்றனர். இன்னொரு சிலர் 'செம்பியன் செல்வன்' என்கின்றனர். இன்னும் சிலர் 'செங்கை ஆழியான்' என்கின்றனர். இன்னும் சிலர் 'நவம்' என்று எண்ணுகின்றனர். வேறு சிலர் 'சிற்பி' என்று கூறுகின்றனர்.

வேதாளத்திற்குப் பெருங் கவலையாகவிருக்கிறது. போகிற போக்கைப் பார்த்தால்...?

## வளரும்

### கிளிநொச்சியில் பண்டித வகுப்புகள்

கிளிநொச்சிப் பகுதியில் பிரவேச, பால பண்டித வகுப்புக்களை நடாத்தும் பொருட்டு கடந்த 14ம் திகதி கிளிநொச்சி அரசினர் மகாவித்தியாலயத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இவ்வகுப்புக்களை நடத்துவதற்கு ஏற்ற ஆசிரியர்களை யாழ்ப்பாணம் ஆரிய-திராவிட மொழி அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் நியமித்துக் கொள்ளப்படும் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வான் மழையை விரட்டிய வேல் விழா இசைமாரி

## உள்ளூர் கலைஞர்களின் உயர்தர நிகழ்ச்சிகள்

வான் மழை சிறந்ததா அல்லது இசை மழை சிறந்ததா என்ற போட்டி கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது. இசைமாரிக்கே வெற்றி கிட்டியது. மழைமாரி வெட்கித் தலைகுனிந்து வெருண்டோடி விட்டது.

கொழும்பிலே நடைபெற்ற வேல் விழா கடந்த சிலவருடங்களைப் போலன்று இம்முறை பல் துறையிலும் சிறப்புப் பெற்று விளங்கியது. தென்னகத்திலிருந்து நாதசுர மேதை, மங்கள வாத்திய விஷாரத் ஜனுப் ஷேக் சின்ன மௌலான சாகிப் அவர்கள் வந்திருந்து தமது இசை ஞானத்தால் இலங்கை இரசிகர்களின் இதயங்களில் இடம் பிடித்துக் கொண்டார். கொழும்பில் இருநாட்கள் அவர் இசைமாரி பொழிந்தார். பல்லாயிரக் கணக்கானோர் ஒரு முறையாவது அவரைப் பார்த்துவிட முண்டியடித்து மோதினார்கள். ஆனால் சில ஆயிரம் பேர்களுக்கு மட்டுமே அவரைப் பார்க்க முடிந்தது. ஒலிபரப்புக் கருவிகள் மூலம் பல்லாயிரவரும், வானொலி மூலம் இலட்சக் கணக்கானோரும் இசைமாரியைக் கேட்டின்புற்றனர்.

ஷேக் சின்ன மௌலானவின் நாதசுரத்துடன் தவில் வித்வான்கள் வலங்கைமான் சண்முகசுந்தரம், லயஞான குபேர பூபதி வி. தெட்சணமூர்த்தி, கும்பகோணம் சாமிநாதன் ஆகியோரின் தவில் கச்சேரியும் சேர்ந்து இரசிகப்பெருமக்களின் அமோக ஆதரவைப் பெற்றன.



ஆடிவேல் விழாவையொட்டி கொழும்பில் நடைபெற்ற இசைக் கச்சேரிகளில் மட்டக்களப்பு சங்கீத பூஷணம் செல்வி சாந்தாவதி தெய்வநாயகத்தின் மெல்லிசை விருந்து சிறப்பாக அமைந்தது. செல்வி சாந்தாவதி பாடிக் கொண்டிருப்பதையும் அட்டாளச்சேனை அரசினர் அசிரியர் கல்லூரி இசை ஆசிரியர் திரு. சிவஞானம் பின்னணி இசைக் கருவி மீட்டுவதையும் படத்தில் காண்க.

## கோடற்றுக்காக்க காத்திருத்தல்

சாமுவேல் பெக்கற் எழுதிய ஆங்கில நாடகமான 'கோடற்றுக்காக காத்திருத்தல்' (Waiting for Godot) 24-ம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை யாழ்ப்பாணம் வேம்படி டிரிமர் மண்டபத்தில் மேடையேற்றப்பட விருப்பதாகத் தெரியவருகிறது. யாழ்ப்பாணம் கிறிஸ்தவ நாடக சங்கம் இந்நாடகத்தைத் தயாரித்தளிக்கிறது.

சாதாரணமான நாடகங்களைப் போன்றதொன்ருக இந் நாடகம் அமையப் போவதில்லை. பல புதிய உத்திகளை உள்ளடக்கியதாக இந்நாடகம் இருக்குமாம். ஆங்கில நாடகமாக விருந்த போதிலும் இந்நாடகம் எந்நாட்டவர்க்கும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்குமாம்.

## தமிழ்ப் படங்களுக்கு பரிசுகள் கிடைக்க வழியில்லை

### ஏ. எல். எஸ். வருத்தம்

'இன்றுள்ள நிலையில் தமிழ்ப் படங்களுக்கு எந்தவிதமான பரிசுகளும் கிடைக்க மார்க்கமேயில்லை. பரிசு வழங்கப்படும் முறை அமைந்துள்ள தன்மை தமிழ்ப் படங்களுக்குப் பரிசு கிடைக்க வழிவைக்கவில்லை' இவ்வாறு தென் இந்திய வர்த்தக சபையில் உரை நிகழ்த்திய இந்திய சினிமா அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. ஏ. எல். சீனிவாசன் கூறினர்.

இந்திய சினிமா அதிபர்கள் சங்கத் தலைவராக திரு. ஏ. எல். சீனிவாசன் தெரிவு செய்யப்பட்டதையொட்டி நடைபெற்ற பாராட்டு விழாவிலே பேசும் போதுதான் அவர் அவ்வாறு கூறினர். அமைச்சர் வெங்கட்ராமன், மத்திய அரசு அமைச்சர்கோபால் ரெட்டி, நாகிரெட்டி, திருமதி சவுந்தரம் கைலாசம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு. சீனிவாசன் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:

'சிறந்த படங்களைத் தெரிவு செய்து அவற்றிற்கு ஜனதிபதி தங்கப்பதக்கங்கள் வழங்கப்படுகிறது. சிறந்த படங்களைத் தெரிவு செய்வதில் திருப்திகரமானமுறை அனுட்டிக்கப்படுவதாகத் தெரியவில்லை. அதனுல்தான் தமிழ்ப்படங்கள் எதுவுமே இதுவரை தங்கப்பதக்கங்கள் பெறமுடியவில்லை. பரிசு பெறத் தகுதியான தமிழ்ப் படங்கள் வருடா வருடம் தமிழகத்திலிருந்து வெளியாகவே செய்கின்றன. ஆனல் அவை யெல்லாம் ஒதுக்கப்படுகின்றன.

சினிமாத் தொழிலுக்கு மென்மேலும் வரிப்பளுவை அரசாங்கம் போட்டுக் கொண்டேபோகிறது. இதனுல் பல சினிமா முதலாளிகள் தங்கள் வர்த்தகங்களை மூடிவிடுகின்றனர். புதிய முதலாளிகளும் இத்துறையை அணுகமுடியவில்லை. இந்நிலைமையில் மாறுதல் ஏற்பட்டால்தான் திரைப்படத்துறை விருத்தியடைய முடியும்.'

## இலங்கைக் கலைஞர்கள்

இந்தியாவிலிருந்து கலைஞர்கள் இலங்கைக்கு வருவது பற்றிய ஒரு தப்பபிப்பிராயம் இங்கு நிலவுவதைக் காண முடிகிறது. சில பகுதிகளில் சில வியாபார நோக்காளர்கள் இந்தியக் கலைஞர்களை—அவர்களுடைய தகுதி நோக்காது—இங்கு தருவித்து, கோயில் விசேடகாலங்களில் அவர்களை வைத்து ஏராளமான பொருளீட்டி விடுகின்றனர். இந்தியாவிலிருந்து வந்த தரமான கலைஞர்கள் என்று போலி விளம்பரங்கள் தரப்படுவதனுல் மக்களும் இலகுவில் ஏமாந்துபோக நேருகிறது.

இந்த வேளையில் இலங்கையைச் சார்ந்த தரமான கலைஞர்கள் புறக்கணிக்கப்படுவதால் அவர்களுடைய வருமானமும் பாதிக்கப்படுகிறது. உள்ளூர்க் கலைஞர்களை உரிய இடம் கொடுத்து கவுரவிக்க வேண்டும் எனப்பட்டமையினுல்தான், இந்தியக் கலைஞர்கள் வருகைக்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இம்முறை வேல் விழாவினை ஒழுங்கு செய்தவர்கள் இந்தியக் கலைஞர்களைத் தருவித்த போதிலும், இலங்கைக் கலைஞர்களுக்கும் உரிய இடம் அளித்துக் கவுரவித்தனர். திரு. பி. கந்தசாமி, திரு. எம். கே. பத்மநாதன் ஆகியோரின் நாதசுரக் கச்சேரிகளும் மிகவும்தரம்வாய்ந்து, சிறப்பாக விருந்தன. இந்தியக் கலைஞர்களைவிட இவர்களின் வாத்தியம் எந்தவகையிலும் குறை கூறத்தக்க நிலையிலிருக்கவில்லை என்று இரசிகப் பெருமக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

## பொம்மைக் குழந்தைக்குத் தாலாட்டுப் பாட்டு

'வாயார முத்தம் தந்து
வண்ணப்பிள்ளை
கொஞ்சுது
மாதுளம் பூவைப் போல
காலும் கையும் மின்னுது.

இப்படி அழகான குரலில் தாலாட்டுப்பாடிக் கொண்டு அழகான இளம் பெண் ஒரு தொட்டிலை ஆட்டுகிருள். பாடலிலே உள்ள சுவையை அவளுடைய முகத்திலே காணயியலவில்லை. ஆனல் அவளருகே வேறு ஒரு பெண் உளம் குளிர உவகை பூக்க மெய் மறந்த நிலையில் மகிழ்கிருள்.

தாலாட்டுப் பாடியவளின் ஏக்கத்துக்கும் கேட்டு இரசிப்பவளின் குதூகலத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? தொட்டிலை எட்டிப் பார்த்த நமக்கு தூக்கிவாரிப் போட்டது. அங்கே படுத்திருப்பது நிஜக் குழந்தை யல்ல. பொம்மை.

தாலாட்டுப் பாடுபவளுக்குப் பைத்தியமா என்ன? அருகில் ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருப்பவளை அணுகி விசாரிக்கிறேம். அவள் சர்வ அலங்காரங்களுடனும், அன்று பூத்த மலர் போல் நிற்கிருள்.

அவள் கூறியது, மேலும் நம்மைத் திகைப்புக் கடலுள் அமிழ்த்துகிறது.

'இன்று என் குழந்தைக்கு பிறந்த நாள் கொண்டாடுகிறேம். அதனுல்தான் நான் இவ்வாறு அலங்கரித்துக் கொண்டிருக்கிறேன்,' என்று அவள் கூறுகிருள், நமக்கு ஏற்பட்ட அதிர்ச்சியை அருகே இருந்த டைரக்டர் திருமுகம் விளக்குகிருர்.

மூத்தவளுக்குப் பிள்ளைப் பைத்தியம். அவளுக்கு உள்ள பைத்தியத்தை தீர்த்துவிட பலர் முனைந்தும் முடியவில்லை. அவளுக்கு சமாதானம் செய்வதற்காகவே அவளுடைய தங்கை பொம்மையை தொட்டிலிலிட்டு தாலாட்டுப் பாடினுள்.

பைத்தியம் பிடித்த அக்காளாக சந்திரகாந்தாவும் தங்கையாக கே. ஆர். விஜயாவும் தோன்றும் இக்காட்சி தேவர் பிலிம்ஸ் தயாரிக்கும் கன்னித் தாய்க்காக அண்மையில் வாகினியில் படமாக்கப்பட்டது. எம். ஜி. ஆர்., அசோகன், வி. கே. ராமசாமி, நாகேஷ், ஜெயலலிதா மனோரமா முதலானோரும் தோன்றுகின்றனர். ஆர். கே. சண்முகம் திரைக்கதை வசனம் எழுத, கே. வி. மகாதேவன் இசை அமைக்க, திருமுகம் டைரக்ட் செய்கிருர்.

## "சகிப்புத்தன்மை...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இருட்டில் சிக்கியுள்ள ஒருவன் பொருளற்ற ஏதையோ தேடும் முயற்சியில் ஈடுபடுவதற்கு ஒப்பாகும்.

'உலக நாடுகள் சபையின் சமாதான முயற்சி மதத்துவங்களுக்கு மாறுபட்டதல்ல.'

நீதியரசர் திரு. பி. சிறீஸ்கந்தராசா தனது தலைமையுரையை நிகழ்த்துகையில் 'உலகில் குற்றங்கள் மலிந்து காணப்படுகின்றன என்றும் இதற்கு சகிப்புத் தன்மையின்மையே காரணமாகும்' என்றும் கூறினர்.

திரு. கி. இலக்குமணன் நன்றியுரை கூறுகையில் 'உயர்ந்த நிலையில் நின்று டாக்டர் சச்சார் உலக சமாதானத்திற்கான மார்க்கத்தைக் காண்பித்தார்' என்றார். விவேகானந்தசபைத் தலைவர் திரு. மு. வயிரவப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினர்.

## வேல் விழா இசைக் கச்சேரிகள்

மட்டக்களப்பைச் சேர்ந்த சங்கீத பூஷணம் செல்வி சாந்தாவதி தெய்வநாயகம் வெள்ளவத்தை தயிலும், பம்பலப்பிட்டியிலும், தட்டாரத்தெரு சிவசுப்பிரமணியசுவாமி கோவிலிலும் மூன்று இன்னிசைக் கச்சேரிகளையும் அளித்தார். அவருக்கு வாய்க்கப் பெற்ற சாரீர வசதியைப் பாராட்டாதார் இலர். சாஸ்திரீய சங்கீதத்துடன் மட்டும் நின்றுவிடாது பலதரப்பட்ட இரசிகர்களையும் கவரத்தக்க ரீதியில் மெல்லிசையில் பக்திப் பாடல்களைப் பாடிக் காட்டினர். இவருடைய இசையை கொழும்பு இரசிகர்கள் மட்டுமல்லாமல், இலங்கை வானொலி மூலம் பல இலட்சம் மக்கள் கேட்டின்புற்றனர்.

விஜயலட்சுமி ... சுந்தரத்தின் இசைக் கச்சேரியும் பாராட்டும் வகையில் இருந்தது. கோபால் தியாகராசாவின் விகடக் கச்சேரியை வியந்து கூருதவர்களோ இல்லை.

இம்முறை வேல் விழா இலங்கை-இந்தியக் கலைஞர்களின் இணைப்போடு இனிமையாக முடிந்தது. மழை அடிக்கடி நிலைகாட்டிய போதிலும் இசை மழை [illegible] ஒதுக்கியடித்தே விட்டது.

* தற்கொலை செய்தார் கலைவாணர்
* தி. மு. க. பிளவின் உண்மை
* எம். ஜி. ஆர்—சிவாஜி மோதலின் காரணம்
* செருப்படிபட்ட முன்னணி நடிகைகள்
* படத் தயாரிப்பாளர்களின் பணவேட்டை

தமிழ் சினிமா நட்சத்திரங்கள், அரசியல் தலைவர்கள் பற்றிய—இதுவரை வெளிவந்திராத—அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் நிறைந்த

'எழுத்தரசன்'

எழுதும்

நட்சத்திர மண்டலத்தில் 4×8 மாதங்கள்'

29—8—65

இதழில் ஆரம்பமாகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தன் மூவீஸ்

சினிமாஸ் அளிக்கும்

# நானும் மனிதன் தான்

பற்றிய

## எமது விமர்சனம்


அன்பு, அறிவு, அடக்கம் முதலிய நல்ல பண்புகள் ஒருவனுடைய பிறந்த குலத்தால் அளவிடப்படுவதல்ல. படிப்பினுல்கூட இவற்றை எடை போட்டு விட முடியாது. மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவனிடத்திலும் நல்ல பண்பும், அறிவும், அன்பும் நிறைந்தேயுள்ளன. அவை சந்தர்ப்பவசத்தால்—சூழ்நிலை சுற்றுடலால்தான் மாற்றமடைகின்றன. இந்த உயர்ந்த தத்துவத்தை அடிப்படையாக வைத்து எழுந்த கதைதான் 'நானும் மனிதன் தான்.'

ஒட்டிப் பிறந்த இரட்டையர்போல் முத்தையாவும் சந்திரனும் வளருகின்றனர்.

ஆனந்தனை குறைந்தவராகக் கூற முடியாது. அவருடைய சிலம்பம் விளையாட்டுகளும் சிறப்பாகவுள்ளன.

தங்கமாக சந்திரகாந்தாவும், சந்திரனுக பாண்டி செல்வராஜுவும், கறுப்பனுக அசோகனும், சேகராக கண்ணனும் குறைக்கிடமின்றி நடித்துள்ளனர். ஷீலாதேவி, புஷ்பாவாக துடுக்குடன் நடித்துள்ளார்.

கரும்பும் வேம்புமாக நாகேஷும், நிர்மலாவும் தோன்றும் கட்டங்கள் நம்மைக் குலுங்கச் சிரிக்க வைக்கின்றன. சமையற் கட்டில் காய்களை நறுக்கி கையை வெட்டி கட்டம் சற்றுமிகையாகவிருப்பினும் கலியாண



பசுந்தளிர்மேனி-பட்டுக் கன்னம்-கொட்டும் விழிகள் அத்தனையும் கொண்ட புஷ்பாவை பஞ்சணையில் அணைத்து மகிழும் அக் கட்டிளம் காளைதான் சந்திரன்.

தம்பி சந்திரன் பட்டணத்தில் படிக்கும் போது, தான் தன் தந்தையுடன் கிராமத்திலேயே—நிலபுலன்களை வைத்து விவசாயம் செய்து கொண்டு வருகிறுன் முத்தையன். கள்ளமில்லாத உள்ளத்தினன். அவனை ஒரு வேலைக்காரியின் மகன் என்று ஊர் புறக்கணித்தாலும் அவன் தந்தையோ, தம்பியோ அவனை உதறவில்லை. ஆனுல் தம்பி சந்திரன் புஷ்பாவை மணம் முடித்ததிலிருந்துதான் குடும்பத்தில் புயல் வீசத் தொடங்குகிறது.

வீட்டு வேலைக்காரியாக வரும் தங்கத்தின் மேல் முத்தையன் அன்பு செலுத்துகிறுன்—இதையே சாக்காக வைத்து அன்புத் தம்பி அவனை வீட்டைவிட்டு விரட்டுகிறுன். சூது வலை வீசுபவர்களாக சேகரும் கறுப்பனும் வருகின்றனர். இறுதியில் சூழ்ச்சிகள் யாவும் நீங்கி சுகம் கிடைக்கிறது.

ஒடுக்கப்படும் வேளைகளில் எல்லாம் 'நானும் மனிதன் தான்' என்று உரிமைக் குரல் எழுப்பும் முத்தையனுக வரும் விஜயபுரிவீரன் ஆனந்தன், தானும் ஒரு சிறந்த நடிகர்தான் என்பதைப் புலப்படுத்துகிறுர். ஏனைய முதல் தர நடிகர்கள் என்று புகழப்படுபவர்களுடைய தரத்துக்கு எந்த வகையிலும்

வீட்டைப்பற்றி நாகேஷ் கொடுக்கும் விளக்கம் நமக்கு வியப்பை உண்டு பண்ணுகிறது.

'நானும் மனிதன் தான்' மனிதனை மனிதன் பேதம் செய்யும் பித்தலாட்டக் காரர்களுக்கு நல்ல 'டோஸ்' கொடுக்கும் கருத்து நிறைந்த படம்.

—நாதன்

## நேதாஜி கதை படமாகும்

நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் வாழ்க்கையைத் திரைப்படமாக்க வங்காளத் தயாரிப்பாளர் ஏ. கே. பர்னர்ஜி திட்டமிட்டுள்ளார். நேதாஜியாக நடிப்பதற்கேற்ற நல்ல தோற்றமுடையவருக்கான தேர்தலும் நடைபெற்றது.




## லவகுசா
## நீதிக்குப் பின் பாசம்
## இலவச குறுக்கெழுத்துப் போட்டி

லவகுசா, நீதிக்குப்பின் பாசம் இலவச குறுக்கெழுத்துப் போட்டி 20ம் திகதியுடன் முடிவடைந்து விட்டது. பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் கலந்து கொண்டார்கள். பல்லாயிரக் கணக்கானவர்கள் சரியான விடைகளை அளித்துள்ளனர். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் யார் என்பது சில தினங்களுள் தெரிந்துவிடும்.

## சரியான விடை இதோ

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ரா | 2 ம | ச் | 3 ச | ந் | தி | 4 ர | 5 ன் |
| 6 க | கு | | ரோ | | | 7 கு | ணா |
| 8 வா | டா | | 9 ஜா | ன | 10 கி | | ம |
| | பி | | தே | | 11 மி | 12 தி | கு |
| 13 வ | ஷே | | வி | | ல் | ரு | க் |
| ர | க | 14 லை | | | வா | மு | ல |
| 15 க | ம் | ப | ன் | | | க | இ |
| வி | | 16 அ | ற் | பு | த | ம் | |

இப்போட்டியில் கலந்து கொண்ட சகலருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேரும் பரிசு பெறுபவர்களுக்கு விரைவில் பரிசுகள் அனுப்பிவைக்கப்படும்.

பரிசு பெறுவோர் விபரம்
29-8-65
இதழில் வெளிவரும்

## கலாசோதி 'சானு'வுக்கு நடிகர்களின் பாராட்டு

'நாடக மேடையிலேயே வளர்ந்தவன் நான். எனது பாட்டனுர் இங்கு நாடகக் குழுக்களைத் தருவித்து வந்தவர். ஐந்துவயதிலிருந்தே அக்குழுக்களின் நாடக மேடைகளுக்குச் சென்று பழகிய நான், என் வாழ்க்கையையே நாடகத்துறைக்கு அர்ப்பணித்து விட்டேன். எனக்கு இன்று நீங்கள் அளிக்கும் பாராட்டுகளுக்கெல்லாம் காரணகர்த்தாவாகவுள்ளவர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களே. அவரால்தான் நான் இத்துறையில் சிறக்க முடிந்தது.' இலங்கை வானெலி தமிழ் நாடக நடிகர்கள் அளித்த விருந்துபசாரப் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய 'கலாசோதி' சண்முகநாதன் மேற்கண்டவாறு கூறினுர்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர், திரு. சண்முகநாதன் தமிழ் நாடகத் துறைக்கு ஆற்றிவரும் தொண்டினைப் பாராட்டி 'கலாசோதி' என்ற பட்டத்தை வழங்கினர். மட்டக்களப்பில் 12 சங்கங்கள் இணைந்து கூடி 'சானு' அவர்களுக்கு பாராட்டு விழாவை நடத்தினர். வெள்ளவத்தையிலுள்ள ஸ்கைலைன் ஹோட்டலில் வைத்து இலங்கை வானெலி தமிழ் நாடக நடிகர்கள் மேற்படி விருந்து வைபவத்தை தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராசா தலைமையில் நடாத்தினர்.

திரு. சானுவின் சேவையைப் பாராட்டு முகமாக நடிகர்களால் ஓர் தங்கப் பதக்கம் சூட்டப்பட்டதுடன் வாழ்த்து மடலும் வாசித்தளிக்கப்பட்டது. நடிகர்கள் எல்லோரும் சேர்ந்து புகைப்படம் ஒன்றினையும் எடுத்துக் கொண்டனர். முதலியார் குலசபாநாதன் தங்கப் பதக்கத்தை திரு. சானுவுக்குச்சூட்டினுர். எழுத்தாளர்களும் நடிகர்களும் பாராட்டுரைகள் வழங்கினர்.

## பேட்ரன்ட் ரஸல் நடிக்கும் இந்திய சினிமாப் படம்

93 வயதுடைய விஞ்ஞான மேதையான பேட்ரன்ட் றஸல் இந்திய சினிமாப் படத்தில் நடித்துள்ளார்.

இரு வாரங்களுக்குமுன்னர் லண்டனிலுள்ள திரு. றஸலின் இல்லத்தில் முக்கியமான காட்சிகள் சுடப்பட்ட பின்னர், தயாரிப்பாளரும் டைரக்டருமான மோகன் குமார் தனது குழுவுடன் லண்டனிலிருந்து ஜப்பானுக்குப் புறப்படுகிறுர்.

அணுக்குண்டினுல் பாதிக்கப்பட்ட ஜப்பானிய நகரங்களான ஹிரோஷீமா, நாகாசாக்கி போன்ற இடங்களிலும் படப்பிடிப்பு நடைபெறுமாம்.

இப்படத்துக்கு 'அமன்' (சமாதானம்) என்று பெயரிட்டுள்ளனர்.

இப்படத்தின் கதாநாயகனுக ராஜேந்திரகுமார் நடிக்கிறுர். லண்டனில் விஞ்ஞானம் பயிலும் இந்திய மாணவன் ஒருவன் அணுக்குண்டால் பாதிக்கப்பட்டு இன்றும் அல்லலுறும் மக்களுக்குச் சேவை செய்ய ஜப்பானுக்குப் போவதாகவும், போகு முன்னர் விஞ்ஞான மேதை ரஸலைச் சந்தித்து ஆசிர்வாதம் பெறுவதாகவும் இக் கதை அமைகிறது. அணுக்குண்டினுல் பாதிக்கப்பட்டவர்களின் சேவைக்கே தம்முயிரை கதாநாயகன் அர்ப்பணிக்கும் சோக முடிவுடைய இக் கதை பலவர்ணத்தில் தயாராகிறது. சர்வதேச அந்தஸ்து இப்படத்துக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நட்சத்திர மண்டலத்தில் 4X8 மாதங்கள்

29—8—65

இதழில் ஆரம்பமாகும்.



வட நாட்டுக்காரியானுலும் அவள் வெல்லக் கட்டிக்கும் மிஞ்சிய தித்திப்பைத் தருபவள். அள்ளிப் பருகத் துடிக்கும ஆணழகனின் ஆவலை அவள் பூர்த்தி செய்வாளா என்பதை அறிய சினிமாஸ் அடுத்து அளிக்கும் அற்புத திரைவிருந்தான 'கை கொடுத்த தெய்வம்' வரும்வரை காத்திருக்கத்தான் வேண்டும். இப்படத்தில் ரவியாக வரும் எஸ். எஸ். ஆரும் லதாவாக தோன்றும் கே. ஆர். விஜயாவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுப் பா. உ. களின் மலையக விசயம்

## மக்கள் பிரச்சினைகளை நேரில் பார்வையிட்டனர்

தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. சி. கதிரவேற்பிள்ளையும், திரு. வி. தர்மலிங்கமும் கடந்த வாரங்களில் மலையகத்திற்கு விசயம்செய்து மலையக மக்களின் குறைகளை நேரில் கேட்டு அறிந்துள்ளார்கள். மலையகமக்களின் பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்த இவாகள், இப் பிரச்சினைகள் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினுர்கள். அதிகாரிகள் மட்டத்தில் தீர்க்கமுடியாத பிரச்சினைகளை அமைச்சர்களின் கவனத்திற்கு சமர்ப்பிப்பதாகவும் கூறியுள்ளார்கள்.

இத்திங்கள் 1ம், 2ம், திகதிகளில் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் இ. தொ. கழக அட்டன், தலவாக்கொல்லை, இராகலை



திரு. சி. கதிரவேற்பிள்ளை

பணிமனைகளுக்கு விசயம் செய்திருந்தார். அச்சமயம் இ. தொ. கழக நிர்வாகச் செயலாளர் திரு. இ. நாகேந்திரம், துணைச்செயலாளர் திரு. மு. எல்லாளன் ஆகியோர்களுடன் தலவாக்கொல்லை தமிழ் பாடசாலைக்கும், நாகசேனை தமிழ் பாடசாலைக்கும் சென்றிருந்தார்.

மேற்படி பாடசாலைகளில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தை நேரில் கண்ட அவர், இது விடயமாக அங்குள்ள அதிபர்களையும் நேரில் கண்டு கதைத்தார். கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அறிவித்தார்.

11-8-1965ல் உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. தர்மலிங்கம் அவர்கள் அட்டன் அலுவலகத்திற்கு வந்திருந்தபொழுது, அட்டன் விவாகப் பதிவுக் கந்தோருக்குச் சென்று அங்கு மக்கள் மழையிலும், வெய்யிலிலும் துன்பப்படுவதை நேரில் கண்டார். மஸ்கெலியா, பொகவந்தலாவ, சாமிமலை, நோர்வூட், வட்டவளை, நோட்டன்பிரிட்ஜ் ஆகிய பகுதிகளிலிருந்து, விவாகப் பதிவுக்கு அட்டன் விவாகப் பதிவு கந்தோருக்குதான் வரவேண்டும்.

அட்டன் விவாகப்பதிவுக் காரியாலயமோ, வியாபார ஸ்தலமாகத்தான் காட்சியளிக்கின்றதே தவிர விவாகப் பதிவு கந்தோராகக் காட்சியளிக்கவில்லை. இவற்றை எல்லாம் நேரில் பார்வையிட்ட உடுவில் பா. உ. இதற்கான நடவடிக்கையை அமைச்சருடன் நேரில் கலந்து ஒரு பூரண முடிவு காணுவதாக உறுதிகூறினுர்.

மேலும் சுமார் 80,000 தமிழ் மக்கள் வசிக்கும் இப் பகுதியில் அட்டனில் மட்டும் தான் விவாகப் பதிவு கந்தோர் இருக்கின்றது. எனவே, மஸ்கெலியாவிலும் ஒரு கந்தோர் திறப்பதற்கான நடவடிக்கையை உள் நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகாநாயகாவுடன் தொடர்பு கொண்டு மஸ்கெலியா, நோர்வூட், போன்ற இடங்களில் விவாகப்பதிவு கந்தோர் திறக்க வேண்டும் என்றும் திரு. தர்மலிங்கம் அமைச்சரிடம்



திரு. வி. தர்மலிங்கம்

வலியுறுத்துவார். மேற்படி காரியாலயங்களில் தமிழ் உத்தியோகத்தர்கள் கட்டாயமாக நியமிக்கப்பட வேண்டும் எனவு அமைச்சரிடம் எடுத்துக் கூறுவதாக அவர் கூறியுள்ளார்.

## மக்கள் குரல்

### மணிவண்ணனின் சேவை நாட்டுக்குத் தேவை

இலங்கையும் இந்தியாவும் பண்டு தொட்டு பல துறைகளாலும் பிணைக்கப்பட்ட நாடுகளாகும். இவ்விருநாடுகளுக்கு மிடையில் கலைத்தூதுவர்கள் அன்றிலிருந்தே பரஸ்பரம் பரிமாறப்பட்டு வந்துள்ளனர். குறிப்பாக இலங்கையின் சிற்பக்கலை இந்தியச் சிற்பிகளின் ஒத்துழைப்பும் அனுசரணையுடனுமே தான் வளர்ந்து வந்திருக்கிறது.

இலங்கையின் பழையஇராஜதானிகளாக விளங்கிய அநுராதபுரம், பொலனறுவ, தம்புள போன்ற இடங்களில் காணப்படும் சிற்பங்கள் திராவிட சிற்பக்கலை மணத்தை இத்தனை காலம் கடந்தும் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய கலைத் தொடர்பு இன்றும் அருகிப் போய் விடவில்லை. இலங்கையில் சிற்பங்களைச் செதுக்க இந்தியாவிலிருந்துதான் சிற்பிகள் இங்கு வருகின்றனர். இங்குள்ள தமிழர்கள் மட்டும் தான் இந்தியக் கலைஞர்களைத் தருவிக்கின்றனர் என்று கூறிவிட முடியாது. அரசாங்கமே இங்கு பல சிற்பக்கலைஞர்களை இந்தியாவிலிருந்து தருவித்து வருகிறது.

பழைய தகோபாக்களும், தாதுகோபுரங்களும், விகாரைகளும் புதுப்பிக்கப்படும் போதெல்லாம் இந்தியாவிலிருந்து திராவிடக் கலைஞர்கள் இங்கு வந்து போகின்றனர். பரம்பரை பரம்பரையாக இக்கலையைப் பயின்று வந்துள்ள அக்கலைஞர்களை ஒதுக்கித்தள்ளிவிட்டு இலங்கையில் சிற்பக்கலைக்குப் புத்துயிரளிக்க முடியவே முடியாது. இத்துறையில் நாம் பின் தங்கிய நிலையிலுள்ளோம் என்பதை எடுத்துக் கூற நாம் எப்போதும் வெட்கப்படவேண்டிய அவசியமேயில்லை.

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையில் சிற்பக்கலைத் துறைப் பணியில் தமிழகத்தைச் சேர்ந்த திரு. எம். என். மணிவண்ணன் பேருதவி புரிந்து வருகிறுர். இத்துறையில் பரிபூரண நிபுணத்துவம் பெற்ற இக்கலைஞர் இங்குள்ள பல பெரியார்களின் சிலைகளை அமைத்துத் தந்திருக்கிறுர். இந்நாடு போற்றி வணங்கும் புத்தர் பெருமானின் சிலைகளையும் பல இடங்களிலும் அமைத்துக் கொடுத்துள்ளார். கொழும்பு மத்தியிலேயுள்ள பௌத்த வாலிபர் சங்கப் பணிமனையிலுள்ள கோயிலில் வைத்துப் பூசிக்கப்பட்டு வருவதும் திரு. மணிவண்ணன் அவர்கள் செதுக்கிய புத்தரின் சிலையாகும்.

சிலைகளை அமைத்துக் கொடுப்பதோடு மட்டுமல்லாது, பல மாணுக்கர்களுக்கு சிற்பக்கலை நுணுக்கங்களையும் போதித்து வருகிறுர்.

அவரோஒரு பூரணத்துவம் பெற்ற ஒப்பற்றகலைஞர். அவருடைய தாயகம் செல்ல அவர் தயங்கப்போவதில்லை. பொருளோ, பெருமையோ, புகழோ அவருக்கு இங்கிருந்து தான் கிடைக்க வேண்டுமென்பதில்லை. அவருடைய தாயகமாம் தமிழகம் அவரையும் அவருடைய சேவையையும் என்றும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறது.

ஆனுல், திரு. மணிவண்ணனின் சேவையை நாம் இன்று இழந்துவிடக் கூடிய நிலையில்லை. சிற்பக்கலையில் நாம் ஓரளவு திறமை பெறும் வரையிலாவது திரு. மணிவண்ணன் இந்நாட்டில் தங்கியிருக்க வசதி செய்து கொடுத்தாக வேண்டும். அவருடைய கலைச்சேவை இந்நாட்டுக்கு அவசியம் தேவை.

கடல் கடந்து வந்த இக்கலைஞரை போதுமான வரையில் கௌரவித்து இந் நாடு அனுப்பும் வரையில் அவர் இங்கேயே இருக்கட்டும்.

புல்லுமலை நல்லரத்தினம்
சிதேவி சிற்பக்கலையகம்
கொழும்பு.

## ஊரும்....

10-ம் பக்கத் தொடர்ச்சி)

தேடிக்கொள்ளாதை.இஞ்சையிருக்க வெக்கமாக் கிடத்தா பின்னை அங்கை போய் அவரோடை இரன் பெறுகிற வரைக்கும்?' என்ற செல்லம்மா பூரணம் சொல்லப் போவதை எதிர்பார்த்தாள்.

'ஓமெடி பிள்ளை நானும் அப்படித்தான் யோசிக்கிறன். நாளைக்கே போயிடலாமென்டு பாக்கிறன்'. என்றுள் பூரணம்.

'சரி சரி இனிமேலும் உப்புடி நடக்காதையுங்கோ.' என்ற செல்லம்மா சிரித்துக் கொண்டே விடை பெற்ருள்.

மறுநாள் காலையில் பூரணம் கிளம்பிவிட்டாள். சங்கதி இன்னதென்று மகளுக்கோ மருமகனுக்கோ ஏதும் புரியவில்லை. எவ்வளவோ தடுத்தும் பூரணம் ஒரேயடியாக போயேயாக வேணுமென்றே சொல்லிவிட்டாள்.

'ஏனெணை ஆச்சி, உனக்கிஞ்சை என்ன குறையெணை?' என்றுள் மகள்.

அப்பிடியொண்டு மில்லையெடி பிள்ளை, அங்கை கொப்பர் என்ன பாடோ ஏதுபாடோ தெரியாது. நாளைக்கு ஊருலகம் என்ன சொல்லும்; அவள் போய் மக்களோடையிருந்து நல்ல குசாலாய்ச் திண்டு குடிக்கிறுள் அவன் மனு இஞ்சை கிடந்து கொட்டாவி விடுகிறுன், எண்டு தானே அயலட்டையும் சொல்லும். வேறையொண்டுமில்லையெடி பிள்ளை.' என்றுள் பூரணம் வெட்கத்தை விழுங்கிக் கொண்டே.

கிணற்றடிக்கு வந்த செல்லம்மா இடைச்செருகலாக 'எல்லாம் ஏழு மாதத்திலை தெரியும்' என்று சொல்லிச் சிரித்தாள்.

பூரணம் வெகுவேகமாக படலையைத் தாண்டி நடந்துகொண்டிருந்தாள்.

ஊருலகத்திற்கு அஞ்சி வாழும் அவள் உரியவனிடத்து சரணடைவது தானே நியதி.

## ஆண்டு விழா

சென்னை அரசாங்க நூல் வெளியீட்டுத் திணைக்களத் தலைவர் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் தலைமையில் 'நால்வர்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் இத் திங்கள் 22-ம் நாள் மாலை பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இந் நிகழ்ச்சி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெறுகிறது.

இவ்விழாவில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, வி. செல்வநாயகம், கே. இராமச்சந்திரா, எம். ஞானப் பிரகாசம், ஆ. கந்தையா, கந்தையா வைத்தியநாதன் ஆகியோரும் உரை நிகழ்த்துவார்கள்.

## அமரர் நினைவு தினம்

### 19-ம் திகதி கொக்குவிலில் நடைபெறும்

அமரர் வன்னியசிங்கம் அவர்களின் ஆருவது நினைவுதினத்தை சிறப்பான முறையில் நடாத்துவதற்கு கொக்குவில் வாசிகள் ஒழுங்குகள் மேற்கொள்வதாகத் தெரிகிறது. செப்டம்பர் 19ம் திகதி கொக்குவில் கிழக்கில் ஒரு மாபெரும் கூட்டத்தை நடாத்துவதுடன் அன்றைய தினத்தை அப்பகுதியில் சிறுவர்கள் தினமாகக் கொண்டாடுவதற்கும் ஒழுங்குகள் நடப்பதாக கூட்ட அமைப்பாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

சிறுவர்களுக்காக நடாத்தப்படும் நிகழ்ச்சிகளில் திருமதி கோமதி வன்னியசிங்கமும் கலந்துகொள்வாராம். அன்றைய தினம் அமரர் வன்னியசிங்கம் நினைவாக வேறு இடங்களில் எத்தகைய கூட்டங்களையும் ஒழுங்கு செய்யாதிருக்குமாறும் தமிழ்பேசும் பொது மக்களை கூட்ட அமைப்பாளர்கள் கேட்டுள்ளார்கள்.

## வள்ளுவர் விழா

அல்லைப்பிட்டி கிழக்கு அவாகிகர் சன சமூக நிலையத்தினர் சென்றவாரம் வள்ளுவர் விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடினர். பல மாணவ, மாணவிகளின் இசை, உரைக்கதம்ப நிகழ்ச்சிகளும், பல பெரியார்களின் சொற்பொழிவுகளும் இடம் பெற்றன.

ஆசிரியர் திரு. இ. மகாதேவா அவர்கள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் "உலகத்தின் பல நாடுகளிலும் காலத்துக்குக் காலம் பல பெரியார்கள் அறிவு ஞானிகள் தோன்றி, மனித இனம் வாழப் பல வழிகளைக் கூறிச் சென்றிருக்கிறுர்கள். அந்த வரிசையில் எமது தமிழ் இனத்தின் மத்தியில் வள்ளுவப் பெருந்தகையும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றி மனித இனம் 'இப்படித் தான் வாழ வேண்டும்' என கூறிச் சென்றுள்ளார்.

அவரின் அறிவுரைகள் உலகம் உள்ளளவும் நிலைக்கக் கூடியன. அவர் கூறிய வாழ்க்கை நெறியைப் பின்பற்றுவது முடியாத காரியம் எனப் பலர் கூறக் கேட்டிருக்கின்றோம். ஆனுல் முழுக்க, முழுக்க மனிதனுல் பின்பற்றக் கூடிய வழிதான் வள்ளுவர் வழி என்பதை காந்தியார் தமது வாழ்க்கையில் நிரூபித்திருக்கிறுர்" எனக் கூறினுர்.

பாரோர் போற்றும் பெரியார்கள்
செப்டம்பர் 5-ம் திகதி
'வளர்மதி'யில்
ஆரம்பமாகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவனின் ஆசை

பொங்கலுக்கு முதல் நாட் காலை.

'மாமா, பட்டாசு வாங்கித் தாறனெண்டீங்கள், மறக்காமல் பின்னேரம் வரும்போது...'

'ஓ... மறப்பேனா? பின்னேரம் கட்டாயம்!'

ஒரு சிறுவனுக்கும், மாமனுக்குமிடையே நடக்கிறது இந்தப் பேச்சு.

சிறுவனின் இதயத்திலே ஒரே குதூகலம்! அவனது வதனத்திலே உதயமாகின்றது ஒளிமயமானதொரு புன்னகை. சிந்தனைப் பறவை சிறகடித்துப் பறக்கின்றது. இப்பொழுது சிறுவன் இருப்பதே ஒரு புதிய பூமியிற் தான். அவனது கண்களுக்கு, எங்கே பார்த்தாலும் பட்டாசுகள் தான் தெரிகின்றன. உள்ளத்தின் எங்கோ ஒரு மூலையிலிருந்து எழுகின்ற பட்டாசு வெடிக்கும் ஓசையானது, செவிகளைச் சென்றடைந்து ஒலிப்பது போன்ற பிரமை அவனுக்கு!

கணநேரம், ஒருதினமாகக் கழிகின்றது. பட்டாசின் நினைவினாற் பசிகூட எட்டியும் பார்க்கவில்லை.

நண்பகல் கடந்து, மாலை நேரம் வந்தது. மாமனுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்துநிற்கிறான் சிறுவன்.

மாமனும் வந்தார்.

'மாமா, பட்டாசு...!'

'ஐயையோ, மறந்தல்லவோ விட்டேன்! பரவாயில்லை. உனக்காக வகை வகையான பட்சணங்கள் நிறைய வாங்கி வந்திருக்கிறன், சாப்பிடலாம்.'

சிறுவனுக்கோ 'படக்' கென்றது. அவனது 'கற்பனைக் கோட்டைகள்' சுக்குநூறாகின. பட்சணங்களில் எதுவுமே வேண்டாமென அடம்பிடித்தான். அவன் விரும்பியுண்ணும் பட்சணங்கள்கூட அன்று அவனுக்குக் கசந்தன.

அவன் கண்களிலிருந்து விழுந்து சிதறிய நீர்த்துளிகளை, மாமனாலும் அவதானிக்க முடிந்தது.

'அழாதே, மருமகனே. இரவைக்கு நிறையப் பட்டாசுகள் வாங்கிவந்து விடுகிறேன். சரிதானே?'

சிறுவன் தலையை அசைத்தான்.

சிறிது நேரத்தின் பின் அயல்வீட்டு நண்பன் வந்தான்.

'என்ன, பட்டாசுகள் கிடைச்சுதாடா?'

'இல்லை. மாமா மறந்து போனாராம். உனக்குக் கிடைச்சுதா?'

'பின்னே என்ன? மாமா எனக்கு ஏராளம் பட்டாசுகள் வாங்கிவந்தாரடா! என்னுடைய மாமா நல்ல மாமா!'

நண்பன் சொன்னதைக் கேட்டசிறுவன் 'அப்பிடியா?' என்று முகத்தைச் சுழித்துக் கொள்கிறான்.

'இரவைக்குப் பாரண்டா எனக்கு நிறையப் பட்டாசு வருகுதா இல்லையா எண்டு' என்றும் சொல்லி வைக்கிறான்.

இரவு வந்தது. மாமனும் வந்தார். ஆனால் அவருடன் பட்டாசுக்குப் பதில் விளையாட்டுப் பொம்மைகள் தான் வந்தன!

கண்விழித்துக் காத்திருந்த சிறுவனின் இதயத்திலோ இடி இடித்ததுபோல இருந்தது. பொம்மைகள் அவனைக் கவர்ந்ததாயில்லை. பொங்கி வந்த கோபமும் சோகமும் நெஞ்சைப் பிளந்துவெளியே கொப்பளித்தன.

பொம்மையைத் தூக்கிச் சுழற்றியெறிந்துவிட்டுவீரிட்டழுதான் சிறுவன்! பொம்மை உடைந்தே விட்டது!

'உன்னுடைய நன்மைக்குத்தான் நான் பட்டாசுகளை வாங்கி வரவில்லை. தற்செயலாகக் கையிலை வெடிச்சிட்டால்...? என்றாலும் கவலைப்படாதே கண்ணே. எப்பிடியும் விடியற்காலையில் வாங்கி வந்து விடுகிறன். இப்ப நீ போய்ப் படு'—சிறுவனைத் தேற்றுகிறார் மாமன்.

பொழுது புலர்ந்தது. சிறுவனும் துயில் நீங்கி எழுந்தான்.

'அதோ, அங்கை என்ன நடக்குது? என் ஆட்கள் கூட்டமாய்நிற்கினம்? மாமாவும் நிற்கிறார்...'—சிறுவனின் உள்ளத்திலே கேள்விக் குறி.

ஓடிச்சென்று பார்க்கிறான்... அங்கே—

தனது அயல்வீட்டு நண்பன் அழுதுகொண்டு நிற்பதைக் காணுகிறான். அவனது கையிலே இரத்தம்!

ஆம், அவனது கையிலே பட்டாசுவெடித்துவிட்டது!!

'மாவை ஆனந்தன்'

## என்னருமை மாமா!

—செ. குணரத்தினம்—

துள்ளி ஓடும் நதியினிலே
தூண்டில் போடும்மாமா—எனக்கு
வெள்ளியைப் போல் மீன்பிடித்து
விற்கத் தாங்க மாமா.

பள்ளிக் கூடம் போவதற்கு
பணம் எடுப்பேன்மாமா—விற்று
பல்லி மிட்டாய்கூட வாங்கிப்
பங்கு வைப்பேன் மாமா.

அண்ணாவிற்கும், அக்காவிற்கும்
ஆறு பல்லிமிட்டாய்—நீங்க
எண்ணம் போல் எடுத்திடலாம்
என்னருமை மாமா.

நல்ல மாமா எங்கமாமா
நான் விரும்பும்மாமா—எனக்கு
எல்லாம் வாங்கித் தந்திடுவார்
என்னருமை மாமா.



நியூயோர்க் நகரிலுள்ள தேசிய விளையாட்டுக் கழகத்தினால் ஆண்டு தோறும் வழங்கப்படும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான கேட்டயம் கடந்த ஆண்டு யேல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 19 வயது மாணவனுக்கும், 18 வயது நிரம்பிய கலிபோனியா உயிர் நிலைப் பள்ளி மாணவிக்கும் கிடைத்துள்ளது. தங்கள் வெற்றிக் கேட்டயங்களுடன் இருவரும் நிற்பதைப் படத்திற் காண்க.

# வளர்மதி வளர!

வளர்மதி உறுப்பினர்களாகி எங்கட்கு ஆர்வ மூட்டும் வகையில் தொடர்ந்து ஒரு வருடகாலமாக பல அறிவுக்குரிய சிறந்த கருத்துக்களை புதுமைகள் பாரீர் பாரினிலே என்ற தலைப்பின்கீழ் எழுதிவந்த அன்ரனி பெர்னண்டோவை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. வளர்மதியின் சிறப்புக்குக் காரணம் அன்ரனி பெர்னண்டோ ஒருவராகத் திகழ்த்ததில்ஆச்சரியமில்லை. அவ்வப்போது என்போன்ற மாணவ, மாணவிகளுக்கு ஏற்ற முறையில் நகைச்சுவை கதைகளை பலமுறைகள் வளர்மதியில் எழுதிவந்த நகைச்சுவை மன்னன் மாஸ்டர் சிவலிங்கத்தை நாங்கள் என்றென்றும் மறக்க மாட்டோம். இவர்களது பேனுத் திறமையை மீண்டும் மாமா ஏற்படுத்த வேண்டும்.

செங்கையாழியனின் ஆறுகால்மடம் போற்றத்தக்கது. இது போன்ற கதைகளையும், பல கருத்துக்களையும் அவ்வப்போது தகுந்த முறையில் அளித்து வந்த மாமா அவர்களுக்கும் வளர்மதிஉறுப்பினனாகிய நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

சென்ற 8-8-65ல் வளர்மதி வளர...! என்ற தலைப்பின் கீழ் செட்டிநகர் மதியரசு எழுதிய கடிதம் வரவேக்கத்தக்கது. ஆனால் பேனா நண்பர்கள் பகுதி ஒன்றை ஏற்படுத்தி உறுப்பினர்களை தொடர்புபடுத்துவது நல்லதாகும் என்று குறிப்பிடுகின்றார். ஆனால் அதை நான் மறுக்கின்றேன். அது வளர்மதிக்கு தேவையற்ற பகுதியாகும். அதை ஏற்படுத்துமிடத்தில் பல அறிவுக்குரிய விடையங்களை பிரசுரிப்பது சாலச்சிறந்ததாகும்.

வே. கிருஷ்ணபிள்ளை,
மட்டக்களப்பு.

## ஆச்சரியம் ஆனால் உண்மை

இதுவரை குறிக்கப்பட்ட ஒரு மனிதனின் மிகக் குறைந்த நிறை-வேல்ஸ் நாட்டு உருப்ளின் என்பவருடையது. 1754 மார்ச் மாதம்-அவர் இறந்த போது அவர் நிறை 12 பவுண்டுகள் தான். 17 வயது வரை வாழ்ந்த அவர் என்றுமே 17 பவுண்டுக்குமேல் இருந்ததில்லை.

மேரிசர் என்ற ஒரு மேலை நாட்டுப் பெண் ஒருவள் தன் 17 வயதில் மணம் புரிந்து கொண்டு ஆண்டுக்கு ஒரு குழந்தை வீதம்-24 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து 24 குழந்தைகள் பெற்றாள்.

ரோம் நகரத்தைச் சேர்ந்த உரிரோமஸ் என்பவர் 21இளம்-பெண்களை மணந்தார். அவருடைய 21-வது மனைவி அதற்கு முன் 20 ஆண்களை மணந்து கொண்டவளாம்.

இலண்டன் நகர் 'ஈவினிங் நியூஸ்' என்ற தினசரி பத்திரிகையே அதிகம் விற்பனையாகும் மாலைப் பத்திரிகையாகும். 1801ல் ஆரம்பிக்கப்பட்ட இது, 1950 வருடத்தில் நாள் ஒன்றுக்கு சராசரி 17,52,166 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டன.

தொகுப்பு: அரியாலையூர்,
இ. கிறிஸ்ரி.




## பரிசுப் போட்டி

### போட்டி 1.

விமர்சனப் போட்டி: 'ஆறுகால்மடம்' தொடர் கதையின் குறை நிறைகளைச் சுட்டிக் காட்டி மதிப்பிடுதல். இதில் கதை, எழுத்து, நடை, கதாபாத்திரங்கள், சம்பவங்கள், வருணனைகள் முதலியவற்றின் தன்மைகளை விபரிக்கலாம்.

### போட்டி 2

'ஆறுகால் மடம்' தொடர் கதையில் உமக்குப் பிடித்த கதாபாத்திரம் எது? ஏன் அக் கதாப் பாத்திரம் மட்டும் உமக்குப் பிடித்தது?

உங்கள் கவனத்திற்கு:

- ★ வளர்மதி வாசகர்கள் அனைவரும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.
- ★ இரு போட்டிகளிலும் ஒருவர் ஒரே பெயருடன் கலந்து கொள்ளலாம். ஆனால், 'புல்ஸ் காப்' தாளின் இரு பக்கங்களுக்கு மேல் எழுதக் கூடாது; தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதல் வேண்டும்.
- ★ ஒவ்வொரு போட்டிக்கும் மும்மூன்று புத்தகப் பரிசில்கள் உண்டு.
- ★ இப்போட்டிகள் பற்றி எத்தகைய கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. மாமாவின் தீர்ப்பே முடிவானது.
- ★ போட்டியிற் பங்கு பற்றுபவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி ஆகிய தகவல்களை தனியே ஒரு தாளில் எழுதி கட்டுரைகளுடன் இணைக்க வேண்டும்.
- ★ 31-8-65ம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கட்டுரைகள் பரிசிலனைக்கு எடுக்கப்பட மாட்டாது.
- ★ கீழேயுள்ள முகவரியைக் கத்தரித்து ஒட்டி அனுப்பும் கட்டுரைகள் மட்டுமே பரிசிலனைக்கு எடுக்கப்படும்.

'வளர்மதி மாமா'
மே/பா சுதந்திரன்
த. பெ. எண், 1183
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் இதயத்தில் இடம் பிடித்து விட்ட

## 3-வது வெற்றிகரமான வாரம்!

செண்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருமலை) லிபேர்டி (ஹட்டன்) லிபேர்டி (பதுளை) ஆனந்தா (கம்பளை)

'சாந்தி' தரமான படம்.

'செந்தூர் முருகன் கோவிலிலே' என்ற பாடல் உள்ளத்தைத் தொடுகிறது. முழுப் படமே உள்ளத்தைத் தொடுகிறது எனக் கூடக் கூறலாம்.

—தினகரன்

நல்ல கருத்துக்கினிய, கீதங்களும் அழகான காட்சிகளும் நிறைந்த இப்படம் காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பாகச் செல்கிறது.

மொத்தத்தில் சாந்தி மிகவும் நல்ல படம்.

—வீரகேசரி



நடிகர் திலகம்

சிவாஜி கணேசன்,
விஜயகுமாரி,
எஸ். எஸ். ராஜேந்திரன்,
தேவிகா, எம். ஆர். ராதா,
நாகையா, சகஸ்ரநாமம்,
சந்தியா, நாகேஷ், மனோரமா

நடித்த

ஏ. எல். எஸ். **சாந்தி**

பாடல்கள்: கண்ணதாசன்

பின்னணி: சுசிலா, ஸ்ரீநிவாஸ், சௌந்தரராஜன்

இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி

டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

**வயது வந்த—வயது வராத ஒவ்வொரு பெண்ணும் பார்க்க வேண்டிய படம்!**

## வெற்றிக்குமேல் வெற்றியீட்டும் 4வது வாரம்!

கிங்ஸ்லி பிளாஸா நவா

விஜயா [மட்டக்களப்பு] விஜிதா [அட்டன்] கல்யாணி [நாவலப்பிட்டி]

தீபொளி [நுவரெலியா] ஜோதி [கலஹா] ஜெமினி [ருகலை]

எம். ஜி. ராமச்சந்திரன்—சரோஜாதேவி
நம்பியார்—கண்ணாம்பா—ரங்கராவ்
அசோகன்—எம். ஆர். ராதா

மற்றும் பலர் தோன்றும்

தேவர் பிலிம்ஸ் அளிக்கும்

# நீதிக்குப் பின் பாசம்

மனிதனை மனிதன் அடக்கி ஒடுக்க நினைக்கும் போது எழும் உரிமைக் குரல்!



# நானும் மனிதன்தான்

ஆனந்தன்—சந்திரகாந்தா—அசோகன்—நாகேஷ் நடித்தது

**27ம் திகதி வெள்ளி முதல் ஆரம்பம்**

கெப்பிட்டல் (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) மொடேர்ன் (பண்டாரவளை) நியூசினிமா (குருநாகலை) வசந்தா (புசல்லாவ)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது ராஜா (யாழ்ப்பாணம்)

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால் (கொழும்பு) வின்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டக்களப்பு) நெல்சன் (திருகோணமலை)

ரீகல் (கொழும்பு) (வார நாட்களில் காலை 10-15க்கு மட்டும்)

- ★ இந்திய ஜனாதிபதியின் பரிசு பெற்ற பண்புச் சித்திரம்!
- ★ ஆந்திர சங்கீத நாடக ஆகடமி பரிசு பெற்ற அழகோவியம்!
- ★ வர்ணச் சித்திரங்களுள் முதற் பரிசு பெற்ற படம்!
- ★ சிறந்த படம் என்ற பரிசு பெற்ற படம்!
- ★ மொஸ்கோ திரைப்பட விழாவுக்கு அனுப்பப்பட்ட அற்புதச் சித்திரம்!

கல்யாண்குமார்-சரோஜாதேவி-நாகையா
கிரிஜா-புஷ்பவல்லி-உதயகுமார்

முதலியோர் நடித்த

விக்ரம் புரொடக்ஷன்ஸ்

# சிற்பியின் செல்வன்

நடனம் : ராஜ்ஸ்ரீ — ஜெயலலிதா





இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org